# திருமாவளவன்

[சோழர் குலக் கொழுந்து]

தமிழ்ப் பண்டிதர், இலந்தையடிக் கவுணிய
**இரா. சிவ. சாம்பசிவ சர்மா**
எழுதியது

941.01
சாம்ப
SL IPR

...கம்
... தமிழ்நாடு பதிப்பகம்
1948

சோழர் குல தீபம் — சுடர் 3

# திருமாவளவன்

## சோழர் குலக் கொழுந்து

தமிழ்ப்பண்டிதர், இலந்தையடிக் கவுணிய
**இரா. சிவ. சாம்பசிவ சர்மா**
எழுதியது

மூன்றும் பதிப்பு

34185

சுன்னாகம்
தனலக்குமி புத்தகசாலை

பதிப்புரிமை] 1948 [சதம் 75

K. Rajalakshmi

## பதிப்புரை

சென்னை சரஸ்வதி பிரசுராலயத்தாரால் வெளியிடப்பட்ட "**திருமாவளவன்**" என்னும் இந்நூலின் பதிப்புரிமை, மேற்படி பிரசுராலயச் சொந்தக்காரர் திரு. T. M. முனிசாமிநாயகர் அவர்களிடமிருந்து 12-5-38ல் எம்மால் கிரயத்துக்குப் பெற்றுக் கொள்ளப்பட்டது. இந்நூல், 1939-ம் ஆண்டுக் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்புக்கு இலக்கிய பாடமாக இலங்கை வித்தியா பகுதியாரால் நியமிக்கப்பட்டுள்ளது. முன் பதிப்பித்த பிரதிப்படியே இப்பதிப்பும் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம்,
20-6-38.

நா. பொன்னையா

## முதற் பதிப்பின் முன்னுரை

நன்னலம் மிக்க தமிழ்மொழியதனைப் பயிலுறும் மாணவர், இதிகாச, புராண, கற்பனை நீதிக்கதைகளைப் படித்துணர்வதோடு சரித்திரவாராய்ச்சிக்கு ஒத்த கதைகளையும் பயிறல் பெருநலமளிக்கும். அதனை நான் என் அநுபவத்தால் கண்டுணர்ந்தேன். ஆதலால் சரித்திரக் கதைகளைச் சுவைபடச் செந்தமிழ் மொழியில் எழுதிட முன்வந்தேன். 'சோழர் குல தீபம்' எனப் பெயர் புனைந்து வரிசையாகச் சில நூற்களை எழுதலானேன். அக்குல தீபத்தின் மூன்றாவது சுடராக விளங்கும் இச் சிறு நூல் சுவைபட வரையப்பட்டுள்ளது. மதுர மிக்க ஓசையுடைய நடையும், சொற்றொடர் நலனும், செஞ்சொலழகும் செறிந்து விளங்க இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஆதலின் இச்சிறு நூல் மாணவர்கட்குப் பெருநலம் அளிக்கும் என்பது திண்ணம். பிழைகாணிற் பொறுக்க.

பொதுமறையகம்,
சென்னை.

இங்ஙனம்,
இ[illegible] சிவ. சா. சர்மன்

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | மைந்தன் பிறப்பு ... ... ... | 1 |
| 2. | இளைஞன் இடுக்கண் ... ... | 11 |
| 3. | சிறை வெளிப்பாடு ... ... ... | 20 |
| 4. | களிறு கொணர்ந்த காவலன் .... ... | 26 |
| 5. | திருமாவளவன் ... ... ... | 36 |
| 6. | பூம்புகார் ... ... ... | 42 |
| 7. | சேட்சென்னி மைந்தரின் சூழ்ச்சி ... | 52 |
| 8. | திருமாவளவன் வெற்றி மேம்பாடு .... | 64 |
| 9. | ஆதிமந்தியார் ... ... ... | 79 |
| 10. | அரசியல் ... ... ... | 93 |
| 11. | தமிழ்ப்பற்று .... ... ... | 98 |
| 12. | திருமாவளவன் காலம், மதம், குணாதிசயங்கள் ... .... | 104 |
| | அரும்பத அகராதி ... ... | 108 |


# திருமாவளவன்

## 1. மைந்தன் பிறப்பு

**ம**ங்கலத் தமிழ்மொழி வழங்கும் நாடுகளுள் மிகச் சிறந்தனவென்று சான்றோராற் கொண்டாடப்பட்டவை சேர சோழ பாண்டிய நாடுகள் என்பனவாம். அவற்றுள் நடுநாயகமாய் நிற்கும் சீர்மை பெற்றது தீம்புனல் நாடு. சோழர் குலக் கொடியாம் பொன்னிநதி பொய்யா தளித்தலால் செழுமை பெற்றதும் அந்நாடே. குடகுமலையில் உற்பத்தியாகிச் சோழ நன்னாட்டிற் பல் கால்களாய்ப் பரந்து பாய்ந்து பொன்கொழிக்கும் தீம் புனல் மிகுந்த காவிரியாறு பாவலர் பல்லோராற் புகழ்ந்துரைக்கப்படும் மேன்மை பெற்றது. அதன் கிளைநதிகள் அந்நாட்டின் சமவெளிப் பிரதேசங்களிற் பரந்து பாய்ந்து வளப்பத்தை மிகுதிப் படுத்துகின்றன. 'கங்கையிற் புனிதமாகிய காவிரி' என மாலின் தொண்டர் ஒருவர் மகிழ்ந்து கூறும் மாண்பு பெற்ற அக் காவிரிநதி, அந்நாட்டின் மேன்மைக்கும் பொருளாதார நிலைமைக்கும் காரணமாயிருக்கின்றது மற்றும் தன் இருகரை மருங்கினும் சிவத்தலங்களும் விட்டுணுத் தலங்களும் நிறைந்திருக்கும் பெருமை பெற்றது.

செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளங்க உதித்துச் சோழ நன்னாட்டினை நெடுங்காலமாக ஆட்சி புரிந்து வந்தோர் சோழர்கள் எனப்படுவார்.

அன்னார், 'அன்புடையார் என்பும் பிறர்க்குரியர்' என்னும் பொய்யில்புலவன் பொருளுரைக்கேற்ப நல்லுடல் அரிந்து அளித்து ஒரு புருவின் உயிரைக் காத்த மாட்சியைப்பெற்ற சிபி என்னும் சக்கரவர்த்தியின் மரபினில் உதித்தவராவர். சோழர்கள் இயல்பிலேயே அறநெறியும், அரசியல்நெறியும் வழுவாத வேந்தர்கள். கன்று இறக்க ஆ படு துயர் கண்டு ஆற்றாது தேர்க்காலில் தன்னொரு மகனைக் கிடத்தி அவன் மார்புமீது தேரூர்ந்த மன்னனும் இந் நன்னாட்டவனே.

'மேதக்க சோழ வளநாடு சோறுடைத்து' என்று நரைமூதாட்டி நவின்ற நல்லுரை நானிலந் தன்னில் உணராதார் யாரே! இயல்பாக மிக்க வளம்பெற்ற அந் நன்னாட்டை ஈகையின் பிறப்பிடம் என்னலாம். வரையாது அளிக்கும் வள்ளல்கள் பலரும் அந்நாட்டில் மல்கி உறைந்தனர். அந்நாடு வளமைபெற்றதாதலின் அந்நாட்டரசற்கும் 'வளவன்' என்னும் சீர்பெறும் சிறப்புப் பெயர் வழங்கலாயிற்று. மிகப் பழைய அந் நன்னாட்டிற் சோழர்கள் எக்காலமுதல் குடியேறி ஆண்டுவந்தனர் என்பது சரித்திர ஆராய்ச்சிக்காரர்களாலும் எடுத்தியம்பும் திறத்ததன்று. எனினும் நெடுங் காலமாகச் சோழர்கள் அந்நாட்டை ஆண்டுவந்தனர் என்பதைச் சரித்திர ஆராய்ச்சியாளர் ஒப்புக்கொள்ளுகின்றனர். அத்தகைய சோழர்கள் சரித்திரங்களைச் செவ்வையாக உணரத்தகுந்த நூல்களின் சாதனங்கள் இல்லையென்றாலும் இக்காலத்திற் கிடைத்துள்ள சிலாசாசன ஆராய்ச்சியாலும்,



சில நூல்களின் துணையாலும் ஒருவாறு உணரலாகும். பாரத காலத்திற்கு எத்துணையோ ஆயிரக் கணக்கான வருடங்கட்கு முந்தியது இராமாயண காலம். அவ்விராமாயணத்திற் சுக்கிரீவன் வானரச் சேனைகளை நோக்கித் தென் தேசத்திற் சோழ பாண்டிய கேரள தேசங்களிற் சென்று சீதாபிராட்டியாரைத் தேடும்படி கட்டளையிட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆதலின் சோழர்கள் இராமாயண காலத்திற்கு முன்னமேயே சோழ நாட்டை ஆண்டுவந்தனர் என்பதும் உணரற்பாலதாம்.

இக்காலத்திற் காணப்படும் இலக்கியங்களில் மிகப் பழைய சோழவரசர்களாகப் போற்றிக் கூறப்படுவோர் பெருநற்கிள்ளி, கரிகாலன், கோச்செங்கணான் என்போராவர். இவர்கள் சிபியின் வமிசத்தவர்கள். ஆதலால் செம்பியர்கள் என்றழைக்கப்பட்டனர். இம் மூவருள் சோழன் கரிகாலன் சீர்மிகப்படைத்த செங்கோல் மன்னனாய்த் தோன்றினான்.

சோழ நன்னாட்டிற்குத் தலைநகரங்கள் பல இருந்தன. அவை, கருவூர், உறையூர், திருவாரூர், தஞ்சை, காவிரிப்பூம்பட்டினம் என்பனவாம். இவற்றுள் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு உறையூரைத் தலைநகரமாகக்கொண்டு சோழ நன்னாட்டை இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்னும் அரசன் அரசாண்டுவந்தான். அவனுக்குச் சேட்சென்னி என்றும், இளஞ்சேட்சென்னி என்றும் இரு மைந்தர்கள் இருந்தனர். இரு அரச

குமாரர்களும் கலைகள் பல கற்று அரசாளுரிமை பெறும் பருவத்தை யடைந்தனர். பெருநற்கிள்ளி முதுமை அடைந்ததை அறிந்து தன் மைந்தரில் மூத்தோனுக்கு அரசாளுரிமையை அளித்து, முடி கவித்துச் சின்னாள் வாழ்ந்திருந்து விண்ணவருக்கு விருந்தானன். மூத்தோனாகிய சேட்சென்னி தன் குலத்திற்கேற்ப உருவில் திருவினையொத்த பெண் ஒருத்தியை மணந்துகொண்டு சோழநன்னாட்டைக் கோனெறி கோடாது அரசாண்டு வந்தனன். இளஞ்சேட்சென்னி மூத்தோனுக்கு உற்ற துணையாக இருந்து உதவிகள் பல புரிந்து வந்தான்.

இளையோனாகிய இளஞ்சேட்சென்னி வில், வாள், வேல் பயிற்சியிலும், யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவற்றிலும் மிகச் சிறந்து விளங்கினன். அவன் போர்த்தொழிலை நன்கு கற்றிருந்தான். மற்றும் போர்வீரர்களுக்கு ஊக்கத்தை ஊட்டி, ஆக்கத்தைக் காட்டி மறப்பண்பை மிகுவித்து அஞ்சா நெஞ்சோடு அமர்புரியச் செய்வதில் அவன் வெகு சமர்த்தன். அக்காலத்தில் இளஞ்சேட்சென்னியின் பெயரைக் கேட்டோர் எல்லோரும் மெய்ந் நடுங்குவர் என்றால், அவன் வலிமையின் சிறப்பை விளம்பவும் வேண்டுமோ? இளஞ்சேட்சென்னி படையெடுத்துச் சென்று பல்வேறு அரசர்களுடன போர்புரிந்து அவர்கள் நாடுகளைக் கைப்பற்றி மிக்க புகழுடன் விளங்கினன். அவனுக்கு உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி என்னும் சிறப்புப் பெயரும் உண்டாயிற்று. பெருநற்கிள்ளியின் காலத்தைக் காட்டிலும் சேட்சென்னி



யின் காலத்திற் சோழநாடு விசாலப்பட்டது. அதற்குக் காரணம் இளஞ்சேட்சென்னியின் தோள் வலியே என்பதைக் கூறவும் வேண்டுமோ! சேட்சென்னி தன் தம்பியின் ஆற்றலையும் அறிவையும் அறிந்து அகமிக மகிழ்ந்தான். அரசுரிமையை ஏற்று நாட்டை ஆளும் நலமும் அவனுக்குண்டு என்பதை உணர்ந்து அவனை அரசாளும்படி விடுத்தான். முன்னேருரைத்த மொழிக்கிணங்கி இளஞ்சேட்சென்னி சோழநாட்டை ஆண்டுவந்தான்.

ஆற்றல் மிகப்படைத்த இளஞ்சேட்சென்னி கொண்டல் நிகர்க்கும் வண்மையுடையோன். அவன் ஏழைகட்கு எவ்வாற்றாலும் இன்னல் அடைந்திடா வகையறிந்து உதவிபுரிந்துவந்தனன். பயிர்த்தொழில் குன்றிடா வகையறிந்து வேளாண் மாந்தருக்கு உதவிகள் பல புரிந்துவந்தான். சிற்றரசர்களிடத்தும் குடிமக்களிடத்தும் காலந் தவறாது தான் அடையவேண்டிய பகுதிப்பணத்தையும் வரிப்பணத்தையும் வசூலித்து வந்தான். தன் நாட்டிற் பலவேறு தேசத்தினின்றும் போந்து வாணிபம் பேணும் வணிகமக்களுக்கு உதவிகள் பலவும் புரிந்துவந்தனன். சுருங்கக் கூறுமிடத்து இளஞ்சேட்சென்னி குடிமக்களின் நன்மையை நாடி அவர்க்ட்கு உதவி புரிதலையே குறிக்கோளாகக்கொண்டு உழைத்து வந்தனன். அவன் நாட்டிற் கல்வியும் மேம்பாடுற்றது.

தொல்பெருங் குலமாய வேளாளர் குலத்தோர் தமிழ் நாட்டில் பண்டைக் காலத்தில் சிறப்புற்று விளங்கினர். வேளாண் மாந்தர் என்போர் உப

காரம் செய்தலையே தம் முதற் கடமையாகக் கொண்டு ஒழுகுபவர்கள். அன்னார் பழங்குடித் தமிழ் மக்கள். அன்னாரை, அகத்தியமியற்றி அருந் தமிழ் பெருக்கிய குறுமுனிவர் வடநாட்டினின்றும் கொணர்ந்தார் என்று கூறுவாருமுண்டு. அது ஒருவாற்றானும் பொருந்தாதாகும். அகத்தியர் தென் திசைக்குப் போந்த காலத்திற்கு எத்துணையோ காலத்திற்கு முன்பே தமிழ் நாட்டில் வேளாண் குலத்தினர் இருந்தனர். ஆதலின் வேளாளர் தொல்குடித் தமிழ்மக்களே என்பது விளங்கும். அத்தகைய வேளாளர்கள் அரசர்களால் நன்கு மதிக்கப்பட்டுச் சீரும் சிறப்பும் பெற்று விளங்கினர். தமிழரசர்கள் வேளாளர் குலத்தில் பெண் கொடுப்பதும் பெண் கொள்வதும் உண்டு. சோழநாட்டில் அழுந்தூர் என்னும் ஊரில் **இரும்பிடர்த்தலையார்** என்னும் பைந்தமிழ்ப் பாவலர் ஒருவர் இருந்தார். அவர் உழுவித்து உண்ணும் வேளாண் வகுப்பைச் சேர்ந்தவர்; தமிழ் மொழியில் இலக்கண இலக்கியங்களை நன்கு பயின்றவர்; ஒழுக்கத்திற் சிறந்தவர். அத்தகைய இரும்பிடர்த்தலையாருக்கு அழகிற்கு உரு என்று சொல்லும்படியாக உருவில் திருவினை ஒத்த உடன்பிறந்தாள் ஒருத்தி இருந்தனள். அந் நங்கையின் நல்லறிவையும் நல்லெழிலையும் கண்டுகேட்டு இளஞ்சேட்சென்னி அவளை மணக்க விழைந்தான். அவன் பெரியார்கள் சிலரை, அந்நங்கையை மணம்பேசி வருமாறு தூதனுப்பினான். அவ்வாறே பெரியோர்கள் சிலர் இரும்பிடர்த்தலையாரை யடைந்து மன்னன் விழைந்ததை மகிழ்வொடு கூறினர். இரும்



பிடர்த்தலையார் தம் தங்கையை இளஞ்சேட்சென்னிக்கு மணஞ்செய்து வைப்பதாக ஒப்புக்கொண்டார். நன்னாளும் குறிக்கப்பட்டது. உறையூர் எழில்பெறு இந்திரன் நகரமோ என ஐயுறும் வண்ணம் அலங்கரிக்கப்பட்டது. அந் நன்னாள் நணுகுதலும் இளஞ்சேட்சென்னி இரும்பிடர்த்தலையாரின் தங்கையை மணந்துகொண்டான். அன்னாளும் இளஞ்சேட்சென்னியின் குண நலன்களை நன்குணர்ந்து அவனுக்கொப்ப ஒழுகி இல்லறம் நடத்திவந்தாள். ஆண்டுகள் சில கடந்தன.

பெறுதற்கரிய பேறுகளுள் மிகச் சிறந்தது மக்கட்பேறு. அதனை அடையாதார் இல்லற வாழ்க்கையின் பயனை அடையாதாரே. ஆதலின் இளஞ்சேட்சென்னி தன் குலத்திற்கொத்த அறிவு, ஆற்றல், ஒழுக்கம் முதலியவை சிறந்து விளங்கத்தக்க ஒரு மைந்தனைத் தந்தருளுமாறு நாளும் இறைவனை வழிபட்டு வந்தான். அவன் விரும்பியவாறே கடவுள் அருளும் கைகூடியதால் அவன் மனைவி கருக்கொண்டாள். தன் மனைவி வயிறு வாய்த்திருத்தலைக் கேட்டு இளஞ்சேட்சென்னி மனமிக மகிழ்ந்தான். அதேகாலத்தில் சேட்சென்னியின் மனைவியும் கருப்பமுற்றிருந்தாள். மாதங்கள் கடந்தன. ஒருநாள் நிமித்திகன் ஒருவன் அரண்மனையை அடைந்தான். அவனைச் சேட்சென்னியும் இளஞ்சேட்சென்னியும் அன்புடன் வரவேற்று உபசரித்தனர். நிமித்திகன் அவர்களை நோக்கி, 'மன்னவர்களே! நீவிர் எந்நாளும் இன்பமே எய்தி வாழ்வீராகுக. உம் குலமும், குலத்துட் பிறந்தார் செயல்

களும், அச்செயல்களின் அருமை பெருமையும் அறைந்திடற் கரியதாகும். அன்னார் புகழே நில உலகெங்கும் பரந்துள்ளது. அன்னார் குடிவழிவந்த நும் பெருமையும் அத்தகையதே. அன்னார் கோயில்கள் பல கட்டினர்; குளங்கள் பல வெட்டினர்; சோலைகள் பல வைத்தனர்; சாலைகள் பல உண்டாக்கினர்; தமிழ்ப் பயிரைத் தழைக்க வளர்த்தனர்; தமிழ்ப் புலவர்கட்குத் தகுதியறிந்து பொருள்வழங்கினர். அத்தகைய பெருமைவாய்ந்த முடிசூடா மன்னர் மரபில்வந்த நும் பெருமையை மிக்க மேன்மை யுடையதென்று மீக் கூறுதல் மிகையேயாம். ஆதலின், வேந்தர்களே! கோல் நெறி கோடாது ஆட்சி புரிந்து மாட்சியுற்று மேன்மை எய்துவீராக' எனப்போற்றி நின்றனன்.

தங்கள் குலப் பெருமையை விளக்கிக் கூறிய நிமித்திகனை நோக்கி, "ஐயா! வழிவழியாகத் தொல்புகழ் கொண்ட பழங்குடியான சோழர் குடியை மிக்க புகழுடன் விளங்கவைக்கும் மைந்தர்கள் எங்கட்குப் பிறப்பார்களா?" என்று அரசர் இருவரும் கேட்டனர். அவர்க்கு நிமித்திகன், "மன்னர்களே, உங்கள் இருவருக்கும் ஆண்குழந்தைகளே பிறக்கும். ஆயினும் நமது இராசமாதேவியின் திருவயிற்றினுள்ள குழந்தை சிறிது காலந் தாழ்த்துப் பிறக்கின் இத்தரணி முழுதும் ஆளும் தரணிபனாவன்" என்று கூறினான். அந்நிலையில் சேட்சென்னியும் இளஞ்சேட்சென்னியும் தம்முள் யாருக்கு அத்தகைய மகன் வாய்ப்பானோ எனப் பலவிதத் தோற்றங்களை மனதிற் கொண்ட



வர்களாய் அமர்ந்திருந்தனர். அந்நிலையில் ஏவலாளன் ஒருவன் ஓடிவந்து சேட்சென்னியின் மனைவி காமரு குழவி யொன் றீன்றாள் எனக்கூறி நின்றனன். சேட்சென்னியோ மனமுடைந்தவனாய், "என்னே! இன்னும் சற்றுக் காலந் தாழ்த்துப் பிறக்கினன்றோ நம் தனயன் தரணி யாளுவன்? இளையோன் மைந்தனன்றோ இனித் தரணியாளுபவனாய்ப் பிறப்பன்? நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கின்றதே? ஆவது ஆகுங்காலத் தாவதும், அழிந்து சிந்திப்போவது அயலே நின்று போற்றினும் போதல் திண்ணம். இதற்கு நாம் வருந்திப் பயன் என்? நடப்பது நடந்தே தீரும்" என மனமுடைந்தான். இளஞ்சேட்சென்னியின் தேவியோ வயவுநோய் பொறுக்கலாற்றாளாயினும் தனக்குப் பிறக்கும் மைந்தன் தரணி முழுவதும் ஆளும் தகைமை எய்தல் வேண்டுமென மனத்தில் உன்னி ஆற்றி இருந்தனள். நாழிகை செல்லச் செல்ல, வயவுநோய் மிகத் திரிபுவனப் பெருந்தேவி தாங்கி நின்றாள். நல் ஓரையும் நணுகிற்று. பாற் கடலில் வெண்மதியம் தோன்றிற்றால் அன்ன காமரு மகவு ஒன்றைத் திரிபுவனப் பெருந்தேவி பெற்றெடுத்தாள். இளஞ்சேட்சென்னி அடைந்த இன்பத்திற்கோ அளவில்லை. அன்னையும் தந்தையும் தம் அருமைத் திருமகனைக் கண்ணும் மணியுமெனக் காத்துவருவாராயினர். குழந்தை இளம் பிறை ஒப்பவும், சான்றோர் நட்பு வளர்வது போலவும் வளர்ந்து வந்தது. சேட்சென்னியோ துயர்க்கடலில் ஆழ்ந்திருந்தான். அவன் மனைவி தன் மைந்தன் நன் முகூர்த்தத்திற் பிறக்கவில்லையே

என்று பெரிதும் வருந்தினாள். சேட்சென்னி அடைந்த துன்பம் அவன் மனத்தில் எழுந்த பொறாமைக்குக் காரணமாயிற்று. நாளடைவில் அப்பொறாமை வறண்ட புல்லிற் பற்றிய தீப்போற் கடிது வளர்ந்து பகைமையைத் தோற்றுவித்தது. பகைமை முதிர்ச்சியை யடைந்ததால் சேட்சென்னி, இளஞ்சேட்சென்னியையும் அவன் மைந்தனையும் வெறுத்தான். பிறர் ஆக்கங் கண்டு வெறுத்தலும், பகைகொள்ளலும், அழுக்காறு எய்துதலும் இவ்வுலகில் குணநலன் இல்லாற்கு இயல்பேயன்றோ?

## 2. இளைஞன் இடுக்கண்

இளஞ்சேட்சென்னி, தன் மைந்தன் நாளும் மேலோங்கி வளர்ந்து வருதல் கண்டு உள்ளங் களிகொண்டான். அவன் நாளும் பொலிவுற்று வளர்ந்து வருதல் தாய் தந்தையர்கட்கு அக மகிழ்ச்சியை அளித்தது. மைந்தன் கல்வி கற்கும் பருவத்தை எய்துதலும் இளஞ்சேட்சென்னி, மைந்தன் தக்க பருவத்தை அடைந்திருத்தலை அறிந்து தக்க ஆசிரியரிடம் ஒப்புவித்தான். அரசகுமாரன் அரசர்க்குரிய பல கலைகளையும் கற்றுத் தேர்ச்சி பெற்றனன். மற்றும் யானையேற்றம், குதிரையேற்றம் முதலியவற்றிலும் வில், வாள், வேல் பயிற்சியிலும் முற்றக் கற்றுத் தேர்ச்சி பெற்றனன் அவன் சுந்தர மேனியும் உரம் பெற்று விளங்கிற்று. கண்டாரனைவரும் வியப்புக் கொளும்படி அரசிளங்குமரன் அரியேறன்னவாக வளர்ந்து வந்தனன். தாயும் தந்தையும் மைந்தன் திருமேனிப் பொலிவுகண்டு மகிழ்பூத்தனர். சேட்சென்னியோ நாளும் பொறாமைப் பேயால் கவரப்பட்டு மனக்களிப்பின்றி முகப் பொலிவு குன்றி விளங்கினன்.

யானைப் பிடரிமிசை அமர்ந்து பவனிவரும் அரசர்களேயாயினும் தமக்குள்ள வாழ்நாள் குறைந்தால் இத்தரணிமிசை வீழ்வர் அன்றோ? நல்லனென்றும் கருதாது செல்வனென்றும் ஏழை என்றும் நோக்காது நடு நிலைமை உடையவனாய்க் காலங் கருதியிருந்து நாளும் வர நணுகி ஒருவ

ரும் அறியா நிலையில் உயிர் கவர்ந்து செல்லும் கூற்றுவன் இளஞ்சேட்சென்னியின் உயிரைக் கவர்ந்துகொண்டனன். தாயும் தனயனும் பட்ட துன்பத்தை அளவிட யாரே வல்லார். சோழ நாட்டுக் குடிகளனைவரும் ஆற்றொணாத் துயரத்திற் காளாயினர். அந்நாட்டில் இளஞ்சேட்சென்னியின் பிரிவை எண்ணி வருந்தாதார் இல்லை. அந்தோ! இளஞ்சேட்சென்னி இறந்தது அரசிளங்குமரன் இன்னலுறும் காலம் போந்தமைக்கு அறிகுறியேயோ!

சேட்சென்னி ஒருவனே அப்பெருநாட்டில் இளஞ்சேட்சென்னிக்காக வருந்தாதவன். இளஞ்சேட்சென்னி இறந்தது சேட்சென்னிக்குப் பெருநலமளித்தது. அவன் இளஞ்சேட்சென்னியின் புதல்வனை முற்றிலும் வெறுத்தான். சேட்சென்னிக்கு மைந்தர்கள் ஒன்பதின்மர் பிறந்தனர். பிள்ளைப்பேறின்றி வருந்திய வரசன் ஒன்பதின்மரைப் பெற்றதும் மன மாறுதலை யடைந்தான். தன் மைந்தருக்கு எவ்விதத்திலேனும் அரசாட்சி உரிமையை எய்துவிக்கவேண்டும் என்னும் பேரவா அவனைப் பிடர்பிடித்துந்தியது. என்னே இவ்வுலகின் கொடுமை! தன் தம்பியின் புதல்வன் தனக்கும் புதல்வனே என்பதையும் ஓராது இளஞ்சேட்சென்னியின் புதல்வனைக் கொல்லவும் அவன் கருதியிருந்தனன். ஆயினும் அவன் காலமும் இடனும் கருதியிருந்தான். அவனுக்குப் பகைமை பாராட்டுதலினால் தன் கருமம் நிறைவுறாதென்று கருத்திற் றோன்றிற்று. ஆதலின் கரவுடை



மனத்தினனாய் மிக்க அன்பும் அருளும் காட்டுவான்போல் இளஞ்சேட்சென்னியின் மைந்தனிடம் ஒழுகிவரலாயினன். வெள்ளைக்குக் கள்ளச்சிந்தை இல்லையன்றோ! ஆதலின் இளஞ்சேட்சென்னியின் புதல்வன் தந்தையிடம் முற்றும் நம்பிக்கைவைத்துச் சொற்படி அவன் நடந்துவந்தனன். நாட்கள் செல்லச் செல்லச் சேட்சென்னி தம்பி புதல்வனைக் கொல்லத்தக்க சூழ்ச்சிகளை ஆராய்ந்து செய்து வந்தான்.

இளஞ்சேட்சென்னி இறக்கவும் அரசனாய் வருதற்கு அவன் புதல்வனே உரிமை உடையான் எனினும், இளைஞனாயிருந்தமையின் சேட்சென்னியே ஆண்டு வந்தனன். இளஞ்சேட்சென்னியின் மைத்துனரும், அரசிளங் குமரனின் தாய் மாமனுமான இரும்பிடர்த்தலையார் என்னும் புலவர்* தன் தங்கையின் செல்வப் புதல்வனைச் சேட்சென்னி கொல்ல நினைந்து சூழ்ச்சிகள் பல செய்துகொண்டிருந்தான் என்பதை எவ்வாறோ அறிந்துகொண்டார். அவர் தாம் தங்கையோடிருத்தலே தகுதியென்று கருதித் தங்கை வீட்டை யடைந்து அவ்விடத்தே வதிந்து வருவாராயினர். சேட்சென்னி தன் கொடிய தோழர்களோடு ஆலோசித்துப் பிறர் அறியொணா நிலையில் அரசிளங்குமரனைக் கொன்றுவிடுவதெனத் தீர்மானித்திருந்தனன். அந்தோ! அவன் கொண்ட கருத்து எளிதில் நிறைவுறாதபடி இரும்பிடர்த்தலையாரன்றோ அக் குமாரனைக் காவல் செய்து வருகின்றார்! இரும்பிடர்த்தலையார் அங்கிருப்பது சேட்சென்னிக்கு இடையூறாயிருந்தது. தன் சூழ்ச்சிக்

குத் தடையாய் நிற்பவர் அவர் எனத் தெரிந்து அவன் அவரிடத்தும் பகைமை பாராட்டினன். அதனையுணர்ந்த இரும்பிடர்த்தலையார் அவனுக்குப் பன்முறையும் நன்மொழியைச் செவியறிவுறுத்தியும் அவை யாவும் செவிடன் காதில் ஊதிய சங்கேயாயின.

ஒருநாள் இரும்பிடர்த்தலையார் வெளியே போயிருந்தார். சேட்சென்னி அதனை நன்குணர்ந்தான். அவர் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் தன் கொடிய நண்பர்களை யழைத்துத் தம்பியின் புதல்வனைக் கொல்லத் தக்க சூழ்ச்சி யாதென வினவினன். அக்கொடியோர்கள் அவனிருக்கு மாளிகையில் தீயிடுதலே தகுதி யென்றனர். அவனும் அக் கயவர் மொழிக் கிணங்கினன். அந்தோ! அக்கொடியோன் நண்பர் அன்றிரவு குழுமி, கருணை சற்றின்றி இரும்பிடர்த்தலையாரின் மருகனும் தங்கையும் இருந்த மாளிகையில் தீயிட்டனர். தீயும் நாற்புறமும் சுற்றிப் பரந்தெரியலாயிற்று. இளஞ்சேட்சென்னியின் மனைவி செய்வது இன்னதென்றறியாது திகைத்து அங்குமிங்குமோடி அலமந்து எங்கும் உய்வழிகாணாது ஏங்கித் தரையில் வீழ்ந்து மூர்ச்சையுற்றனள். கொடிய தீ அவளைச் சூழ்ந்து பற்றி எரித்தது. மைந்தனோ அங்குமிங்கும் ஓடி அலமந்து தீயின் வெப்பம் தாக்குறா விடங்களை அடைந்து மெய் விதிர்த்துக் கண்ணீர் பெருக்கித் திகைப்புற்று நின்றனன். மாளிகையைத் தீயும் இலங்கை நகரை எரித்ததுபோலவும், காண்டவ வனத்தை



எரித்தது போலவும் கடுகி வளர்ந்து எரிக்கலாயிற்று. திக்கற்றவர்கட்குத் தெய்வமே துணையன்றோ? அந்நிலையில் வெளியே சென்றிருந்த இரும்பிடர்த்தலையார் அங்கு வந்தனர். மாளிகை தீப்பற்றி இருத்தலைக்கண்டு மருள் கொண்டனர்; தங்கை என்னாயினளோ, மருகன் என்னாயினனோ என்று மயங்கி நின்றனர்; பரபரப்புடன் மாளிகையில் பல்வேறிடங்களிலும் புகுந்து பார்த்தனர்; ஓரிடத்தே தன் மருகன் உய்வகை காணாது ஏங்கித் திகைத்து நிற்றலைக் கண்டார்; அவனது மதி முகம் வாடிய மூளரிபோல் வதங்கியிருப்பதைக் கண்டு துக்கமேலீட்டால் 'ஓ' வென்று அலறினர்; முன்னின்ற தீ விரைந்து தழல் விட்டெரிதலையும் நோக்காது, தம் ஆருயிரையும் கருதாது தீக்குளிப்பார்போல எரியுந் தழலுட் புகுந்தார். விரைந்து தழலுட் புகுந்த இரும்பிடர்த்தலையார் இமைக்குமுன் மருகனையடைந்து, ஆகமுறத் தழுவி யணைத்தெடுத்துக்கொண்டு வேகமுற வெளிப்பட்டு வந்தார். வருங்கால் மருகனின் கால்களில் தழல்பட்டுப் புண்ணாயிற்று. இரும்பிடர்த்தலையார் சிறுபுண்ணை ஆற்றிக்கொள்ளலாம் என்னும் பெருந்துணிவால் உயிர் காப்பதொன்றையே ஒரு பெருங் கருத்தாகக்கொண்டு மருகனைத் தூக்கி மார்போடணைத்துக்கொண்டு தழலிடைப் புகுந்து வெளியே வந்தார்.

காலம் கொடியது. தீவினை விளையும் காலம் வரின் துன்பங்கள் ஒன்றின்மேல் ஒன்றாகத் தொடர்ந்து வருவது உண்மையே யன்றோ? மற்

றும் ஊழ்வினையினால் உறும் தீங்கை யாவரே தடுக்க வல்லார்? அதனை அறிவார்தாம் யார்? 'விதியினால் விளையும் விளைவை யார் அறிவார்?' என்றும், 'விலக்கரிதாய விதியினால் விளையும் விளைவை யார் அறிவார்?' என்றும், 'செயற்கை வெவ்வேறு ஆய நாள் அவ்விதியை வெல்லும் வகையை யார் வல்லாரே' என்றும், 'ஊழ்வினை உறுத்து வந்தூட்டும்' என்பதும் உலகில் உணராதார் யாரே? சேட்சென்னியின் பகைவர்கள் 'மாளிகையின் மதிற்புறத்தே யாரேனும் தப்பிப் பிழைத்து வருவரோ; வருவாராயின் கொல்லுவேம்' எனக் கருதி மறைந்து ஒளித்திருந்தனர். அவர்கள் அவ்வாறு மறைந்திருத்தலை இரும்பிடர்த்தலையார் எங்ஙனம் அறிவர்! அந்தோ! தீக்குத் தப்பிப் பிழைத்தோமென்று அகமிக மகிழ்ந்து அரும்பெறல் மருகனை அணைத்துக் கொண்டு விரைந்தோடிச் செல்லும் இரும்பிடர்த்தலையாரை வெறுந்தடியர் தடுத்தும் பிடித்துக் கொண்டனர். அவர்கள் அம்மைந்தனைப் பெறுதற் பொருட்டு அவரோடு பெரிதும் மலைந்தனர். இரும்பிடர்த்தலையார் தம்மால் இயன்றமட்டும் நல்லுரை பகர்ந்து உடல்வலிகொண்டு தடுத்தும் மருகனைக் காக்க முயன்றனர். என் செய்யினும் என்னே! கல்லாதவரிடத்து இவர் நல்லுரை என் பயன் தரும்! இவரோ ஒருவர்; பகைவரோ பலர். கள்ளத்தன்மை பொருந்திய பகைவரிடத்து இவர் மனக்கனிவு காண்பது எவ்வாறு? மூடர்களான அவர்கள் இவரோடு மலைந்து மைந்தனைப் பறித்து ஈர்த்துக்கொண்டு மறைந்து



சென்றனர். இரும்பிடர்த்தலையார் ஏக்கங்கொண்டு 'கன்று பிரி காராவின் துயரனைய' துயரினைத் தாங்கி, மணியிழந்த நாகம்போல் மனமொடிந்து செயலழிந்து கண்களில் நீர்வாரக் கவலையுற்றிருந்தனர். இப்பால், பகைவர் இளஞ் சிறு மைந்தனை இளஞ்சேட்சென்னியின் புதல்வனைக் கண்டு புதல்வனைக் கைப்பிடியாய்ப் பிடித்துச் சென்று சேட்சென்னியின் முன் விட்டனர். கதியற்றுத் தன் முன்னிற்கும் தம்பியின் புதல்வனைக் கண்டு சிறிதும் இரக்கங் கொள்ளானாய்ச் சேட்சென்னி அவனைச் சிறையிலிடுமாறு ஏவலாளர்கட்குக் கட்டளை யிட்டனன். தன் சூழ்ச்சியை முற்றுவித்துக் கொடுத்த நண்பர்களுக்குச் சேட்சென்னி பொன்னும் மணியும் துகிலும் பட்டும் வேண்டிய அளவு வரையாது கொடுத்து விருந்தும் இட்டான். இளஞ்சேட்சென்னியின் புதல்வன் சிறையிடப்பட்ட பின்னரே சேட்சென்னியின் மனம் சாந்தமடைந்தது.

சிறையிலிடப்பட்ட சிறுவனோ தனக்கு நேர்ந்த இன்னலை நினைந்து நினைந்து வருந்தினான். தன் தாய் தீக்கிரையானதை யுன்னி ஏங்கிப் புலம்பினான். தன்மீது பொய்யன்பு காட்டிப் பெருந் துன்பத்திற் புகுத்திய சேட்சென்னியின் கொடிய செயலை யுன்னி நைந்தான். தம்முயிர்க் குறுதி எண்ணாது தழலிற் புகுந்து தன்னைத் தப்புவித்த தாயின் தமையனாரான இரும்பிடர்த்தலையாரை எண்ணி ஏங்கினான். சிறைப்பட்ட தான் எவ்வாறு தப்புவது என்பதை அறிந்துகொள்ள வியலாது அறிவு

மயங்கி ஏங்கிக் கலங்கினுன். தீயினுற்பட்ட புண்ணின் வருத்தத்தைத் தாங்கினுன். நாட்கள் சில சென்றன. உண்ண உணவும், பருகத் தண்ணீரும், படுக்கப் பாயும், உடுக்க உடையும் அவ்வரசிளங் குமரனுக்குத் தகுந்த முறையில் அகப்படவில்லை. சாளரத்தின் வழியே நோக்குங்காலத்துத் தன்னை யொத்த இளஞ் சிறுர்கள் தெருவில் விளையாடுதலைக் கண்டு அழுங்குவான். ஒவ்வொரு சமயங்களில் அவன் தனக்குற்ற பொல்லாங்கையெல்லாம் எண்ணி எண்ணி அழுவான். இவ்வாறு சிறைச்சாலையில் அவன் பட்ட கஷ்டங்கள் பல. சிறைக் காவலருட் சிலர் அவனிடத்தே அனுதாபம் காட்டினர். சிலர் ஆதரவும் அளித்தனர். விதி வலியாலல்லலுற் றழுங்கிச் சோரும் அரசிளங் குமரனுக்கு அன்னுர் அன்பும் அனுதாபமும் காட்டியது புத்துயிர் அளித்ததெனலாம். அலைகடலிடையே கலமுடைந்து நீரில் மூழ்கி அலமந்து திகைக்கும் ஒருவனுக்கு ஒரு பற்றுக்கோடு வாய்த்தாற்போல அரசிளங்குமரன் அவர்கள் காட்டிய அனுதாபத்தால் தான் ஒருவாறு தனக்குற்ற இடுக்கண்களினின்றும் தப்பிப் பிழைக்கலாமென எண்ணங் கொண்டனன். அக்காவலாளர்கள் நாட்கள் செல்லச் செல்ல அவனிடத்து அன்புமிக்குடையோர்களாகி உணவுப் பொருள்களும் கொடுத்து அவனேடு அளவளாவுவாராயினர். அரசிளங் குமரன் அவ்வவ்வமயங்களில் அவர்களோடு ஏற்றமுறையில் உரையாடி இரும்பைக் காந்தம் இழுக்குமாப்போல அவர்கள் மனத்தைத் தன்பால் இழுத்துக் கொண்டான். சின்னஞ்சிறு சிறுவன் சிறை



யாக்கப்பட்டு வருந்துதலை யாவரே கண்டு இன்புற்றிருப்பர்! காவலாளிகள் அவனிடம் மிக்க அன்புடையராய் இருந்தாரேனும் அவர்கள் அவனைச் சிறைவிடுத்தனுப்ப வல்லராவரோ? அரசிளங்குமரன் அவர்கள் மனநிலையறிந்து பொருந்தப் பழகி அவர்களைத் தன் வசப்படுத்திக்கொண்டான் ஒருவற்கு இன்பமும் துன்பமும் இவ்வுலகில் நெடுநாள் நிலைத்திராதனவன்றே? கல்வியறிவில்லா மூடரே இன்பம் வந்துற்றகாலை பெரிதும் களித்தும், அல்லல் வந்துற்றகாலை அழுங்கியும் நெஞ்சு புண்ணுவர். மதிநலமிக்குடைய மன்னன் மகன் அறிவுடையார் செயல்போல இடுக்கணினின்றும் நீங்கி வெளியேறுதற்கு அற்றம் நோக்கியிருந்தனன்.

# 3. சிறை வெளிப்பாடு

சிறையகப்பட்ட செல்வனைக் கண்டு தேற்றியும் அவன் சிறைமீட்சிக்குரிய துறைகளை நாடி அறிந்துழைத்தும் நன்மை புரிதற் கெண்ணிய நற்றமிழ் நாவலராகிய இரும்பிடர்த்தலையார் சேட்சென்னியிடத்திற்குச் சென்று நயத்திலும் பயத்திலும் நல்லுரை புகன்றனர். சேட்சென்னி இரும்பிடர்த்தலையாரின் மொழிகளைச் சிறிதும் செவிசாய்த்துக் கேட்டிலன். அதனையறிந்த புலவர் பெரிதும் வருந்தி அம்முயற்சி வீணானதென்று விடுத்தனர். பின்னர் ஒருநாள் அவர் தம் மருகனைச் சிறைச்சாலையில் ஒருவருங் காணா நிலையிற் சென்று காண விழைந்தனர். அவ்வாறே ஒரு நாள் மாலைப்பொழுது ஒருவருங் காணா வகையிற் சிறைச்சாலைக்குட் சென்று மருகனைக் கண்டனர். அறிவும், ஆற்றலும், அழகும், அஞ்சாநிலையும் பொருந்தப்பெற்ற அவ்விளங்குமரன் இன்னல் வந்துற்றதே என்று ஏக்கமுறாது, ஊக்கமும் உழைப்புங் கொண்டு உள்ளத்துணர்ச்சியை முகத்திற் காட்டி ஒப்பற்ற ஆண்சிங்கத்தைப்போல் நிற்பதை இரும்பிடர்த்தலையார் கண்டனர். அப்பொழுதே அவர் மனம் களிப்படைந்தது; மருகனை இறுகத் தழுவிக்கொண்டார்; இன்சொல் பல இயம்பினார்; அவனுக்குப் புத்துயிர் அளிக்கும் பொன்வார்த்தைகளைப் புகன்றார்; அவனால் அச் சிறைக் காவலாளிகள் அவனிடம் ஒழுகும் நிலையை அறிந்துகொண்டார். அன்றுமுதல் அவர்



தினந்தோறும் சிறைக்கூடத்திற்குச் சென்று தன் மருகனைக் கண்டார். அரசிளங் குமரனுக்குச் சிறைக்கூடமே பல கலை கற்கும் பள்ளிக்கூடமாய்த் துலங்கிற்று. இரும்பிடர்த்தலையார் அவனுக்குப் பல கலைகளையும் அச் சிறைக்கூடத்திலேயே போதித்தார். வாள் பயிற்சி, வில் பயிற்சி முதலியவைகளும் அங்கேயே அவன் கற்றான். சிங்கக் குருளையைப்போல் விளங்கிய அச்சிறுவன் நாட்கள் செல்லச் செல்ல அறிவும் ஆற்றலும் மிக்குடையோனாகி உரமும் பெற்று அஞ்சா நெஞ்சும் துணிவும் அகத்திற் கொண்டான். சேட்சென்னி இழைத்த இன்னல்களை எண்ணுந்தோறும் அக் கொடியோனிடம் அருவருப்பும் அடங்காச் சினமும் கொண்டான். அன்னை தீக்கிரையானதை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் அழலிடை யிட்ட மெழுகென அகங்குழைந்தனன். அரிய மாதுலரான இரும்பிடர்த்தலையார் அழலினின்றும் காப்பாற்றிய திறத்தை நினைந்து நினைந்து உருகினன். காவலாளிகள் தன்பால் வைத்த கருணையை எண்ணி எண்ணிப் போற்றினன். தனக்கும் ஒரு நன்னாள் உண்டு என்பதையும் விளைவன யாவும் நன்மைக்கே என்பதையும் ஒப்புயர்வற்ற அவன் மனம் உணராதிருக்கவில்லை. அவ்விளஞ் சிங்கம் அச் சிறைச்சாலையினின்றும் தப்புதற்கு அற்றம் நோக்கி அமைதியுட னிருந்தனன்.

சீரிளங்குமரன் சிறைச்சாலையிலும் செம்மையுற்றுத் திகழ்வதைச் சேட்சென்னி வெறுத்தான். அவ்விளங் குமரன் உயிரோடிருக்கும்வரை தனக்

கும் தன் மைந்தர்களுக்கும் அரசு நிலைத்திடா
தென்பதையும் இன்னலும் பழியும் எய்துமென்
பதையும் அவன் உணர்ந்தான். ஆதலால் எவ்
வகையிலேனும் அவ்விளங்குமரனைக் கொன்று
விடுதலே தக்கதென்று அவன் கருதினான். ஆனால்
அவனைக் கொன்றிட்டால் நாட்டோர் வெறுப்பரே
என்னும் நடுக்கம் அவனைப் பற்றியது. நாட்டோர்
தன்னை இகழ்ந்துரையா வகையில் தன் கருத்தை
முற்றுவித்துக் கொள்ளக் கண்ணுங் கருத்துமா
யிருந்தான். அவன் தன் கொடிய தோழர்களோடு
தீர ஆலோசித்து அவ்விளங் குமரனைக் கொன்று
விடுதலே தகுதி என்னும் ஒரு முடிபுக்கு வந்தான்.
அதனை எவ்வாறோ அறிந்துகொண்ட இளஞ்சேட்
சென்னியின் புதல்வன் மனத்தை ஒருநிலைப்
படுத்தி உறுதிசெய்துகொண்டு அற்றைநாள்
மாலைப்பொழுதிற் சிறைச்சாலைக் கதவங்களைப்
புடைத்துத் திறந்துகொண்டு இளஞ்சிங்கம் கூட்டி
னின்றும் புறப்பட்டாற்போல வெளிக் கிளம்பி
னான். அப்பொழுது அங்குக் காவல்செய்துகொண்
டிருந்த காவலாளர் நீண்ட கூரிய கைவாளுடனே
எதிர்த்துவரச் சிங்கக் குருளை அன்னான் சீறி
எழுந்து, அவர்கள் வாளைக் கையாற் பற்றிப்
பிடுங்கிக்கொண்டு அவர்கள் தலைகளை வெட்டி
உருட்டித் தப்பித்துக்கொண்டு விரைந்தோடினான்.
ஆண்டிருந்த சிறைக் காவலர் சில்லோர் அவ்
விளஞ் சீயத்தின் வீராவேசத்தைக் கண்டு மதி
மயங்கி, அறிவழிந்து, உணர்வற்றுச் செயலற்று
நின்றனர். அரண்மனையெங்கும் பரபரப்புண்டா
யிற்று. காவலாளர் சில்லோர் விரைந்து சென்று



அரண்மனையுட் புகுந்து சேட்சென்னியை அணு
கிப் பணிந்து நடந்தவை நவின்று மெய் நடுக்
குற்று நின்றனர். சேட்சென்னி, தம்பியின் புதல்
வன் சிறையினின்றும் தப்பினான் எனக் கேட்ட
லும் பெருந்துயருற்றான். தான் எண்ணிய எண்
ணம் வீணாகிக் கழிந்ததை உன்னி உன்னி வருந்
தினான். யாது விளையுமோ என்று ஏங்கினான்;
அச்சம் அவன் மனதிற் குடிகொண்டது; முறை
தவிர் கொடுங்கோல் மன்னனும் சேட்சென்னி
பலப்பல எண்ணினான். தப்பிச்சென்ற சிறுவன்
தனக்கும் தன் மைந்தர்கட்கும் எத்தகைய தீங்கை
விளைவிப்பானோ என்று ஏக்கங்கொண்டு மனஞ்
சாம்பினான். அச்சிறுவன் மாதுலனாலேயே விடு
பட்டிருத்தல் வேண்டுமெனத் தோற்றியது. என்
செய்வான்? காவலர்மீது எரிந்து வீழ்ந்தான்.
அந்தோ! அந்நிலையில் அவன் மனம் பட்ட
பாட்டை ஏட்டில் எழுத இயலுமோ. அவன்
ஏவலாளர்களைக் கூவி, 'நாட்டில் எவ்விடத்தில்
அச்சிறுவன் இருப்பினும் அன்னானைப் பிடித்து
வருக' எனக் கட்டளையிட்டனன். கணக்கிலடங்
காக் காவலாளர் பல்லோர் காவலன் கட்டளை
யைக் கடிது மேற்கொண்டு காடும் மலையும்
கடந்து சென்று தேடினர். சிற்றூர்களிலும்
பேரூர்களிலும் புகுந்து தேடினர். வீடுகள்தோ
றும் நுழைந்து பார்த்தனர். எங்குந் தேடியும்
அச்சிறுவனைக் கண்டாரில்லை. அரசன் கோபத்
திற்கஞ்சிய அவர்கள் பல்வேறு இடங்களிலும்
பரந்து சென்று தேடியும் பார்த்திபன் புதல்வ
னைப் பார்த்தாரில்லை. முடிவில் அவர்கள் அரசனை

யடைந்து, 'மன்னவ, பல் வேறிடங்களில் நாங்கள் பல நாட்களாய்த் தேடிப் பார்த்தோம். அச் சிறுவன் எங்கும் காணப்படவில்லை. எங்கள் கட்புலனுக் கிலக்காகுவானெனில் அவனைக் கொன்று கொணர்ந்திருப்போம் அல்லேமோ? அவன் என்ன மாயம் செய்து எங்குச் சென்று ஒளித்தனனோ அறியேம். இனி அவனைக் கண்டேமாயின் அவனை எங்கள் வாட்கு இரையாக்காதுவிடேம். அவனும் ஆருயிர் தாங்கி நிற்றல் அருமையினும் அருமை. என்னே! சீயம் போற் சீறி எழுந்து கட்புலம் கதுவாது விட்புலம் போய விஞ்சையனோ அவன்! காவல, எந்நாளிலேனும் அவன் எங்கள் கண்களில் காணாதிரான்; காணாவேமாயின் அவன் உயிரை உண்ணாதிரேம்' எனக் குளறிக் கூறி நின்றனர். அரசன் மனமிகவுடைந்து செயலற்று அரியணையிற் சாய்ந்தான். அவன் மனத்திற் பலப்பல எண்ணங்கள் தோன்றின. இரும்பிடர்த்தலையாரே தம் மதிவன்மையால் அவனைச் சிறைமீட்டு நாட்டைக் கடத்திக்கொண்டு சென்றிருக்கவேண்டுமென்று சேட்சென்னி நினைத்தான். சில ஆண்டுகட்குப் பின் வருதலும் கூடுமென்றும், வந்தால் தன்னையும் தன் குலத்தையும் கருவேரறுத்திடுவானென்றும் அவன் கருதினான். அப்பொழுது அவனுடைய மனம் பட்டபாடு என்னவென்றியம்புவது! அச்சம் அவனிடத்திற் குடிகொண்டது. அவன் நெஞ்சு நடுக்குற்றது. அவன் நிலைகுலைந்தான். எண்ணாது எண்ணி ஏங்கினான். அவன் மனமும் மதியுங் கலங்கின. அறிவிழந்து பலவாறு பிதற்றிக்கொண்டு தன் உள்ளக் கருத்தை



முகத்திற் றேக்கி வெருண்டு நின்ற வேந்தன் நிலையைக் கண்ட காவலாளர் விரைந்து அகன்றனர்.

இரும்பிடர்த்தலையார் அன்றே மருகன் சிறைச்சாலையினின்றும் தப்பியோடினன் என்று சேள்விப்பட்டு மன மகிழ்ந்தனர். அற்றைத்தினமே அவர் அவ்வூரை விடுத்து அழுந்தூரடைந்தார். அடைந்தாரேனும் அவர் மருகன் யாண்டுறைகின்றனனோ என்று அறிய ஆவலுற்றவராய் அம்முயற்சியிற் கண்ணுங் கருத்துமா யிருந்தார். மருகனுக்கு நற்காலம் பிறந்துள்ளதை யறிந்து நகை கொண்டார். அறிவாற்றலாற் சிறந்தோன் ஆதலின் மருகன் சேட்சென்னிக்கு இனி அகப்படான் என நினைந்து அகம் மகிழ்ந்தார்.

# 4. களிறு கொணர்ந்த காவலன்

இளஞ்சேட்சென்னியின் அரும் புதல்வன் தன் சிறு தகப்பனாற் பல்வகைத் துன்பத்திற்கு உள்ளாக்கப்பட்டுச் சிறைப்பட்டானென்றும், அவன் தாய் எரிமூட்டப்பட்ட மாளிகையிலிருந்து தீக்கிரையானாள் என்றும்; சிறைப்பட்ட சிறுவன் தப்பியோடினானென்றும் அவனைக் கொல்லுதற்குச் சேட்சென்னி பல்வகையிலும் முயன்று வந்தானென்றும் நகரமக்கள் நன்குணர்ந்தனர். இச்செய்தி சில நாட்களில் நாடெங்கும் பரவிற்று. நாட்டில் எங்கும் மக்கள் குழுமிக் குழுமி இதனைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தனர். சேட்சென்னியின் மனநிலை மாறுதலடையாது நாளும் நாளும் வலிமைபெற்று வருதலை உணர்ந்த நகர மக்கள் அவன்பால் வெறுப்புக்கொண்டனர். சேட்சென்னியைப்பற்றித் தூற்றிக் கூறாதார் அந்நாட்டில் ஒருவருமில்லை. இளஞ்சேட்சென்னியின் புதல்வனுக்காக அந்நாட்டில் வருந்தாதாருமில்லை. சேட்சென்னியோ பல்லாற்றானும் முயன்று பார்த்தும் தன் எண்ணம் நிறைவேறாது ஒழிந்தமையைக் குறித்துச் சால வருந்தினான். அவன் மனம் கவலை என்னும் நோயாற் பீடிக்கப்பட்டு அல்லலுற்று அழுங்கியது. அந்தோ! கவலைக்குட்பட்ட மன்னன் நாளடைவில் மனநோய் மிகுந்து வருந்தினான். மன்னனுக்குற்ற மனநோய் நாளடைவில் முதிர்ந்து அவன் மரணத்திற்குக் காரணமாயிற்று. சேட்சென்னி சின்னாளில் மாண்டொழிந்தான்.



அந்நாட்டு மக்களனைவரும் அவன் ஒழிந்தது குறித்துக் களித்தாரேயன்றி வருந்தினாரில்லை. அந்தோ! 'தாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும்' என்னும் முதுமொழிக் கிணங்க மன்னன் தன் எண்ணம் நிறைவுறாது மனநோய் கொண்டு மண்ணுலகை நீத்துப் பொன்னுலகு புக்கான். உலகில் தீமை கருதுவோர் எந்நாளும் இன்பமுறார் என்பது அவனிடத்து நன்கு விளங்குவதாயிற்று.

சேட்சென்னியின் புதல்வர் ஒன்பதின்மரும் தம்முள் தாம் பகைத்தெழுந்து அரசாட்சியைப் பெறுவதற்காகப் போர் புரிவாராயினர். அம்மைந்தர்கள் ஒருவரிடத்திலேனும் சீர்பெறு செந்தமிழ்ச் சோழநன்னாட்டை அரசுபுரியும் ஆற்றல் அமைந்திலது. அத்தகைமையைக் குடிமக்களும் நன்குணர்ந்திருந்தனர். ஆதலின் அவர்கள் எவ்வாற்றானும் அம்மைந்தர்கள் அரசெய்யாதிருத்தலை விழைந்தனர். சோழ நன்னாட்டுப் பெரியோர் பலரும் பல நல்லுரைகளை எடுத்துப் புகன்றும் அம்மைந்தர் கேட்டாரல்லர். ஆதலின் நாட்டிற் குழப்பம் தோன்றிற்று. உள்நாட்டுக் கலகங்களும் பல எழுந்தன. அவற்றை யடக்கி நாட்டை நன்னிலைப்படுத்தும்பொருட்டு விழைந்த பெரியோர் பலரும் அரசன் ஒருவனைத் தேர்ந்தெடுத்தல் அவசியம் என்னும் முடிவுக்கு வந்தனர். சேட்சென்னியின் புதல்வர் ஒன்பதின்மரும் தம்முள் தாம் சச்சரவிட்டுக்கொண்டிருந்ததால் ஒருவரும் 'அரசெய்தும் தகைமை பெற்றிலர். ஆதலால் அக்

காலத்து வழக்கமேபோலப் பட்டத்து யானையை விடுத்து அரசுரிமை எய்தும் திருவுடையாரை அவ் யானை தூக்கிக் கொண்டுவர ஏற்றுக் கொள்வதெனும் முடிவுக்கு வந்தனர். பின அனைவரும் ஒருங்கு கூடிக் கழுமலம் என்னும் சீர்காழிப் பதியின்கண்ணே பிணித்து நின்ற களிற்றினைக் கட்டவிழ்த்துப் பிடித்துவந்து, அதனை நீராட்டி அழகுபடுத்தி மலர்த்தொடையல் ஒன்றை அதன் கையிற் கொடுத்து அரசனைத் தேர்ந்தெடுத்து வருமாறு நன்னாளிற் கடவுளைத் தொழுது விடுத்தனர். இது நிற்க.

அழுந்தூரில் அமர்ந்திருந்த இரும்பிடர்த்தலையார் சோழநன்னாட்டிற் குழப்பங்களும், உட்கலகங்களும் மலிந்திருப்பதை யறிந்து மகிழ்ந்தார். சேட்சென்னியின் புதல்வர் ஒன்பதின்மரும் தம்முட் டாம் பகைத்தெழுவதை யறிந்து அவ்வொன்பதின்மரும் அரசெய்துதற்கு உரியாரல்லரென்று புலவர் மனத்தில் உறுதிகொண்டார். சோழநாட்டில் நன் முதுமக்கள் நானிலம் போற்றும் நலம்பெறு மன்னனை நாடியறிவதில் நழுவார் என்னும் உறுதியும் புலவர்கொண்டனர். ஆதலின், தன் மருகன் எந்நிலையினும் சோழநன்னாட்டு அரசுரிமையை எய்துவான் என்னும் திண்ணிய எண்ணம் புலவர் மனத்தில் தோன்றியது அன்னான் யாண்டுளன் என்பதை அறிந்து கொள்ள விழைந்த புலவர்பெருந்தகை . தம் நண்பர் பலரையும் உசாவி, மருகன் கருவூர்த் தொல்பதிக்கண் சென்றுளான் என்று அறிந்துகொண்டனர்.



சிறையினின்றும் தப்பிப்பிழைத்த செம்மல், சோழநன்னாட்டு உறையூரினும் பிற ஊர்களினும் தன்னை ஒருவரும் அறிந்துகொள்ளாவகை உருக்கரந்து சுற்றித் திரிந்தனன். தான் அந்நாட்டில் உள்ளவரை தனக்கேதம் ஏற்படும் என உணர்ந்து சீருடைச் செம்மல் சோழநன்னாட்டைக் கடந்து சேரநாட்டின் தலைநகராய கருவூர்த் தொல்பதியை யடைந்தான். அங்குச் சின்னாள்வரை தன்னை ஒருவரும் அறிந்துகொள்ளா வகையில் உருமாறித் திரிந்து வந்தனன். அரசகுடும்பத்திற் பிறந்தும் இளமைப் பருவத்தில் தாங்குதற்கரிய பேரின்னல்களைப் பொறுத்துத் தாங்கித் தன்னை இன்னன் இனியன் என வெளிப்படுத்தாது கரந்துறையும் கள்ள வாழ்க்கையை மேற்கொண்டு ஒழுகிய இளஞ்சேட்சென்னியின் அரும் புதல்வன் நிலையை, நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் உலகில் மக்கட்கு எந்நிலையினும் துன்பமுண்டாக்கித் தாழ்நிலையுறச் செய்யும் தகைமை பெற்றது ஊழ்வினை என்பது உணர்தற்பாற்றன்றோ? கருவூரின்கண் தன் மருகன் உள்ளான் என்பதையறிந்த இரும்பிடர்த்தலையார், கருவூர்த் தொல்பதிக்கண் தமக்கினியராய்ப் பொருந்தி வாழும் பெரியார் பலர்க்கு ஓலைகள் போக்கி, அம் மைந்தனை ஒருவரும் அறியாவகையிற் பாதுகாத்து வருமாறு வேண்டிக்கொண்டனர். இரும்பிடர்த்தலையாரின் ஓலை கண்ட கருவூர்ப் பழம்பதிக்கண் உறையும் பெரியார் பலரும் தத்தம் இல்லங்கட்கு இளஞ்சேட்சென்னியின் புதல்வனை அழைத்துக்கொண்டு சென்று ஊண் உடை உவக்க அளித்துப் போற்றி

வருவாராயினர். இரும்பிடர்த்தலையார் தன் மருகனுக்கு எந்நிலையாயினும் சோழநன்னாட்டின் அரசை அளித்திட எண்ணிப் பல்வேறு உபாயங்களையும் நாடுவாரானார். புலவர் சோழநாட்டில் நிகழ்வுற்ற செய்திகள் யாவற்றையும் நன்குணர்ந்து கொண்டு மருகனுக்கு அரசாட்சியை அடைவிக்குங் காலம் அதுவே என உணர்ந்து அதற்குரிய முயற்சியிற் குன்றாது பாண்டியநாடு நோக்கிப் பிரயாணமானார்.

தேனினும் இனிய தமிழ்மொழி வளர்ந்த செந்தமிழ்ப் பாண்டிநன்னாட்டில் அந்நாள் தீதுதீர் மதுரையைத் தலைநகராகக்கொண்டு அரசாட்சி புரிந்த சீர்பெறு பாண்டியன் சினங்கெழு கருங்கை ஒள்வாட் பெரும் பெயர் வழுதி. அன்னான் ஆற்றலும் அறிவும் ஏற்றமும் பொருந்தப் பெற்றவன். படைவலி மிகுத்துப் பகைவரைக் கெடுத்துப் பண்புடை நெறியிற் பாண்டி நன்னாட்டைப் பாங்குறவாண்ட பாண்டியர் பல்லோருள் ஓங்கிய சிறப்புடைப் பெரும் பெயர் வழுதியும் ஒருவனாவன். அன்னான் வாளேந்திய கையினை யுடையனாய் யானை எருத்தத் தமர்ந்து, நாகம்போற் சீறிப், புலிபோற் பாய்ந்து, போர்க்களம் குறுகிப், பகைவரைத் தாக்குவனேல் அன்னான் வாட்கு இரையாகாத பகைவரும் உளராவரோ? அன்னான் வீரப்பொலிவுடைத் தோற்றமே பகைவரை மலங்கச்செய்து புறங்காட்டி யோடும்படி செய்யுமெனின், அவன் அமர்க்களம் புகுந்து போர் புரிதலும் வேண்டுமோ? அன்னோன் மிகு வலி படைத்திருந்தான் எனி



னும் அறநெறியிற் சிறிதும் வழுவுற்றிலன். தன்னுயிர்போல் மன்னுயிரைப் பாவிக்கும் தகைமை வாய்ந்த பேரருளாளன் அவன். அவன் குடியோம்பிக் கொள்ளுமா கொண்டு, கோனெறி கோடாது அரசாட்சி புரிந்து வந்தனன்.

இரும்பிடர்த்தலையார் பாண்டியன் சிறப்பைப் பாங்குற உணர்ந்திருந்தார். அன்னார் அவனது தமிழ்ப் பற்றையும், தமிழ்ப்புல்வரிடத்து வைத்திருந்த அன்பின் பெருமையையும், வள்ளன்மையையும், சொன்னசொல் தவறாமையையும், உறுதிப்பாட்டையும் நன்குணர்ந்திருந்தார். ஆதலின் அவர் அப்பாண்டியனிடத்து நெடுங்காலமாக நட்புக்கிழமை பூண்டொழுகினர். பாண்டியன் அழுந்தூர்ப் புலவரான இரும்பிடர்த்தலையாரை அடிக்கடி கண்டு அளவளாவி இன்புற்றிருப்பான். அவரைக் காணவிடிற் பாண்டியன் ஏங்குவான். இரும்பிடர்த்தலையாரோ பாண்டியனைப் பன்முறையும் சென்று கண்டு நல்லறிவுறுத்தி வருவார். இரும்பிடர்த்தலையாரிடத்துப் பாண்டியன் அச்சமும் பெருமதிப்பும் அகத்தேகொண்டிருந்தனன். ஆதலால் இரும்பிடர்த்தலையார் பாண்டியன் தனக்குப் பல்லாற்றானும் உதவுவான் என்னும் நம்பிக்கை கொண்டிருந்தார்.

சோழநாட்டுக் குழப்பங்களை யுணர்ந்த இரும்பிடர்த்தலையார் பாண்டிநாடு நோக்கிப் பயணமானாரென்று கூறினோமன்றோ? அப்பெருந்தகையார் கன்னித் தண்டமிழ் நாட்டுத் தொல்பதியாம் மதுரைமாநகரமடைந்து அரண்மனைக்குச்

சென்று பாண்டியனைக் கண்டனர். பாண்டியன் அவரைத் தந்தைபோல் தழுவி அன்புடன் வரவேற்றனன். காவலனும் பாவலரும் சிறிதுநேரம் அளவளாவிக் கொண்டிருந்தனர். பின்னர் பாண்டியன் அவர் வந்த காரணம் என்னென்று கேட்டான். புலவர்பெருமான் பாண்டியனை நோக்கி, "மதிவழி வந்த தொல்குல வேந்தே! யான் இங்கு வந்திருக்கும் நிலையை நீ ஒருவாறு ஊகித்தறிந்திருத்தலும் கூடும். என் மருகன், சோழன் சேட்சென்னியால் அடைந்த இன்னல்களுக்கு அளவில்லை. அச்சிறுவன் தாங்கரும் இன்னலைத் தாங்கிக்கொண்டு கருவூர்ப் பெரும்பதிக்கண் புகுந்து கரந்துறைந்து வருகின்றான். சோழநாட்டிற் சேட்சென்னி இறந்தானாக அவன் மைந்தர் ஒன்பதின்மரும் தம்முள் தாம் மலைந்து அரசெய்துதற்குரியரல்லராய் நிற்கின்றார். சோழநாட்டு மூதறிஞர் பல்லோரும் சேட்சென்னியின் புதல்வர்க்கு எடுத்துரைத்த நல்லுரைகள் யாவும் பயனில வாயின. ஆதலால் அப்பெரியோர்கள் அனைவரும் ஒருங்குகூடி அரசெய்துதற்குரியாரைத் தேர்ந்தெடுத்தல் இன்றியமையாததென்னும் முடிபிற்கு வந்தனர். பாண்டியனே! எங்கள் நாட்டில் நெடுங்காலமாக அனுட்டித்து வரும் பழக்கமொன்றுண்டு; உரைக்கிறேன், கேள். கழுமலம் என்னும் சீர்காழப்பதியில் அரசர் பட்டத்தியானை பிணிக்கப்பட்டு நின்றுள்ளது. அரசெய்துதற்குரியார் இலராகின் யாரைத் தேர்ந்தெடுத்தல் முறை என்றறியாது அந்நாட்டுப் பெரியோர்கள் திகைப்புறுங் காலத்தில் அக்களிற்றை அவிழ்த்து



நீராட்டி அழகுபடுத்தி அதன் புழைக்கையில் பூமாலை ஒன்று கொடுத்துக் கடவுளைத் தொழுது கட்டவிழ்த்து விடுவர். அப்பேரானை நாடெங்குஞ் சுற்றித் திரிந்து அரசாட்சி எய்துதற்குத் தகுதியுடைய நல்லூழ் உடையானை நாடியறிந்து, அவன் கழுத்திற் பூமாலையைச் சாத்தி அவனைப் பிடரிமிசைச் சுமந்துகொண்டு விரைந்தோடிவரும். அத்தகையோனை நாங்கள் அரியாசனத்தமர்த்தி முடிசூட்டி அரசனாக்குவோம். இத்தகைய வழக்கம் சோழநன்னாட்டிற் பண்டைக்காலத்திலும் இக்காலத்திலும் நடந்து வருவது. பெரும்பெயர் வழுதி! அவ்யானை கூரிய அறிவுடையது. எங்கள் குலத்தாரையன்றி வேறெவரையும் மாலைசூட்டி எருத்தத் தேற்றிக்கொண்டு வாராது. அதன் நுண்ணறிவை நீ அறிவையாயின் பெரியதோர் வியப்புக் கொள்வாய். மன்னவ, இப்பொழுது சோழநாட்டில் அரசெய்துதற்கு உரியார் இலராயினரன்றே! அந்நாட்டு முதுமக்கள் சேட்சென்னியின் புதல்வர்களுக்கு அறிவுறுத்திய பொன்மொழிகள் யாவும் அவலமாயின. அப்பெரியோர்கள் கழுமலத்தை யாத்த களிற்றினைக் கட்டவிழ்த்துக் கையிற் பூமாலை கொடுத்து அரசுரிமை எய்துதற்குரியாரை அதன் மூலமாக அறிந்துகொள்ள விரும்பியுள்ளனர். புரவல! பண்டொருகால் எனக்குவேண்டும் உதவி புரிவதாக வாக்களித்துள்ளாயன்றே? உன் உதவியை நாடி அடைதற்கு எனக்கு நற்காலமும் வாய்த்தது. என் மருகனை நான் என் மைந்தனெனவே போற்றிக் கொள்கிறேன். சோழ நாட்டுக் குடிகள்

விடுக்கும் யானை உறுதியாக என் மருகனையே மாலை சூட்டி எருத்தத்தேற்றி வரும் என்னும் திண்ணெண்ணம் என் மனத்திற் குடிகொண்டுள்ளது. ஈசன் திருவருளும் வாய்க்குமென்றே நம்புகின்றேன். ஆதலின் மாறனே, என்னுடன் உறையூர்ப் பெரும்பதிக் கெழுந்தருளி அவ்விந்தையைக் கண்டு களிப்பாயாக" என வேண்டிநின்றார். பாண்டியன் ஒள்வாட்கைப் பெரும்பெயர்வழுதியும் அதற்கிசைந்தனன். பின் புலவரும் புரவலனும் புறப்பட்டு உறையூரடைந்தனர்.

சோழநாட்டுக் குடிமக்கள் கழுமலத்து யாத்த முழுகளிற்றைக் கட்டவிழ்த்து நீராட்டிக் கையில் வேந்தர் சூடும் தொடையல் ஒன்றையும் கொடுத்துக் கடவுளை வாழ்த்தி அரசெய்துதற்குரியாரை அறிந்து எடுத்து வருமாறு கூறிவிடுத்தனர். அக்களிறு சோழ நாடெங்குஞ் சுற்றித் திரிந்து பின் சேரநாட்டுத் தலைநகரான கருவூர்ப் பெரும்பதிக்கண் புகுந்தது. புக்க களிறு அந்நகர்ப் பெரும் வீதியில் பன்முறை கையில் மாலை தாங்கிக் கம்பீரமாகச் சுற்றிவந்து, ஓரிடத்துக் களைத்து உய்வகை நாடி உள்ளத்தாற் பலபல சிந்தித்துக் கொண்டிருக்கும் இளஞ்சேட்சென்னியின் புதல்வனை யடைந்து நின்றது. அவ் யானையைக் கண்ட இளமைந்தன் துணுக்குற்றான்; எனினும் அஞ்சினனல்லன். யானை ஒருமுறை அவனை உற்று நோக்கியது. அதன் கையிலிருந்த விழுப்பம் பொருந்திய வேந்தர் சூடத் தகுந்த மாலையை அவன் கழுத்திற் சூட்டித் தன் புழைநெடுங்கரத்



தாற் பற்றித் தன் எருத்தத்தின்மீது பொற்புறவமைத்துக்கொண்டு உறையூர் நோக்கிக் கடுகி நடந்தது. கருவூர்ப் பெருமக்கள் அனைவோரும் அவ்யானையின் பேராற்றலையும் கூரிய அறிவையும் கண்டு வியந்து நின்றனர். யானை உறையூர்த் திருநகரின் பெரு வீதிகளில் இரும்பிடர்த்தலையாரின் ஒரு பெருமருகனைத் தம் எருத்தத்திற்றாங்கிக்கொண்டு வலம் வந்து அரண்மனையின் பெருமுற்றத்தில் அவனை இறக்கியது. அந்நிலையைப் பாண்டியனும் இரும்பிடர்த்தலையாரும் கண்டு களிப்பெனுங் கடலுட் படிந்து திளைத்து அவ் யானையின் கூரிய அறிவுடைமையை வியந்து போற்றிக் கடவுளின் திருவருட் செயலை நினைந்து மகிழ்ந்தனர். உறையூர்த் தொல்பதி வாழ் மூதறிஞர்களும் குடிகளும் பெருமகிழ்வுற்றுக் களிறு கொணர்ந்த காவலனை நன்னாளில் நன்முகூர்த்தத்தில் அரியணைமீ தமர்த்திப் பெருமுடி கவித்து அரசனாக்கினர். அக்காலையில், தீயினின்றும் தப்பி வந்தபொழுது நெருப்புப் புண்பட்டுக் கரிந்து போகிய காலை அனைவருங் கண்டு அவனைக் கரிகாலன் என அழைப்பாராயினர். சில வடமொழி நூற்கள் அவனைக் கல்மாஷபாதன் என்று கூறுகின்றன. இரும்பிடர்த்தலையார் தம் எண்ணம் கைவரப்பெற்றது கண்டு இன்பக் கடலுள் மூழ்கினார். பல்லோரும் போற்றக் கரிகாலன் களிற்றாற் கொணரப்பட்டுக் கவின்பெறு சோழ நன்னாட்டுக் காவலனானான். பாண்டியன் மதுரையை அடைந்தான்.

# 5. திருமாவளவன்

இளமைப் பருவத்துப் பிறராற் சுடப்பட்டு உயிர் உய்ந்து போகிய கரிகாலன் மீண்டும் நல்வினை நலத்தாற் சோழ நன்னாட்டின் பேரரசாட்சியைப் பெற்று இனிது அரசுபுரிந்து வந்தனன். கரிகாலன் ஆண்டில் இளையனாயினும் அறிவில் முதிர்ந்து விளங்கினான். கல்வி அறிவும், நிறைந்த பொறுமையும் அவனிடத்திற் குடிகொண்டிருந்தன. அவன் நல்லோர் பலரையும் தன்னவையிற் கூட்டி அவர்கள் கூறும் நன்மொழிகளைப் பொன்னே போற் போற்றிக் கடைப்பிடித்து ஒழுகி வந்தனன். இரும்பிடர்த்தலையார் எக்காலத்தும் கரிகாலனை விட்டுச் சிறிதும் பிரிந்திடாது அவனுடனிருந்து ஏற்ற அமயங்களில் நன்னெறிகளைப் போதித்து வந்தனர். அவர் கரிகாற் சோழனை அடுத்திருந்தது அவன் ஆக்கத்திற்கும் பெருமைக்கும் காரணமாயிருந்தது. சேட்சென்னியின் புதல்வர்களோ முன்னிலும் மிகப் பகைமை பாராட்டி வந்தனர். அவர்களுக்கு மனத்தில் அச்சம் தோன்றியது. தந்தை இழைத்த தீங்குகளையும் தாம் பகைத்து நிற்கும் தகைமையையும் அறிந்துள்ள கரிகாலன் தங்கட்கு என்ன தீங்கிழைப்பானோ என்று அஞ்சினர்: அதனால் அவர்கட்கு மனவமைதி உற்றிலது. மற்றும், கரிகாலன் புகழ் நாளும் பரவுதலை நோக்கி அழுக்காறு கொண்ட அவர்களுடைய மனம் கரிகாலன் வீழ்ச்சிக்கு உரிய கருமங்களை நாடி அறிதலிலேயே முனைந்து நின்றது.



கரிகாலன் இரும்பிடர்த்தலையாரின் பெருந்துணையால் நாட்டிற் பல சீர்திருத்தங்களைச் செய்தனன். வழக்கொடு வருவோர் வாய்மொழி கேட்டு நெறியிற் றிறம்பா நேர்மையோடு, அவன் நீதி கூறிவந்தான். குடிமக்கள் அவனாட்சியில் அச்சமின்றி வாழ்ந்து வந்தனர். அவன் செங்கோலாட்சியும் நல்லறிவாண்மையும் நானிலமெல்லாம் போற்றுந் தன்மை பெற்றிருந்தன. நீதியிற் றிறம்பல் செல்லாக் கரிகாலன் வழக்குக் கேட்டு உரைமுடிபு கூறும் தகுதியினை அந்நாட்டுக் குடிமக்களனைவரும் நன்கறிந்து மகிழ்ந்திருந்தனர். சுருங்கச் சொல்லின் ஆண்டின் இளையனாய் அறிவில் முதிர்ந்திருந்த கரிகால்வளவன் சோழ நன்னாட்டைச் சிறப்புடைவகையால் குடிகட்கு ஐவகையச்சமும் தோன்றாதபடி நடுவுநிலைமையோடு பரிபாலித்து வந்தான். அவன் நாட்டிற் செல்வம் பெருகிற்று. குடிமக்கள் இன்புற்று வாழ்ந்து வந்தனர். அவன் புகழ் எங்கும் பரவியது. அவன் பெருமையைக் கற்றோரும் மற்றோரும் புகழ்ந்து பாராட்டினர். மீன் குட்டிக்கு நீச்சம் பழக்குவதில்லையன்றோ? குலவித்தை கல்லாமலே வருமாதலின் சோழன் கரிகாலன் கூரறிவுடைமையோடு இனிது ஆண்டுவந்தனன். சோழ நன்னாடு பொன்னுலகோ எனப் போற்றும் தகைமை பெற்றது. அவனை அனைவரும் **திருமாவளவன்** எனப் போற்றிக் கூறினர்.

ஒருநாள் நல்லறிவுடைய முதியோர் இருவர் தம்முட் பகைத்தெழுந்த காரணத்தால் வழக்கொடு கரிகாலன் பேரவை நண்ணினர். இருவ

ரும் அரியணைமீதமர்ந்திருந்த கரிகாலனைக் கண்டு, 'தம் வழக்கைத் தீர்த்து முடிவு கூறுவதற்குரிய அறிவு அவனிடத்தில் இல்லையே, ஆண்டில் இளையோனாயிற்றே. நாம் கூறும் வழக்கினை ஆய்ந்து காணும் நல்லறிவினை அவன் எங்ஙனம் பெற்றிருப்பான்' என எண்ணி வருந்தினர். அவர்கள் கருத்தை யறிந்த கரிகாலன் அரியணையினின்றும் இழிந்து விரைந்து அரண்மனைக்குட் புகுந்து சிறிது நேரத்திற்கெல்லாம் நரைமுடியும் வெண்மையான தாடியும் ஊன்றுகோலுங் கொண்டு கிழ உருப்பட்டு வந்து அரியணை மீதமர்ந்தான். அவனைக் கரிகாலனென வறியாத அவ்விரு முதியோரும் தம் வழக்கினை நலம்பட உரைத்து வாதாடி நின்றனர். கரிகாலன் இருவர் சொல்லையும் ஏழுதரம். கேட்டு அவர்கள் சொற்கொண்டே இருவர்களும் ஒப்ப உரைமுடிபு கூறினன். அன்னோர் அவன் சொல் வன்மையையும், தெளிந்த அறிவின் திறத்தையும், நீதி பாலிக்கும் பெருந்தகைமையையும், கண்டு மகிழ்ந்தனர். திருமாவளவன், நரைமுதுமக்கள் தன் உரைமுடிபை உவப்புடன் ஏற்றுக்கொண்ட அக்கணமே, நரைமுடியையும் வெண்தாடியையும் ஊன்றுகோலினையும் நீக்கி, அரியேறு என்ன அரியாசனத்துப் புன்முறுவல் பூத்து அமர்ந்திருந்தனன். அத்தகையோனை அரியாசனத்திற் கண்ட அவ்விரு நரைமுதுமக்களும் கரிகாலனே நரைமுது வேடந்தரித்து உரைமுடிபு கூறினன் என வுணர்ந்து தாம் நாணுட்கொண்டாராய் 'உருவு கண்டு எள்ளார் அறிவுடையோர்' என்னும் முதுமொழியை



மறந்து அவமானம் அடைந்தோமே, நம் கருத்தறிந்து முதுமை பூண்டு உரை முடிபு கூறிய உரவோன் திருமாவளவனின் பெருமையை என்னென்று கூறுவது என நைந்தார். அவ்விருவரும் கரிகாலனை நோக்கி, "சுடர்வழி வந்த பீடுடைத் தோன்றல்! நின்குலப் பெருமையை என்னென்றியம்புவது! மீன்குட்டிக்கு நீச்சும் புலிக்குட்டிக்குப் பாய்வும் கற்பிப்பார் உலகில் உளரோ! 'குலவித்தை கல்லாமற் பாகம்படும்' என்னும் சான்றோர் மொழி சாலச் சிறந்ததே; காவிரி புரக்கும் நாடு கிழவோய்! நின்கொற்றம் நெடுங்காலம் வாழ்வதாகுக. நீ இளைஞனாயினும் நீதி செலுத்தும் வன்மையில் ஒப்புயர்வற்று விளங்குகின்றனை. உன் குலப் புகழனைத்தும் உன் புகழ்க்கு ஈடாமோ? வளவர் சிகாமணியே! எம் அறியாமையை நீக்கி அகந்தையை ஒழித்தாய். நீதி செலுத்தும் திறமை இயற்கையாகவே சோழர் குடியிற் பிறந்தார்க்கு உண்டு என்பதை யறிவோம். அதனை யாம் அங்கை நெல்லிக்கனி எனக் கண்டனம். சோழர் குலதிலகமே! நின்னைப் போன்ற அரசன் எமக்கு முன்னும் இருந்ததில்லை; பின்னும் வரப்போவதில்லை. செம்பியர் சீயமே! அறியாமையால் முன்னம் நின் பெருமையை யறியாது அவமதித்த எங்களை மன்னிப்பாயாக" என்று அவனடி வீழ்ந்து பணிந்து விடைகொண்டு சென்றனர்.

அரசவையிலிருந்தோரும், இரும்பிடர்த்தலையாரும், கரிகால்வளவனது கூரிய அறிவு கண்டு வியந்து கொண்டாடினர். அவன் புகழ் பரவு

தற்கு அஃது ஒரு காரணமாயிற்று. அன்றே அரண்மனையில் நடந்த நிகழ்ச்சிகளெல்லாம் அவ்வூரிலுள்ளார்க்கும், அந்நாட்டோர்க்கும் தெரியலாயின. அவன் கூறிய அறிவினைக் கேட்டு அனைவரும் வியந்து புகழ்ந்தனர். சோழர் குடிப் பெருமை அவனால் நிறுவப்படும் என்று உரைத்தனர் சில்லோர். சோழநாடு செய்த தவப்பேற்றால் இத்தகைய நல்லரசனைப் பெற்றது இந்நன்னாடு; இனி நன்னிலை எய்தும் என்று நவின்றனர் சில்லோர். சோழர் தொல்குலம் விளங்க வந்த கரிகாலன் இமசேது பரியந்தம் கைக்கொண்டு ஒரு குடைக்கீழ்த் தனியாளும் அரசனாவான் என்றனர் சில்லோர். இவ்வாறு அவன் புகழை நாடெங்கும் மக்கள் புகழ்ந்து கொண்டாடினர்.

சோழர்குலத்து வந்தோர், சோழவள நாட்டிலுள்ள பிடவூர், அழுந்தூர், வல்லம், நாங்கூர், நாகூர், ஆலஞ்சேரி, கிழார், பெருஞ்சிக்கல் என்னும் ஊர்களில் வாழ்ந்து வந்த வேளிர் குலத்து வந்தவரான வேள், அரசு, காவிதி எனும் பட்டங்களைப் பெற்று விளங்கிய வேளாளர் குலத்தில் பெண் கொடுப்பதும் பெண் கொள்வதும் வழக்கம். வேளாளர் உழுது உண்போர், உழுவித்து உண்போர் என இருவகையினர். அவருள் சீர்காழியைச் சார்ந்த நாங்கூரிடத்தே உழுவித்துண்ணும் வேள் என்னும் பட்டம் எய்திய வேளாளரிடத்துத் திருமாவளவன் பெண் கொண்டனன். இவன் தந்தை அழுந்தூர் வேளிடத்துப் பெண்



கொண்டானன்றோ? திருமாவளவன் இந்நாங்கூர் வேள் மகள் அன்றி வேறு பல மகளிரையும் மணம் புரிந்து இன்புற்றிருந்தான். அவன் ஆண்டுகள் சில கடக்கச் சேட்சென்னி நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, மாவளத்தான், என்னும் மூன்று ஆண் மக்களையும், ஆதிமந்தியார் என்னும் பெண் மகளையும் பெற்றெடுத்தான். நெடுஞ்சேரலாதனை மணந்து சேரன் செங்குட்டுவனை ஈன்றெடுத்த நற்சோணை என்பவளும், சோழன் வேற்பஃறடக்கை பெருவிறற்கிள்ளி என்பவனும், இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்பவனும், கரிகாலனது புதல்வியும் புதல்வர்களும் ஆவரென்று கூறுவாரும் உண்டு. திருமாவளவன் நல்லெழிலும் அருங்குணமும் வாய்ந்த தம மனைவியர் பலரொடும் மக்களோடும் இன்புற்று இனிது வாழ்ந்திருந்தனன். அவன் சோழர்கட்குரிய ஆத்திமாலையையும், புலிக்கொடியையும உடையவனாய் ஆன்றோராற் சிறப்பித்துக் கூறும் உறையூரின்கண் அமர்ந்து இன்ப அரசு நடத்தி வந்தான். அவன்புகழ் உலகெங்கணும் பரவியது. சேட்சென்னியின் மக்கள் ஒன்பதின்மரும் அவன் புகழ் கேட்டுப் புழுங்கிய உள்ளத்தராய்த் தீநெறி பற்றி ஒழுகுவராயினர். திருமாவளவன் இன்னா செய்தார்க்கும் நன்னயம் செய்யும் இயல்பினன் ஆதலின், அவர்களுக்கு யாதொரு இடையூறும் செய்திலன். திருமாவளவன் ஆன்றோர், புகழ்ச் சோழநாட்டை இனிது பரிபாலித்து வந்தனன்.

# 6. பூம்புகார்

ஒரு நாட்டின் சிறப்பெல்லாம் அந்நாட்டின் செல்வநிலை, கைத்தொழில், வேளாண்மை, வாணிபம், கல்வி முதலியவற்றாலேயே கணித்தறியப்படுகின்றது. "சோழ நன்னாடு சோறுடைத்து" என ஒளவையாரால் போற்றிப் புகழப்பட்டது என்பது யாவரும் உணர்ந்ததே. உலகிற் கல்வியறிவால் உய்வழி கண்ட மக்கள் தம் நாட்டை எவ்வாற்றானும் சீரும் சிறப்பும் பெற்றுப் பொலியுமாறு செய்கின்றனர். அன்னார் பல்வேறு நாடுகளிலும் விளங்கிடும் செல்வ நலங்களையெல்லாம் தாமும் தம் நாட்டிற் பெற்று அனுபவிக்கப் பாடுபடுகின்றனர். அரசனாயிருப்பவன் நாட்டின் முன்னேற்றத்தை நாடியவனாய் நாட்டிற் கல்வி, வாணிபம், வேளாண்மை முதலிய கைத்தொழில்கள் செம்மையாய் நடைபெறுதற்குரிய துறைகளில் ஊக்கமும் முயற்சியும் கொண்டு பாடுபடத் தக்கவனாவன். திருமாவளவன் தன்னாட்டை மேம்படுத்த எண்ணினான். கரிகாலன் நாங்கூர் வேள் மகளை மணம் புரிந்துகொண்டதும் பெரும் நன்மையேயாயிற்று. நாங்கூர் வேளிர் அனைவரும் அழுந்தூர் வேளிர்களுக்கு உறவின்முறை ஆனவர்களே. இந்நிலையில் நாங்கூர் வேளிர்களும் அழுந்தூர் வேளிர்களும் கரிகாலனுக்கு உறவினராயினர். இரும்பிடர்த்தலையார் தன் மருகன் எவ்வாற்றானும் துணைவலி பெற்றுச் சீரும் சிறப்பும் எய்தி வாழ்தல் வேண்டுமென்று விழைவு கொண்டனர். நாங்கூர் வேண்மாளைக் கரிகாலன்



மணந்து கொண்டது இரும்பிடர்த்தலையாரின் விழைவை நிறைவேற்றியது. கரிகாலன் வேண்மாளோடும் மற்றை மனைவியரோடும் அருளும் அன்பும் தாங்கி அறவோர்க்களித்தல், அந்தணரோம்பல், சுற்றம் தழுவல், விருந்தினர்ப் பேணல், இரவலர்க்களித்தல் முதலியனவாகிய இல்லறத்தானுக்குரிய நல்லறத்தைச் செவ்வனே ஆற்றி இனிது வாழ்ந்திருந்தனன்.

கரிகாலன் தன்னாட்டை மேம்படுத்தும் எண்ணத்தை இரும்பிடர்த்தலையார் முதலாய பெரியோரனைவரிடத்தும் கூறிச் செயத்தகுவது யாதெனக் கேட்டனன். திருமாவளவனின் பெருநோக்கத்தை நன்கு அறிந்துகொண்ட பெரியோர்கள் அவனோடும் கலந்து உசாவி அதற்கேற்றவாறு செய்யத் துணிந்தனர். ஒரு நாட்டின் முன்னேற்றம் அதன் செல்வ நிலையாலேயே நிலைநாட்டற்பாலதாதலால் அச்செல்வ நிலையை மேம்படுத்தும் முறையைக் கரிகால் வளவன் ஆராய்ந்து பார்த்தான். ஒரு நாட்டின் செல்வநிலை அந்நாட்டின் வாணிபத்தாலேயே பேணிக்கொளற்பால தென்பதையும், வேளாண்மையை விருத்திசெய்தல் வேண்டுமென்பதையும், கரிகாலன் நன்குணர்ந்திருந்தான். அலைகடல் நடுவிற் பலகலம் போக்கி வாணிபம் பேணிப் பொருளீட்டுவது சிறப்புடைய நெறி என அவன் உணர்ந்தான். வாணிபத் துறையை மேம்படுத்தும் வழியை ஆராய்கின்றபோது உறையூர், கடற்கரைக்கு வெகுதூரத்தில் [illegible] இருந்ததால் அந்நகர் வெளிநாட்டு வாணிக முறைக்குச் சிறந்த

தாகாதென மனத்திலெண்ணிக் கடற்கரையை யடுத்ததும் இயற்கையான துறைமுகத்தையுடையதும், வெளிநாட்டு வர்த்தகத்திற்கு உதவிபுரியக் கூடியதுமான காவிரிப்பூம் பட்டினமே சிறந்ததென எண்ணி, உறையூரினின்றும் காவிரிப்பூம் பட்டினத்திற்குத் தலைநகரை மாற்ற எண்ணினன். தான் எண்ணியதை அரசன் அறவோர் அனைவருக்கும் எடுத்துக் கூறினான். அவர்களும் அவன் கருத்திற் கிசைந்தனர். உடனே மன்னன் உறையூரை விடுத்துக் காவிரிப்பூம்பட்டினத்தைத் தலைநகரமாகக் கொண்டான். காவிரி நதி கடலோடு கலக்கும் இடத்திற் சங்கமுகம் என்னும் துறையினையுடைய காவிரிப்பூம்பட்டினம் சோழநாட்டிற்கு இராஜதானியாயிற்று. சோழர் குடியில் வந்த அரசர்கள் காவிரிப்பூம்பட்டினம், உறையூர் முதலான நகர்களை மாறிமாறி இராஜதானியாகக் கொண்டு, ஆட்சி புரிவதும் உண்டு. இரு நகர்களையும் ஒரே அரசன் காலத்தில் இரு தலைநகர்களாகக் கொள்ளுதலும் பண்டும் பின்னும் இருந்து வந்த வழக்கமாம். காவிரிப்பூம்பட்டினம் இயற்கையாகத் துறைமுகத்தைப் பெற்றிருந்ததினால் மேல்நாட்டாரோடு கப்பல் வியாபாரம் புரிந்திட வசதியாயிருந்தது. மற்றும் அப் பட்டினம் தமிழரசர்களது தலைநகரங்களான மதுரை, வஞ்சி, தொண்டி, கொற்கை முதலிய பட்டினங்களுள் தலை சிறந்து விளங்கியது. அப்பட்டினம் பண்டையில் பெருநகராகப் பெருமையுற்றிருந்ததென்பதை இளங்கோவடிகளும் பிறரும் எடுத்துரைக்கின்றவாற்றால் நன்கு உணரலாம்.



காவிரிப்பூம்பட்டினம் தொன்மை மேன்மையில் மிக்கது. இந்திரன் முதலிய இமையவரும் அந்நகரின் பொலிவைக் கண்டு போந்திருந்தனரென்று தொன்னூல்களால் அறியக்கிடக்கின்றது. மற்றும், காந்தமன் என்னும் அரசன் அந்நகரினைத் தலைநகராகக்கொண்டு அரசாண்டு வந்தானென இற்றைக்கு ஆயிரத்து எண்ணூறு வருடங்கட்கு முன்பு இருந்த கூல வாணிகச் சாத்தனார் என்னும் புலவரால் எழுதப்பட்ட மணிமேகலையினால் அறியக்கிடக்கின்றது. அக் காந்தமன் சோழர் குடியிற் பிறந்தவனென்றும், ஜமதக்கினியின் புதல்வரான பரசுராமர் க்ஷத்திரிய குலத்தை வேரறுத்திடுவதாக உறுதிகொண்டு கொலைத் துணிந்த காலத்தில் அக் காந்தமன் காவிரிப்பூம்பட்டினத்தில் அரசாட்சி செய்துகொண்டிருந்தானென்றும் பழைய நூலால் அறியக்கிடக்கின்றது. ஆகவே அந்நகர் இராமாயணகாலத்திற் சிறந்து விளங்கிய நகரமென்று கூறுவதில் யாதொரு ஐயப்பாடுமில்லை. அந்நகருக்குப் பூம்புகார், புகார், காகந்தி, சம்பாபதி, காவிரிப்பூம்பட்டினம் என்று பெயர்கள் வழங்கி வந்தன. பெரிப்ளஸ், டாலமி என்ற பிறநாட்டுத் தேச சஞ்சாரம் செய்யவந்தவர்கள் காமாரம், கபேரிஸ் என்று பெயர்களிட்டழைத்தனரெனச் சரித்திர நூல்கள் கூறுகின்றன. காவிரிப்பூம்பட்டினம், பல்லவனீச்சரம் என்னும் பனிமதிசூடும் சடைமுடிப் பெருமான் தலத்திற்கு அடுத்து விளங்குவதாகும்.

கரிகாலன் அதனைத் தலைநகராகக்கொண்டு ஆட்சி புரியத் தொடங்கியதும் அந்நகரினைப்

பொன்னுலகோர் போற்றும் அமராவதியோ என்று கூறத்தக்க நிலையில் அழகுபடுத்தினன். அந்நகரம் பட்டினப்பாக்கம், மருவூர்ப்பாக்கம் என இரு பிரிவினையுடையதாயிருந்தது. பட்டினப்பாக்கம் அரசவீதி, விழாவீதி, அரண்மனைகள், புரோகிதர், அந்தணர், மந்திரிகள், மருத்துவர், சேனாபதிகள் முதலியோர் வசிக்கும் மாளிகைகளும், நியாயஸ்தலங்களும் விளக்கமுற்றிருக்க அழகுறப் பொலிவதாகும்; ஆவண வீதிகளும், வணிகர் வீதிகளும், வேளாளர், இடையர் வீதிகளும், இசைக்கருவியாளர், சூதர், மாகதர், ஜோதிடர் வாழும் மாளிகைகளும் நிரம்பப்பெற்றது. அகன்ற விசாலமான அப் பாக்கத்தின் தெருக்களில் யானை, குதிரை, தேர் என்பன போய்க்கொண்டும் வந்து கொண்டுமிருக்கும். இடையிலுள்ள பொதுவிடங்களை நாளங்காடி என்று வழங்குவர். அதில் பகற்பொழுதே கடைகள் கூடும். அங்குப் பண்டங்களை விற்போர் வாங்குவோர்களின் ஓசை நிறைந்திருக்கும். அப் பட்டினப் பாக்கத்தில் பல வகை மன்றங்களும் மண்டபங்களும் உண்டு. எங்கும் மலர்தரு மரங்களும் கனிதரு மரங்களும் நிறைந்திருக்கும். மற்றும் திருமால் கோயில், பலதேவன் கோயில், குமரகோட்டம், வாசவன் கோயில், சிவன் கோயில், வச்சிரக்கோட்டம், அருகன் கோயில், புத்த விகாரம் முதலிய தேவாலயங்கள் சிறுசிறு குன்றுகள்போற் செறிந்து விளங்கும். எங்கும் உதயமண்டபமும் பொழுதுபோக்கிடங்களும் நிறைந்து காணப்படும்.



மருவூர்ப்பாக்கமோ நிலாமுற்றங்களும் மாடங்களும் உடைய சோலைகளுக்கிடையே விளங்கும். கூல வீதிகளில் நெல் முதலிய தானியங்களும், கடைவீதியில் முத்து, பவழம் முதலிய இரத்தினங்களும், பட்டாடை முதலியவைகளும் குவித்தும் தொகுத்தும் வைக்கப்பட்டிருக்கும். பூ, முகவாசம், சந்தனம், அகில் முதலிய வாசனைத் திரவியங்களை விற்போர் வீதிகளிற் சுற்றித்திரிவர். பட்டு, மயிர், பருத்தியினாற் செய்யப்பட்ட கம்பளங்கள் எங்கும் நிறைந்து விற்கப்படும். நெய்வோரும், கொல்லரும், தச்சரும், கன்னாரும், பிறருமான பல்துறைத் தொழிலுடை மக்கள் அங்கு வசித்து வந்தனர். வியாபாரத்தின் பொருட்டுக் காவிரிப் பூம்பட்டினத்திற்குக் கப்பலோடு வந்த யவனர்கள் செல்வத்தாற் சிறந்த அந்நகரின் ஓரிடத்தே வசித்து வந்தனர். சுங்கச் சாலைகளும் (Custom House), கலங்கரை விளக்கமும் (Light House) மருவூர்ப்பாக்கத்தேதான் அமைந்திருந்தன. அந்நகரிற் காவிரிச் சங்கமுகத் தீர்த்தமே அல்லாமல், சோமகுண்டம், சூரியகுண்டம் என்னும் புண்ணிய தீர்த்தங்களும் இருந்தன. மற்றும், பல்வகைத் தெய்வங்களுக்கும் கோயில்கள் கட்டப்பட்டு விளங்கின.

காவிரிப்பூம்பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு முசுகுந்தன் என்னும் சக்கரவர்த்தி ஆண்டுவந்தான். அவன் இந்திரனுக்குற்ற துன்பத்தையறிந்து விண்ணாடு சென்று அசுரர்களோடு கடும்போர் புரிந்து அவர்களைக் கொன்று இந்திரன் துன்பத்தைத் துடைத்தான். அவன் செய்த

பேருதவிக்காக இந்திரன் கைம்மாறாகப் பூதம் ஒன்றைக் கொடுத்தான். அப்பூதம் நாளங்காடியில் வந்து தங்கியது. அப்பூதத்திற்கு மறக்குடி மகளிரும் தாழ்குடிப் பெண்களும் பலியிட்டுக் கொண்டாடுவர். அவர்கள் குரவை முதலிய கூத்துக்களையும் ஆடுவர். அந்நகரிற் சிறந்து விளங்கிய மன்றங்களுள் பட்டிமண்டபம் என்பதும் ஒன்று. அது மகதநாட்டு மன்னனால் கொடுக்கப்பட்டதாகும். அது மயன் என்னும் தெய்வத் தச்சனாற் செய்யப்பட்டுப் பொன்னும் மணியும் பொருந்திட விளங்கும். அங்கு அமைச்சரும் அரசரும் அருங் கவி வாணரும் நிறைந்திருப்பர். அடுத்ததாகிய வெள்ளிடை மன்றம் வெளியான ஓரிடத்திலிருப்பதாகும். அங்குப் பண்டப்பொதிகளை அடுக்கிவைத்திருப்பர். அங்கு வைத்த பொதிகளை எவரும் கவராட நினையார். அவற்றைக் கவராட நினைப்பாராயின் அம்மன்றத்திலுள்ள பூதம் அவர்களைத் துன்புறுத்தும். அடுத்ததாகிய இலஞ்சி மன்றம் என்பது நீர் நிறைந்த அழகியதோர் குளிர்ந்த பொய்கை. அதிற் படிந்தோர் எத்தகைய நோயுடையராயினும் நோய் நீங்கப்பெற்று வலியும் வனப்பும் ஒருங்கெய்தப் பெறுவர். அப்பொய்கையில் தினந்தோறும் எண்ணிலடங்காப் பற்பல தேயத்து மக்கள் வந்து குளித்து நீராடி நோய் நீங்கப் பெற்றுச் செல்வர். கல் மன்றம் எனப்படுவது கண்ணாடிக்கல்லால் செய்த பெரிய தூணொன்று நடுவண் விளங்குவதாய்ப் பரந்த இடத்தை யுடையதாகும். அத்தூண் மிக்க ஒளி வீசும். அதனை



வணங்கி நிற்பார் தம் வடிவை அதிற் காண்பார். மருந்தூட்டப்பட்டாரும், பித்தேறியவரும், பாம்பினாற் கடியுண்டவரும் அத்தூணை வணங்கி நிற்பாராயின் யாவும் நீங்கப்பெறுவர். பாவைமன்றம் என்பது ஒரு பெருவீதியின் நடுவண் பிரதிமை ஒன்று நிலை நாட்டப்பட்டுள்ள இடம். அரசன் நீதிமுறையினின்று வழுவினானாயினும் அறம் கூறும் அவையத்தோர் நடுவு நிலையினின்று வழுவினாராயினும் அப் பாவை அழும். அதனால் முறை யல்லன செய்தார் நீதிநெறி பற்றி ஒழுகிச் செய்த குற்றத்திற்கு மன்னிப்புப் பெறுவர். பூதசதுக்கம் என்னும் தெய்வத்தன்மை பொருந்திய மன்றம் ஒன்று அந்நகரில் இருந்தது. அது நாற்சந்தியின் நடுவண் அமையப்பெற்றது. அம்மன்றத்தின் நடுவில் ஓர் பூதம் நிலைநாட்டப்பட்டிருந்தது. அதனைச் சதுக்கபூதம் என்பர். அது பேசுந் தன்மையுடையது. அது குரல் கொடுத்து விளித்தால் நான்கு காவத தூரம் கேட்கும். தீத்தொழில் புரிவோர்களையும், வஞ்சித்துத் திரிவோரையும், கற்பிற்றவறும் பெண்டிரையும், பிறன்மனை விரும்பும் பேதையையும், பொய்க்கரிபோகும் மானிடரையும், புறங் கூறுவோர்களையும், அரசரை வஞ்சிக்கும் அமைச்சர்களையும் தம் கைப் பாசத்தினால் கட்டி நிலத்தில் ஓங்கியடித்துக் கொன்று தின்றுகளிக்கும். பட்டி மண்டபம் முதலாகப் பல்வேறு மன்றங்களுக்கும் பூத சதுக்கத்துக்கும் மக்கள் பொங்கலிட்டுப் பூசித்துத் திருவிழாக் கொண்டாடுவார்கள்.

சூரியகுண்டம், சோமகுண்டம் எனும் இரு பொய்கைகளும் காவிரி நதி கடலோடு கலக்குமிடத்தில் உள்ளன. அவற்றிற்கருகில் காமன் கோயில் ஒன்றுண்டு. நெய்தல் மலர்களின் இதழ்கள் நிறைந்த நறுமணம் வீசும் சோலையின் நடுவே அது விளங்கும். அந் நீர்நிலைகளில் நீராடிக் காமன் கோயிலுக்குச் சென்று அத்தேவரை வழிபடுவாராயின் பிரிந்த கணவரை இம்மையிற் கூடி இன்புற்று, மறுமையிலும் போகபூமியிற் போய்ப் பிறப்பர் என்று கூறுவர் புலவர்.

முன்னொருகாலத்தில் தேவேந்திரன் அசுரர்களால் மிகத் துன்புற்றான். அக்காலத்தில் திருமாவளவனுடைய முன்னோர்கள் அவ்வசுரர்களைக் கொன்று இந்திரனை அத்துன்பத்தினின்றும் நீக்கினார்கள். அதனால் மகிழ்வுற்ற இந்திரனால் முன்னார்க் கூறப்பட்ட மன்றங்களும் குன்றங்களும் கொடுக்கப்பட்டனவாம். அவைகள் அக் காவிரிப் பூம்பட்டினத்திற்குச் சிறப்பையும் மேன்மையையும் அளித்தன. அக்காலத்தில் அப்பட்டினத்திற்கு ஒப்பானதும் மிக்கானதுமான பிறிதொரு பட்டினம் இல்லை. கரிகாலனுடைய முன்னோர்களிற் சிலர் அப் பட்டினத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டிருந்தார்கள். சிலர் அதனை விடுத்து உறையூர் முதலானவற்றையும் கொண்டனர்.

பூம்புகார் என்னும் அந்நகரில் ஆண்டுகள் தோறும் இந்திரன் விழா நடைபெற்றுவந்தது. அப் பூம்புகாரைத் தலைநகராகக்கொண்டு பண்டொருகால் தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன் என்னும் அரசன் ஆட்சி புரிந்துவந்தான். அவன் காலத்தில் மழை பொய்த்ததனால் நாடு வறுமையுற்றது. மக்கள் பெரிதும் வருந்தினர். அதனையறிந்த சோழன் அகத்திய முனிவரையடைந்து என்செய்வதென்று கேட்டனன். அவர் ஆண்டுதோறும் இந்திரனுக்கு விழா நடத்தி வருவாராயின் பொய்யாது மழை பொழியும் என்றும், அதனால் நாட்டில் வறுமை குன்றுமென்றும், நாடு செழிக்குமென்றும் கூறினர். தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் இந்திரனுக்கு விழா நடத்தினான். நாட்டில் மழைபொழிந்தது. நாடு வற்கடத்தினின்றும் விடுபட்டது. நீர்வளம் மீக்கூர நாட்டில் வளப்பமும் செல்வமும் மிக்கோங்கின. அதுமுதல் சோழவரசர்கள் ஆண்டுதோறும் இந்திரனுக்கு விழா நடத்தி வந்தனர். இந்திர விழாவை ஒருநாளும் நடத்துதற்கு மறந்திடார். அந்நாட்டோர் அவ்விழாவை நடத்துதற்கு மறந்திடுவராயின் நாளங்காடிப் பூதம் துன்புறுத்துமென்பதையும், தீநெறிபற்றி ஒழுகுவோர்களைப் பாசத்தாற் பிணித்துக் கொல்லும் தகைமை வாய்ந்த சதுக்கபூதம் அந்நாட்டைவிட்டகலுமென்பதையும் அறிந்திருந்தனர். ஆதலின் இந்திர விழா சோழர்களாற் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட விழாக்களில் ஒன்றாம். திருமாவளவனும் தன் முன்னோர்போல அதனை வழுவாது நடத்தி வந்தனன்.

# 7. சேட்சென்னி மைந்தரின் சூழ்ச்சி

குடகுமலையில் உற்பத்தியாகி, மலையின் வளங்களைக் கவர்ந்துகொண்டு, கீழ்த்திசை நோக்கி ஓடிச்சென்று, சோழநாட்டிற் பரந்து பாய்ந்து, அவ்வளப்பத்தை அந்நாட்டில் தங்கவைத்துச், செல்வ நிலையை யுயர்த்தி, பொய்யாது அளிக்கும் பொன்னி என்னும் காவிரி ஆற்றினைச் சோழர் குலக்கொடி என்று கூறுவர் பெரியோர். சோழ நாடு சமநிலப்பிரதேச மாதலால் அந்நாட்டிற் பல விடங்களிலும் அப்பேராற்றின் கால்வாய்களும் கிளைநதிகளும் பரந்து பாய்ந்து நாட்டிற்கு வளப்பத்தை யுண்டாக்குகின்றன. வேளாண் மாந்தரனைவரும் அந்நாட்டில் விரும்பிக் குடியேறி வேளாண்மையைச் சிறப்பாக நடத்தி வந்தனர். கழனிகளும் தோட்டங்களும் அந்நாட்டில் எங்கும் காணப்படும். கழனிகளில், விதைவிதைத்தலும், களைகட்டலும், எருவிடலும், பரம்படித்தலும், விளையுள்கொளலும் எக்காலத்தும் இடைவிடாது காணப்படும் நிகழ்ச்சிகளாம். வாழை, கரும்பு, மஞ்சள், முதலிய நன்செய் புன்செய்ப் பயிர்கள் எக்காலத்தும் காணலாம். எங்கும் நெற்குவியல்கள் மலைகள்போல் குவிந்திருக்கும். இத்தகைய நாட்டிற் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்னும் நானிலனும் சிறந்து மிளிருமன்றோ! மருதநிலத்து உழவர் ஓதை எழுகடல் ஓதையையும் அடக்கும். கழனிகளில் தாமரை, அல்லி, நீலோற்பலம் முதலிய மலர்கள் மலர்ந்து காணப்படும். சுருங்கச் சொல்லின் சோணுடு புண்ணிய நதியாம் பொன்னியாற்றால் பெருமை பெற்று விளங்குவதாகும்.

திருமாவளவன் தன்னாட்டை மேன்மேலும் சிறப்புப்படுத்த எண்ணி ஒவ்வொரு நகரிலும் நியாயத்தலங்களை அமைத்தான்; அறச்சாலைகளையும் கல்விச்சாலைகளையும் ஏற்படுத்தினான். திருமாவளவன் காவிரிநதிப் பெருக்கால் தீமை விளையாதபடி அந்நதி பாயும் ஊர்களிலெல்லாம் இரு கரைகளிலும் கரைகட்டும்படி தன் சிற்றரசர்களுக்கு ஆணைதந்தான். அவ்வாறு ஆணைபெற்றருள் பிரதாபருத்திரனும் ஒருவனவன். கரைகள் கட்டிய பின் கரிகாலன் பற்பல கால்வாய்களையும் வடிமதகுகளையும் கட்டினான். அதனால் வேளாண் வாழ்க்கை பெருகிற்று. விதைத்த ஒன்று ஆயிரமாக விளைந்திட நாடு வளம்பெற்றது. குடிகளனைவரும் பொன்னிக்கரைகண்ட பூபதி என்றும், தக்க பொன்னி ஆறு கரைகண்ட தரணிபன் என்றும், சாலி நெல்லின் சிறைகொள் வேலி ஆயிரம் விளையுட்டாகக் காவிரி புரக்கும் நாடு கிழவோன் என்றும், கரிகால் பெருவளத்தான் திருமாவளவன் என்றும் அவனை வாயாரப் புகழ்ந்து கூறுவாராயினர். புண்ணிய நதியாம் பொன்னி நதிக்குக் கரிகால்வளவன் திரிசிரபுரத்திற் கடுத்தாற்போல் விளங்கிடும் பேரணையைக் கட்டினனென்றும் கூறுவர். ஆனால், சிலர் அவ்வணையைக் கட்டியவன் இராஜகேசரி வர்மனான வீர இராஜேந்திரன் என்று கூறுவர். திரு

மாவளவன் தன்னாட்டில் ஊர்கள்தோறும், ஏரிகள், குளங்கள் முதலியவற்றையும் வெட்டுவித்தான். மற்றும், நிலங்களை அளந்து கொடுத்துக் குடிகளிடம் சிறிதளவைக் கடமையாகக் கொண்டு பல்லாற்றானும் அக்குடிகளுக்கு நன்மைகளையே புரிதலில் முயற்சியுடையவனாய் இருந்தான். குடி ஓம்பிக் கொள்ளுமா கொள்வோர்க்குச் செல்வம் வெள்ளத்தின் மேலும் பலவாகவன்றே பெருகும்? ஆதலின் திருமாவளவன் செல்வத்தால் நிறைந்து விளங்கினான். எந்நாட்டவரும் முன்னாட்டிக் கூறும் சிறப்பினை யுடையதாகத் துலங்கியது சோழ நன்னாடு.

> " ஏரியும் ஏற்றத்தி னாலும் பிறநாட்டு
> வாரி சுரக்கும் வளனெல்லாந்—தேரின்
> அரிகாலின் கீழுகூஉம் அந்நெல்லே சாலுங்
> கரிகாலன் காவிரிசூழ் நாடு".

என்று புலவர்கள் புனைந்து கூறுவாராயினர்.

முல்லையும் மருதமும் எங்கும் பரந்திருத்தலின் காடுகளும் வயல்களும் நிறைந்திருந்தன. காடுகளிலுள்ள மிருகங்கள் கழனிகளிலுள்ள பயிர்களை மேய்ந்து இன்புற்றிருந்தன. திருமாவளவன் சிற்சில காலங்களில் மனமகிழ்ச்சிக்காக மாவேட்டை புரிதலுமுண்டு. அவன், மாவேட்டைக் கேகுங்கால் வேடர்கள் பலர் அவனைப் பின் தொடர்ந்து செல்வர். வேட்டுவர்கள் வேட்டையாடும் தொழிலினை யுடையவர்கள். அவர்கள் குறிஞ்சி நிலத்தும் முல்லை நிலத்தும் சென்று வேட்டையாடுவார்கள். அவர்கள் வாழ்க்கையை நோக்குமிடத்து நாம் வருந்த வேண்டியதாயிருக்கும். சிற்றிலும்

34185



மரங்களடர்ந்த மலைச்சாரல்களில் அவர்கள் வீடுகள் குடிசைகளாக அமைந்திருக்கும். அம்மரங்களில் வலைகளும் யானைக் கொம்புகளும், புலித் தோல்களும் தொங்கவிடப்பட்டிருக்கும். முட்பன்றி, புலி, கரடி முதலிய காட்டு மிருகங்கள் எங்கும் திரிந்துகொண்டிருக்குமிடத்தில் அவர்கள் அச்சமின்றி வாழ்வர். புலிக்குட்டிகளோடும் யானைக் கன்றுகளோடும், மான் குட்டிகளோடும் அவர்கள் சிறார்கள் விளையாடிக்கொண்டிருப்பார்கள். எளிய வாழ்க்கையை யுடைய வேடர்கள் திருமாவளவனோடு வேட்டைக்குச் சென்று விலங்குகளைக் கலைத்து அவனோடு வேட்டையாடி உதவி புரிவார்கள்.

ஒரு சமயம், திருமாவளவன் வேட்டையாடச் சென்றான். மறவர்கள், வேடுவர்கள், இருளர்கள் முதலியோர் வலைகள், குறுந்தடிகள், வேல்கள், கோல்கள், வில்கள், அம்புகள், ஈட்டிகள் முதலியன கையிற்கொண்டு, நாய்கள் பின் தொடர்ந்து வரப், பறை, தடாரி முதலிய வாத்தியங்கள் ஒலிக்க, அவனுடன் வேட்டையாடச் சென்றனர். காட்டிற் பல விடங்களிலும் வலைகளை விரித்துக் கட்டிப் புதர்கள் தோறும் பதுங்கியிருந்த மிருகங்களைக் கலைத்தார்கள். நாய்கள், ஓடும் மிருகங்களை வளைத்து வளைத்துத் தப்பியோடிப் பதுங்குவதற்கு வழியின்றித் தடுத்து நின்றன. திருமாவளவன் மனமகிழ்ச்சியோடு வேட்டையாட்டத்தில் விருப்புக் கொண்டவனாய்க் கானகமெங்கும் அலைந்து திரிந்து வேட்டையாடுவானானான். இதுநிற்க;

சேட்சென்னியின் புதல்வர்கள் ஒன்பதின்மரும் கரிகாலனுக்கு உண்டாகும் புகழையும் செல்வ மேம்பாட்டையும் கண்டு பொறாமை கொண்டனர். அவர்கள் பல் வகையிலும் அவனுக்கு இடையூறு விளைக்க முயன்று வந்தனர். ஆயினும் அவன் அரசனாக விருந்தானாதலின் அவர்கள் யாதும் செய்யக்கூடவில்லை. வேட்டைக்குச் சென்ற அச்சமயத்திலும் அவர்களால் இடையூறு இயற்ற முடியவில்லை. ஆனால் அவனுக்குப் பெரியதோர் மானக் கேட்டை விளைக்க நினைத்தனர். திருமாவளவன் சீரிய குலத்தில் வந்தோனாதலின் தனக்கு மானம் அழிந்து போகும் நிலை எய்தின் "**மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே**" என்னும் கருத்திற்கிணங்கி உயிர் துறந்து விடுவானென எண்ணினர். அவர்கள் நினைத்த சூழ்ச்சியைச் சிறப்புடைத்தெனச் செப்பினர் சில கயவர். திருமாவளவன் சென்ற காட்டிற்கருகிலிருந்த இடையன் ஒருவன் வீட்டிற்குச் சென்றார்கள். அவ்விடையன் வீட்டில் அழகிய மாது ஒருத்தி இருந்தாள். அவள் அழகில் சிறிது மேம்பட்டவளென்றே கூறவேண்டும். அவளைக்கொண்டே தங்கள் காரியத்தை முடித்துக்கொள்ள எண்ணிய அவர்கள், அவள் வீட்டிற்குச் சென்றார்கள். சேட்சென்னியின் புதல்வர்கள் இடையன் வீட்டை யடைந்து அப்பெண்ணை நோக்கி ஒருவன், "நங்காய் நின் எழிலினைக் காணுந்தோறும் நீ தெய்வ மடமங்கையோ என ஐயுறுகின்றனம். மகிதலம் புகழும் மன்னர் குலத்துதிக்கும் மாண்புடைய நீ இடையர்குலத் துதித்தது என்னே? நின்னைக் காணின்



எவரே நின்னை மணக்க விரும்பாதார். பொற்கொடி போல்வாய்! நான் நின்னை அரசியாக்க விரும்புகின்றனன். ஆதலின் நங்காய்! யான் கூறும் வழியில் நிற்பையேல் எளிதில அரசி ஆகலாம். நின்னைக்கண்ட எனக்கு நின்னை அரசியாக்கவேண்டுமென்ற எண்ணம் தோன்றி, அவ்வவா நின்னிடம் என்னைச் சேர்த்தது. திருவனையாய்! யான் நினக்கு ஒரு தகுதி உரைக்கின்றேன்; கேள். அவ்வாறு ஒழுகுவாயாயின் நீ பல்லோர் போற்றும் பேர் அரசி ஆகிவிடலாம்." எனக் கூறிக் கண்கவர் வனப்புடை ஆடைகள் பலவும், அணிகலன்களும், பொன்னும் அளித்தனன். குல முறையிற் கண்டறியாத உயர்தரு ஆடையணிகளையும் பொன்னையும் கண்டு மகிழ்பூத்த நங்கை, பொருள் மயக்குற்று அவர்கள் வேண்டுகோட்கு இசைந்ததாகக் குறிப்புக்கள் காட்டிநின்றாள். சேட்சென்னியின் புதல்வன் அதுவே தக்க தருணமெனக் கொண்டு "சுடர்த்தொடி நங்காய்! இதுபோது சோழ நன்னாட்டை ஆளும் மன்னன் மாவேட்ட மாட உன்னி இப்பெருவனத்திடை வந்துள்ளான். அன்னான் விரைவில் இப்பக்கம் வருவான். அக்காலை நீ பட்டுடை உடுத்தி நல்லணி அணிந்து சொல்லியல்பெரு நல்லியல் வாய்ந்து மெல்லிய மேனியை ஒல்கிடப் பூங்கொடிபோலப் பொள்ளெனக் காட்டி மெல்ல மறைவாயாயின் அன்னான் நின் வடிவழகில் திளைத்து மலர்முகம் கொண்டு நின்பாலடைந்து வேட்கை வயத்தனாய் மணம்புரிந்துகொள்ளுமாறு நின்னை வேண்டிக் குறையிரந்து நிற்பன்." என்று

கூறினன். அவளும் அவன் கூற்றுக் கிசைந்தனள். சேட்சென்னியின புதல்வர்கள் தம் சூழ்ச்சிகள் பலித்ததென்றெண்ணி அகம் மிக மகிழ்ந்து அவ்விடம் விட்டகன்றனர்.

திருமாவளவன் மாவேட்டையாடிப் பல்வேறு சூழல்புக்கு அலைந்து திரிந்து ஒரு பெரும் சோலையை நண்ணினன். அச் சோலை வானுறவோங்கி வளர்ந்த மரங்கள் நிறைந்தது. பல்வேறு மலர்தரு செடிகள் அங்கு நிறைந்திருந்தன. அதனை அடுத்து ஒரு நன்னீர் ஓடை ஓடிக்கொண்டிருந்தது. மரங்களும், செடிகளும், தளிர்த்துத் தழைத்துப் பூத்து விளங்கின. ஓடையில் நீர் தண்ணென்று தெளிவாக ஓடிக்கொண்டிருந்தது. அச்சோலையில் புள்ஒலி எங்கும் பறந்து கேட்டது. இளந்தென்றல் 'சில்' என்று வீசிக்கொண்டு இருந்தது. வசந்த காலத்தைச் சேர்ந்த அத்தினத்தில் மாவேட்டம் ஆடப்போன மன்னன் திருமாவளவன், தன்னந் தனியனாய் அச்சோலையுட் புகுந்து ஓடையின் அருகில் காணப்பட்ட கற்பாறையின் மீது அமர்ந்தான். இயற்கை வளத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்த மன்னன் கண்களுக்கு விருந்தான ஒரு மாது மின்னற்கொடிபோன்று தோன்றி மறைந்தாள். அவள்பின் கன்று காலிகள் இளந் தளிர்களை மேய்ந்து கொண்டிருந்தன: அவள் அங்கும், இங்கும் அலைந்து மன்னன் கண்களுக்கு மின்னற் கொடிபோன்று தோன்றித் தோன்றி மறைந்தாள், திருமாவளவன் அம் மடக்கொடி மங்கையின் வடிவழகில் ஆழ்ந்து மது உண்டு



மயங்கும் மதுகரம் ஒப்ப மயக்குற்றுச் செயலற்று, வைத்த கண் வாங்காது உற்று நோக்கிக்கொண்டிருந்தான். பொங்கெழில் விளங்கும் நங்கையைக் கண்ட மன்னன் பலப்பல எண்ணிப் பின் ஒருவாறு துணிந்து அவள்பால் அணுகினன்.

மன்னன் தன்பால் அணுகி வருதலைக் கண்டு அம்மட நல்லாள் நாணி ஒதுங்கி நின்றனள். மன்னன் அவள் முன்னின்று, "பொற்பின் செல்வி! இப்பெரும் காட்டிடையுள்ள இச்சோலையில் நீ தன்னந் தனியாய்த் திரிந்து கொண்டிருப்பது ஏன்? வன விலங்குகள் திரியும் இக்காட்டிடத்தே நீ தனிமை யுற்றிருத்தல் தகுமோ? பெண்ணே! நின் வடிவழகைக் காணுந்தோறும் என் மனம் நின்னிடத்தே விரைந்து நாடாநிற்கும். ஆதலின், நின் வரலாற்றை அறிய விரும்புகின்றனன். கிளிநிகர்மொழியாய்! நீ யாவள்? நின் பெயர் யாது? நின் தாய் தந்தையர் யாவர்? இவற்றை எனக்கு விளங்கக் கூறுதி. இப்புவி புகழும் ஒப்பிலா நங்காய்! நாண் என்பது மாதர்க்கு நல்லணி கலனே. எனினும் நீ செம்பவள வாய்திறந்து நின் வரலாற்றைக் கூறுவாய். நின் அமுதனைய மொழிகளை விருப்புடன் கேட்கும் பெரு விருப்புடையேன் என்பதை நீ அறிதல் வேண்டும்,' என்று கனிந்து பரிவுடன் வினவினன்.

இடையர் குலத்து உதித்த அப்பெண் சேட்சென்னியின் புதல்வர்கள் செய்த சூழ்ச்சியின் வயமாகி நின்றனள். ஆதலின், நாணினள்போன்று

பாவனைகாட்டி ஒருபுறத்துக் கடைக்கண்ணால் நோக்கி, “மன்னவ! யான் இளமைப்பருவ முற்றிருந்த காலத்தில் பகைவர்களால் துரத்தப்பட்ட என் தந்தையும் தாயும், என்னோடு இக் காட்டில் வதிந்தனர். என் தந்தை கொடுவாய்ப்புலிக் கோட்பட்டு இறப்ப, என் தாயும் என்னை இக் காட்டிடை வதியும் இடையன் ஒருவ னகத்தே விடுத்து அகன்றாள். இற்றை நாள் அளவும் யான் என் தாயின் செல்லிடம் அறியேன். யான் ஓர் அரசன் மகளே,” என்று கூறினாள்.

அவ்வனிதை மன்னன் மகள் எனக் கூறக் கேட்ட திருமாவளவன் உளமிக மகிழ்ந்தான். பின் அவன் தன் விருப்பத்தை வெளிப்படையாக அவளுக்கு எடுத்துக் கூறினன். நங்கை அவனை நோக்கி, “மன்னவ! உயர் குலத்துதித்த நீர் இழிகுலத்து வாழ்ந்துவரும் நங்கையை மணக்க விரும்புவது நன்றன்று. மற்றும், அடியேன் நின்னை மணக்கப் பெறுவேனேல் யான் நற்பேறு பெற்றேனாயினும் நின் கோயிலினுள்ளாரும், சுற்றத்தாரும், என்னையும், நின்னையும், இகழ்ந்துரையாடுவர். ஆதலின் நீர் யாவரினும் மேலாக என்னைப் பெருமைப்பட வைத்துக்கொள்வீர் ஆயின் யான் நும் கருத்திற்கு இசைதல் கூடும்,” என்றனள். மன்னன் அவள் விருப்பத்திற்கு இணங்கினான். பின், அவன், அவளை யானையின் எருத்தத்தேற்றி அழைத்துக்கொண்டு சென்று அணி நகர்க்குள் புகுந்து அரண்மனை அடைந்தான். பின் அவளை, அவன் விதிமுறை கடவா



நெறியில் மணந்து இன்புற்றிருந்தான். ஆண்டுகள் சில கடந்தன.

சேட்சென்னியின் புதல்வர்கள் அவள்பால் பெண்கள் பலரை விடுத்துப் பல்வேறு வகையில் அவள் குணத்தைக் கெடுத்து அரண்மனையில் உள்ளாரோடு பகை கொள்ளுமாறு செய்தனர். அம்மடந்தை அவர்கள் சொல்வழிப்பட்டு ஆய்ந்தோய்ந்து பாராது அரண்மனையிலுள்ளாரோடு பகை கொண்டனள். அரண்மனையிலுள்ளார் அனைவரும் அவளிடத்தே வெறுப்புற்றுப் பழித்துக் கூறுவாராயினர். அம்மொழிகள் மன்னன் செவிகளுக் கெட்டின. அவளிடத்தே தாழ்ந்த சொற்களும், இழிநடத்தைகளும், உண்டெனக் கேட்டறிந்த மன்னன் அவளுடைய குணஞ் செயல்களை நாடி அறிந்திட விரும்பினன். அவன் பல்வேறு வழியினும் நெடுநாளவரை அவளுடைய நடத்தைகளையும், சொற்களையும், மறைந்து காத்திருந்தறிந்தனன். குலத்தளவே ஆகும் குணம் என்பதும், பொல்லாது சொல்லி மறைந்தொழுகும் பேதை தன் சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும் என்பதும், மணலுள் மூழ்கி மறைந்து கிடக்கும் நுணலும் தன் வாயால் கெடும் என்பதும் ஆன்றோர் மொழிகள் அன்றோ? குணஞ் செயல்களால் அவளது மாறுபாட்டை அறிந்த மன்னன் தன்னை வஞ்சித்து நின்ற தகைமையை எண்ணி அடங்காச் சினங்கொண்டு உடைவாளைக் கையில் ஏந்தி வயனாய் அவள் முன் வந்து, “கள்ளீ! நீ கொடியள்—ஓ—நஞ்சினும் கொடியள், நின் பசப்பு

மொழிகளால் என்னை ஏமாற்றினை. நீ யார்? எக்குலத்தினள்? வஞ்சித் தொழுகும மதியிலி! இனியும் வஞ்சித் தொழுகல் இயலாது. உண்மையைக் கூறு; இல்லையேல் நின்னை இவ் வாளுக்கு இரையாக்குவேன்." என்று உரப்பிக் கூறினான்.

மன்னன் சினங் கண்டு மெய்ந்நடுக்குற்ற மங்கை வாய்குழறத் தன் வரலாற்றை விளங்க எடுத்துக் கூறினாள். சேட்சென்னியின் புதல்வர்களால் தூண்டப்பட்டு ஆட்டுவிப்போன் தன்மையில் ஆடும் பாவைநிகர் மங்கையின் மதியின்மையை அறிந்து வருந்தித் தான்கொண்ட சினம் தணிந்து அவளைத் தனிமாளிகை ஒன்றில் இருத்தி அவளுக்கு ஏற்ப ஒழுகிவரலாயினன். சேட்சென்னியின் புதல்வர்களின் சூழ்ச்சியும், திருமாவளவனின் அறிவுடைச் செயலும், அந்நாட்டில் எல்லோருக்கும் தெரியலாயின. அந் நாட்டவர் சேட்சென்னியின் புதல்வர்களிடத்து வெறுப்பும் திருமாவளவனிடத்தில், அவன் அறிவு கண்டு புகழ்ந்து, அன்புகொண்டும் ஒழுகினர். சேட்சென்னியின் புதல்வர்களோ தங்கள் சூழ்ச்சி பலவும் பயனற்றவையானமை கண்டு வருந்திச் செய்வதறியாது திகைத்தனர். மற்றும், நாட்டவர் பழிப்புரை நாளும் பெருகுதல் கண்டு நலிவுற்றனர். அந்நிலையினும் அவர்கள் திருமாவளவனிடத்தே, பொறாமை யுற்றிருந்தனர் என்றால் அவர்கள் அறிவின்மையை என் என்று கூறுவது? அத்தகைய கொடுமனம் கொண்ட சேட்சென்னியின்



புதல்வர்களிடத்துத் திருமாவளவன் சிறிதும் கொடுமை பாராட்டிலன். அன்னான் அவர்கள் அறியாமைக்கு மிகவும் வருந்தினான். அவர்களை நல்வழிப்படுத்தலும் இயலாததாம் என்பதை உணர்ந்த திருமாவளவன் தன்னைத்தானே காத்துக்கொண்டு அவர்களைச் செல்லு நெறியில் விட்டு விட்டான்.

# 8. திருமாவளவன் வெற்றிமேம்பாடு

திருமாவளவன் நாட்டிற்கு நலம் பல புரிந்து அரசாண்டு வந்தான். திருமாவளவனின் மாட்சி ஓங்க ஓங்கச் சேட்சென்னியின் புதல்வர்களின் உள்ளம் புழுங்கின. உலகிற் பொறாமை என்னும் குணம் மக்கள் மனத்தைக் கொள்ளை கொள்ளுமாயின் அன்னார் செய்வினை அறியும் திறன் படையாது, நல்வினை குன்றத் தீவினையால் நலிந்து அல்லன செய்தற்கு ஒருப்பட்டு அல்லல் கூறுவர். அக்காலை, அவர்களைப் பேய்க்கோட்பட்டாரென்றே கூறிவிடலாம். எத்துணைப் பெரியார்கள் வந்து விழுமிய நல்லுரைகள் கூறினும் யாவும் செவிடன் காதில் ஊதும் சங்கே யாகும். அன்னார் செய்யப்புகும் கருமங்கள் யாவை என்பதையும், எத்தகைய விளைவுண்டாகும் என்பதையும் சிறிதும் சிந்தித்துணரார்கள். அந்தோ! பொறாமை என்னும் பேய்க்கோட்பட்டார் அல்லலுற்று நலமிலா வாழ்க்கையில் நாளும் மனக்களிப்பின்றி வாழ்நாளைக் கழிப்பர். பொறாமையே கோபம், கொலை முதலிய தீக்கருமங்களுக்குக் காரணமாகும். பொறாமையே பகைமையைத் தோற்றுவித்து அழியாப் பழியையும் துன்ப முடிவையும் உண்டாக்கும்.

சேட்சென்னியின் புதல்வர்கள் பொறாமை மிகுதியாலும், பகைமையாலும் எவ்வாறாயினும்



திருமாவளவனுக்குக் கேடு சூழ நினைத்தனர். அவர்கள் நெடுநாட்களாகச் சிந்தித்துக் காலமும் இடனும் கருதி இருந்தனர். உலகில் ஒத்த நிலைமையை உடைய அரசர்களுள் ஓர் அரசன் பேரும், புகழும் படைத்துச் சீரும் சிறப்பும் எய்துவானேல் அத்தகைமை பிறவரசர்கட்குப் பொறாமையையும், பகைமையையும் உண்டாக்கும் அன்றோ! உலகில் மன்னர்களுக்குள் போர் நிகழ்தலின் காரணத்தை ஒருவன் சற்றுச் சிந்தித்துக் காண்பானாயின் மண் காரணமாகவன்றோ நிகழ்வது என்பது வெள்ளிடை மலைபோல் விளங்கா நிற்கும்.

அக்காலத்தில் சேரநாட்டைச் சேரன்பெருஞ்சேரலாதன் என்பான் ஆண்டுவந்தான். அவன், அறிவு ஆற்றலாலும், வள்ளன்மையாலும் சிறந்தவன்; எதற்கும் அஞ்சா நெஞ்சு படைத்தவன்; பகைவர்களைப் போர்முனையிற் கலக்கி வலியழித்து வெற்றிகொள்ளும் விறலோன். அவன் முன்னிய பகையை முடித்துப் பகைவரை வெந்நிட்டோடச் செய்வதில் ஒப்புயர்வற்று விளங்கினான். மற்றும், அவன் அழகும் ஆண்மையும் பொருந்தியவன்.

சேரன்பெருஞ்சேரலாதன், சோழனுக்கு உண்டாகிய சிறப்பும் புகழும் கேட்டு மனம் புழுங்கினான். மும் மன்னர்கள் என்று கூறப்படும் அரசர்களுள் தன்னைப்போல் சோழனும் ஓர் அரசனேயன்றோ? அங்ஙனமாக, அவன் தங்களிலும் மேம்பட்டு விளங்குதல் சேரன் பெருஞ்சேரலாதனுக்குப் பெருந் துன்பத்தை விளைத்தது. ஆதலின்

அவன் மனத்தைப் பொருமை என்னும் பேய் கொள்ளை கொண்டது. அவன் சோழனுக்கு உண்டாயிருந்த வலியையும் புகழையும் ஒடுக்க விரும்பினன். அவன் மனநிலையை எவ்வாருே சேட்சென்னியின் புதல்வர்கள் அறிந்தனர். அவர்கள் அவன்பாலடைந்து ஆவனகூறி அவனிடம் தோன்றிய பகைமையை மிகுவித்தனர். எரி நெருப்பில் நெய் ஊற்றிறுற்போல் சேரன் பெருஞ் சேரலாதனுக்குச் சோழனிடம் பகைமை மூண்டு வளர்வதாயிற்று. சேரலாதன் செவிகளில், சேட்சென்னியின் புதல்வர்கள் கூறிய விஷவார்த்தைகள் அமுதமெனப் புகுந்தன. ஆதலின் தன்னைப் போல் சோழனிடம் பகைமை பூண்டுள்ளார் துணையை நாடுவானுனன்.

மூவேந்தருள் ஒருவனுன பாண்டியன் சோழனிடம் பகைமையும் பொருமையும் பூண்டவன். அந்தோ! உலகில் பிறர் ஆக்கம் கண்டு பொருமை கொள்ளல் சாதாரண மனிதர்கட்கு இயல்பு. அத்தன்மை அரசர்களிடமும் உள்ளது என்ருல், அதன் வலிமை என்னென்று கூறுவது! பாண்டியன் சோழன் வலியை அடக்கும் வகையை நாடிக்கொண்டிருந்தான். அந்நிலையில் சேரன் பெருஞ்சேரலாதன் சோழனிடம் பகை பூண்டுள்ளான் என்னும் செய்தி பாண்டியனுக்கு எட்டிற்று. அது அவனுக்கு மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் அளித்தது. தன் ஒற்றர்களில் ஒருவனை அழைத்து அவன்பால் போகவிட்டுத் தன் கருத்தை அறிவித்தான். சேரலாதனும் தன்



கருத்தை விளக்கிப் பாண்டியன் துணையை நாடினன். ஆகவே, சேரனும் பாண்டியனும் சோழனை வலியடக்க ஒருங்கு சேர்ந்துகொண்டு செய்யத் தகுவன யாவை எனச் சிந்திப்பாராயினர். அவர்களிருவரும் சோழனோடு மாறுபட்டு எழுவது கண்டு சேட்சென்னியின் புதல்வர்கள் களிப்பென்னுங் கடலுள் ஆழ்ந்தனர்.

சேட்சென்னியின் புதல்வர்கள் தம் சூழ்ச்சியின் வலியால் அழுந்தூர் நாங்கூர் என்னும் இரு ஊர்களினிடத்துள்ள வேளிர் தவிர மற்றப் பதினெரு வேளிர் குலக் குறுநில மன்னர்களையும் கலைத்துத் திருமாவளவனுடன் பகைமை பாராட்டுமாறு செய்தனர். அவர்கள் சூழ்ச்சி வலையில் சிக்குண்ட குறுநில மன்னர்களும் நாடோறும் உள்ளத்தே பகைமையும் பொருமையும் மிக்கு வளர வளர நாட்டில் பல வேறு இடங்களிலும் குழப்பத்தை யுண்டாக்கினர். திருமாவளவன் அவ்வப்போது எழும் குழப்பங்களைச் செவ்வனே அடக்குவானுயினன். அதனுல் குழப்பங்களை யுண்டாக்குதலினுல் மட்டும் திருமாவளவனுடைய பெருவலியை ஒழித்தல் இயலாதென்பதை யுணர்ந்த வேளிர் ஒருவாறடங்கி வேறு வகையில் அவனை எதிர்ப்பது எனச் சிந்தித்துக்கொண்டிருந்தனர். அந்நிலையில், சேரனும் பாண்டியனும் சோழனோடு பகைத்து எழுதலைக் கண்டு அவர்களுடன் சேர்ந்துகொள்ள வேளிர் பதினெருவரும் விரும்பினர் அவர்கள் சேரன் பெருஞ்சேரலாதனை யடைந்து தம் கருத்தை வெளியிட்

டனர். சேரன் கொண்ட களிப்பிற்கும், பெருமிதத்திற்கும் அளவே இல்லை. சோழன் வலியை அடக்குவது எளிதே என அவன் மனத்தில் தோன்றிற்று. பின், அனைவரும் ஒருங்கு கூடி எக்காலை படையெடுத்துச் செல்வதென ஆலோசித்து ஒருவகை முடிவிற்கு வந்தனர். பாண்டியன், சேரன், வேளிர் ஆய எல்லோரும் படைவலி கொண்டு தாங்கிச் சோழன் வலியழித்து வெற்றி கொண்டு தம் புகழ் பெருக்க எண்ணிப் போருக்கு வேண்டுவனவற்றை ஆயத்தப்படுத்தினர். சேட்சென்னியின் புதல்வர்களோ, தம் கருத்து முற்றுப்பெறுங்காலம் நெருங்கியது கண்டு அளவிலா உவகை கொண்டனர்.

சேர பாண்டியர்களின் சூழ்ச்சியை முருகற் சீற்றத்து உருகெழு குரிசிலான திருமாவளவன் உணர்ந்தான். இரு பெரு வேந்தரும் பதினொரு வேளிரொடு ஒருகளத்தவியப் பொருவதற்குத் தானைகள பலவும் தகுமுறையில் சித்தப்படுத்திக் கொண்டான். அவனுடைய தானைத் தலைவர்களோ அவனை யணுகி வணங்கி, "மன்னவ, நெடுநாட்களாகப் போரில்லாமையால் சேனையில் உள்ள வீரர்கள் வாளா உண்டு வாழ்கின்றனர். அவர்கள் போரை விரும்பி எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றனர். அன்னோர் ஆயுதங்களோ துருப்பிடித்துள்ளன. எங்கள் பூரித்த புஜங்களோ நசை பெரிதுடையவாயின. களி இயல் யானைக் கரிகால்வளவ! அச் சேர பாண்டியர் இக்காலை போர்தொடுத்து வருவாராயின் அவர்களுக்கு நாங்கள் நன்றியறித லுடையராவேம். நின் கொற்றம் வாழ்வதாக," என்று கூறி நின்றனர். சோழன் கரிகாலன், சேர பாண்டியர் எக்காலைத் தோன்றி எதிர்ப்பினும் அக்காலை எதிர் ஊன்றி அவர்களோடு பொருது வெற்றிகொள்ளச் சித்தமாயிருந்தனன்.



சேர பாண்டியரும் வேளிரும் படைகளைத் திரட்டிக்கொண்டு சோழநாட்டின்மீது படை எடுத்துவந்து தாக்கினர். திருமாவளவன் தன் சேனாவீரர்களைத் திரட்டிக்கொண்டு மறப்பண்பு மிகப் போரினை விரும்பி அவர்களை வெண்ணிப் பறந்தலையில் எதிர்சென்று தாக்கித் தேக்கி நின்றனன். இரு பெருவேந்தரும் பதினொரு வேளிரும் கொணர்ந்த பெருஞ் சேனையினும் பன்மடங்கு அதிகமான சோழன் சேனைகள் கடுவரை நீரில் கடுத்து வரக்கண்டு அவர்கள் அஞ்சினர். மாற்றலர் கூற்றார் மேவச் செகுத்திடும் திறல்வாய்ந்த சோழன் சேனாவீரர்கள் ஆரவாரித்து எதிர்த்துத் தேக்கித் தடுத்துநின்ற தகைமை கண்ட சேர பாண்டிய வேளிர் சேனாவீரர்கள் நெஞ்சுடைந்து நிலை அழிந்தனர் என்பது பொய்யன்று. போரும் தொடங்கிற்று. இருதிறத்தார் சேனைகளும் காய்கெழு சினம் மிகப் பொரலாயின. ஆயினும் என்னே! அக் கன்னிப் போரிலேயே சோழன்—திருமாவளவன் தன் ஆற்றல் தோன்றப் பொருதனன். ஒவ்வொரு கணமும் சேர பாண்டியர்கட்குத் தோல்வியைத் தரும் என்று தோற்றி நின்றது. சோழன் தானே போர்க்களம் குறுகிப் பகைவர்களை எதிர்த்துப் போர் புரிந்தனன்

ஓர் சமயம் திருமாவளவன் ஓர் அம்பு தொடுத்து விடுத்தனன். அவ்வம்பு சேரலாதனது மார்பிடம் துளைத்து ஊடுருவி முதுகின் வழியாக வெளிப் பட்டு அப்பாற்சென்று பிறர்மேலும் தைத்தது. முதுகிற்பட்ட புண்ணால் மனமுட்கிப் போர்முனை நீங்கிச் சேரன்பெருஞ்சேரலாதன், கையில் தாங் கிய வாளுடன் வடக்கிருந்து பட்டினிகிடந்து உயிர் துறந்தனன். பாண்டியன் பட்டபாடு எத் தகையது என்று கூறவேண்டுமோ? பாண்டிய னும் பதினொரு வேளிரும் போர்க்களத்தே உயி ரிழந்தனர். அவர்கள் சேனைகளோவெனின் போரிற் பட்டொழிந்தனபோக எஞ்சிய உய்வகை நாடி அஞ்சியோடின. காய்ச்சினமொய்ம்பின் பெரும் பெயர்க் கரிகால்வளவன் வெண்ணிப்பறந்தலையில் பகைவர்களை எதிர்த்து வெற்றிகொண்டதால்மட் டும் சினந் தணிந்திடப் பெறாதவனாய் அவர்கள் நாட்டு ஊர்களையும், மதில்களையும் அழித்து மீண் டனன்.

பகைவர்களைப் போரிற் கலக்கி, அடங்காச் சினத்தோடு நின்ற கடகளிறனைய கரிகால்வளவன் முன் ஒன்பது மன்னர் தத்தம் சேனைகளை அணி வகுத்துநின்று வாகை என்னும் இடத்தில் எதிர்த்து நின்றனர். சோழன் தனித்துள்ளான் என்று கருதியே அவர்கள் அங்ஙனம் ஒருங்கே சேர்ந்து படை எடுத்துத் தடுத்து நின்றனர். சோழன் கரிகாலனோ சிறிதும் நெஞ்சுடையாது அவர்களை எதிர்த்து நின்று பொருதனன். அப் போரில் அவ் வொன்பதின்மரும் பீடழிந்து தத்தம் வெண்



கொற்றக் குடைகளையும் இழந்தவர்களாய், அந்தோ! ஓடி ஒழித்தனர். அவர்கள் குடைகளை யும், ஆயுதங்களையும், ஆனை, குதிரைகளையும் விடுத்துவிட்டோடினர். திருமாவளவன் அவை களைக் கைப்பற்றிக்கொண்டு வந்தனன்.

வரும் வழியில் இருந்தது அருவா நாடு. அதற்கு மாவிலங்கை என்று மற்றொரு பெயரும் உண்டு. அது அருவாவடதலை நாடு என்றும், அருவா நாடு என்றும் இருபெருங் கூறினையுடையது. அதன் தலைநகர் கச்சிப் பெரும்பதி. அப்பெருநாடு சோழ நாட்டின் வடபாலமைந்ததாகும். அந்நாட்டின் கண் குறும்பர் என்னும் ஒருவகைக் கொடிய ஜாதியார் வசித்து வந்தனர். அந்நாட்டில் வாழ்ந்த மக்கள் அக் குறும்பர் என்னும் கொடிய ஜாதி யோரால் அளவிடற்கரிய இன்னலுற்று வந்தனர். குறும்பர், நாட்டில் புகுந்து மக்களுக்குப் பல் வகையிலும் இன்னல் இழைத்துப் பொருள்களை யும் கொள்ளைகொண்டு சென்றனர். அதனால், அந்நாட்டில் வாழ்ந்த மக்கள் அக் கொடியோர்கட் கஞ்சிப் பிற நாடுகளிலும் சென்று வதிவாராயினர். அந்நாட்டிலுள்ளார் படுந் துயரைக் கேள்வியுற்ற திருமாவளவன் அந்நாட்டைச் சீர்ப்படுத்த எண் ணினன். ஆதலின் அவன் அந்நாட்டிற்குட் சென்று அக் குறும்பர்களையும் பிடித்துத் தண் டித்து அவர்கள் வலி அடக்கினன். நாடும் ஒழுங்கு பெற அமைவதாயிற்று. பின், திருமாவளவன் அந்நாட்டை இருபத்துநான்கு கோட்டங்களாகப் பகுத்தான். அவைகளுக்குத் திருமாவளவன் தலை

வர்களை நியமித்தான்; மற்றும் ஆவன நாடிப் புரிந்தனன்.

அக் கோட்டங்களைக் கொண்ட நாடுகள் ஆவன :— ஆமூர், இளங்காடு, ஈக்காடு, ஈத்தூர், ஊற்றுக்காடு, எயில், கடிகை, கலியூர், களத்தூர், குன்றபத்திரம், சிறுகரை, செங்காடு, செந்திருக்கை, செம்பூர், தாமல் படுவூர், பல்குன்றம், புலால் புலியூர், பேயூர், மன்னூர், வெண்குன்றம், வேங்டம், வேலூர் என்பனவாம். மேற்கூறப்பட்ட இருபத்துநான்கு கோட்டங்களிலும் திருமாவளவன் வேளாளர்களைக் குடியேற்றிச் சீர்திருத்தினான். அதனால் நாடும் செழிப்புற்றுச் சிறப்படைந்தது.

பின்னர்த் திருமாவளவன் சச்சிப் பெரும்பதியின்கண் சிறப்புற்று விளங்கா நின்ற காமக்கோட்டத்தின் திருப்பணியை மேற்கொண்டு அப்பணியைச் செவ்வனே செய்து வழிபட்டனன். அக்காலை, வெண்ணிப்பறந்தலை, வாகைப்பறந்தலை என்னும் இருவிடங்களில் வெற்றி கொண்ட விறலோனும் காமக்கன்னியின் திருக்கோயிலைச் செப்பனிட்டு வழிபட்டோனுமாகிய திருமாவளவன் முன், அக்கோயிலின் காவல் தெய்வமாகிய சாத்தனார் தோன்றி அம்மன்னனது சிறந்த தெய்வ பக்தியை மேம்பட எடுத்துப் புகழ்ந்து பேசித் தம் கையிலிருந்த செண்டு என்னும் ஆயுதத்தையும் தந்தருளினார். அக்காலை அத்தெய்வம் அம்மன்னனிடம், "மன்னவ, இச்செண்டால் அடிக்கப்படும் எப்பொருளும் நின் ஆணையில் அடங்கும், நின் கொற்றம் ஓங்குவதாக," என்று கூறி வாழ்த்தியது. அச் செண்டே திருமாவளவன் இமயவெற்பைத் திரித்தகாலையில் கைக்கொண்டதாகும் என்பர் பெரியோர்.



தமிழ்நாட்டின் வடக்கேயுள்ளது வடுகநாடு. தமிழகத்தின் வடபேர் எல்லையாய் விளங்கிடும் திருவேங்கடம் வடுக நாட்டில் உள்ளதாகும். வடுக நாட்டில் வாழ்ந்தோர் வடுகர். அவர்கள் பேசிய மொழி வடுகு எனப்படும். இவ் வடுகு பின் தெலுங்கு எனும் பெயர் பெறுவதாயிற்று. மன்னன் திருமாவளவன் அந்நாட்டையும் தன்னடிப்படுத்திக்கொள்ள விரும்பிப் படை எடுத்துச் சென்றான். வடுக நாட்டில் பல சிற்றரசர்களிருந்தனர். அவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து பெருஞ் சேனையுடன் வந்து திருமாவளவனை எதிர்த்தனர். திருமாவளவனோ அச்சேனை கண்டு அஞ்சுபவன்? அவன் வடுகர்களைக் கொல்களிற்றுக் குழாத்திடை புகும் அரியேறு என்னப் பாய்ந்து அவர்களை முறியடித்து அவர்கள் பின்னிடைந்து ஓடுமாறு செய்து வாகை மிலைந்து ஓகையோடு நின்றனன். வடுகவரசர் வண்டமிழ் மன்னன் வலிகண்டு அஞ்சி வாய்பொத்தி ஏவலில் நின்றனர்.

பின்னர்த் திருமாவளவன் தொண்டை நன்னாட்டை யாண்ட தொண்டைமான் இளந்திரையனையும் போரில் கலக்கி வெற்றிகொண்டு மலையமா நாட்டை நோக்கிச் சென்றனன். அந்நாட்டினை வளப்படுத்துவது பெண்ணையாறு. அப்போற்றுக்

கரைக்கண் அமைந்துள்ளது திருக்கோவலூர். அத்திருநகர் மலையமாநாட்டிற்குத் தலைநகராக விளங்கிற்று. மலையமா நாட்டானாகிய மலையமான் சோழநாட்டரசர்களின் ஆணைக்குட்பட்டு நடக்கும் சிற்றரசன். அவன், திருமாவளவனின் வருகை கேட்டுவந்து நல்வரவேற்றுக் கப்பப் பணமும், தன் நாட்டில் கிடைக்கும் நற்பொருள்களையும் அளித்து நட்புக் கொண்டனன். ஆதலால், திருமாவளவன் அந்நாட்டை விடுத்துப் பன்றிநாட்டை நோக்கிச் சென்றான்.

பன்றிநாடு, பாண்டிநாட்டிற்கு வடக்கே இருக்கும் ஒரு சிறுநாடு. அதன் தலைநகர் நாகைப்பட்டினம். அந்நாட்டின்கண் வாழ்ந்தோர் எயினர் என்றழைக்கப்படுவோர் ஆவர். அவர்களுள் நாகர், ஒளியர் என இருவகையினர் உண்டு. ஒளியர் என்பார் நாகருள் ஒருவகையினரே. ஒளிநாகர் அரசு பட்டம் எய்துதற்கு உரியராவர். அவர்கள் வலி மிகப் படைத்தவர்கள். அவர்களால் குறுநில மன்னர்கள் பெரிதும் துன்புற்றனர். அதனை அறிந்த திருமாவளவன் அவர்கள்மீது போர் தொடுத்துச் சென்று, வலியழித்து அடக்கினன். பின், திருமாவளவன் பாண்டிநாடு நோக்கிச் சென்றான்.

பாண்டிநாடு, தென்பாண்டிநாடு, பாண்டிநாடு எனும் இருபிரிவினையுடையது. தென்பாண்டி நாடு என்பது தற்காலம் திருநெல்வேலி ஜில்லாவேயாகும். பாண்டிநாடு என்பது மதுரை ஜில்லாவாகும். திருமாவளவன் பாண்டிநாட்டின்மீது



படையெடுத்துச் சென்றதும், பாண்டியன் வெள்ளியம்பலம் துஞ்சிய பெருவழுதி பெருஞ் சேனையுடன் வந்து எதிர்த்தனன். பாண்டியனையும் போரில் கலக்கி முறியடித்து வெற்றிகொண்டு திருமாவளவன் சேரநாடு நோக்கிச் சென்றான். சேரநாடு. பூமிநாடு, குடநாடு, குட்டநாடு, வேநாடு, கற்காநாடு எனப் பிரிக்கப்பட்டு இருந்தது. இவ்வைந்து சிறுநாடுகளையும தன்பாற் கொண்ட சேரநாட்டிற்கு இராஜதானி நகரமாக விளங்கியது திருவஞ்சைக்களம். இந்நகரை வஞ்சி என்றும் கூறுவர். வஞ்சி என்பது கருவூர் என்று கருதுவாருமுண்டு. ஆனால் திருவஞ்சைக்களமே சேரநாட்டிற்குத் தலைநகராயிருந்தது என்பதும் கொள்ளத் தக்கதே.

திருமாவளவன் குடவர் என்றழைக்கப்பட்ட சேரமன்னவரை வென்று பொதுவர் என்று வழங்கிய இடைக்குலத் தரசர்களையும் வென்று வேளிரையும் வலியழிக்கவெண்ணி ஐம்பெருவேளிரையும் சென்று தாக்கி வலியழித்து வெற்றிகொண்டான். இருங்கோவேள் முதலிய வேளிர் ஐவரும் திருமாவளவனுக்குக் கப்பம் கட்டுவதாக ஒப்புக் கொண்டனர்.

இவ்வாறு தமிழகம் முழுவதும் தன்னடிப் படுத்திக்கொண்ட மன்னன் திருமாவளவன் வடநாடு நோக்கிச் சென்றனன். செல்லுங்கால் பல ஆரிய மன்னர்களும் அவன் வலிமை கேட்டு அஞ்சி அவனோடு நட்புக்கொண்டு கப்பங் கட்ட ஒப்புக்கொண்டனர். மற்றும் அவர்கள் அளித்த

திறைப்பொருள்களோ அளவில. யாவற்றையும் பெற்றுக்கொண்டு, இருநிலமருங்கிற் பொருநரைப் பெறாதுசெல்லும் திருமாவளவனுக்குப் பனிதூங்கு சிகரத்து இமயப்பெருங்கிரி குறுக்கிட்டது. சோழன், கச்சியம்பதியில் சாத்தனால் அளிக்கப்பட்ட செண்டால் அதனை அடிக்கவே அது அச்செண்டிற்கு நெகிழ்ந்து அகன்று நின்று வழிவிட்டது. அக்காலை மன்னன் இமையவர் உறையும் பனிதூங்கு சிகரத்து இமயமலையை யடித்ததை எண்ணி வருந்திப் பின் அதன் சிகரத்தின்மீது தன் கொடியின் இலச்சினையான புலியைப் பொறித்து வைத்துவிட்டு மீண்டனன்.

மீண்ட திருமாவளவன் வச்சிரநாட்டையடைந்தான். வச்சிரநாடு, சோணைநதியின் பெருக்கால் வளம் பெற்று விளங்குவதாகும். சோணைநதி பண்டல்கண்டு ( Bundlekhand ) நக்ரை அடுத்து உற்பத்தியாகிப் பாடலிபுரத்தருகில் ( Patna ) கங்கையோடு கலக்கும் ஓர் உபநதி. வச்சிர நாட்டு வேந்தன், பொன்னி நாட்டுப் புரவலனுடன் பகைவனும் அல்லன்; நட்பினனும் அல்லன்; அயலானே எனினும் அவ்வேந்தன் காவிரிநாட்டுக் காவலன் புகழையும், வலியையும் கேள்விப்பட்டு மிக்க மரியாதையுடன் தன்நாட்டிற்கு அழைத்து வந்து அரண்மனையிலிருத்தி விருந்துகள் நடத்தினன். பின், அம்மன்னன் திருமாவளவனுக்கு முத்துக்களினால் ஆக்கப்பட்ட முத்துப்பந்தரை அளித்தான். வச்சிரநாட்டு மன்னனிடம் விடைகொண்டு அவன் கொடுத்த முத்துப்பந்தருடன்



திருமாவளவன் மகதநாடு அடைந்தான். மகத நாட்டரசனே திருமாவளவனோடு பகைமை பூண்டு போருக்கு எழுந்தனன். போரினை விரும்பி வடக்கே போந்தும் போரின்மையால் வருந்திய திருமாவளவன் மனக்களிப்புற்றுக் கடும்போர் புரிந்தனன். பொன்னி நாட்டுப் புரவலன் படைமுன் மகத நாட்டு மன்னன் படைகள் கலங்கி மலங்கி வெருண்டு இரிந்து ஓடின. மகத நாட்டு மன்னன் சோழன் வலியைச் செவ்வனே யுணர்ந்து சமாதானத்திற்கு வந்து சோழனொடு நட்புப்பூண்டது மன்றிப் பட்டிமண்டபம் என்பதையும் கொடுத்தனன். அதனைப் பெற்றுக்கொண்ட திருமாவளவன் அம்மன்னனையும் தனக்குக் கப்பங் கட்டும் மன்னருள் ஒருவனாக ஏற்றுக்கொண்டு அவந்திநாடு நோக்கிச் சென்றான். அவந்திநாட்டரசன் சோழனுக்கு நண்பினன். அதனால் அம்மன்னன் திருமாவளவனைத் தன் அரண்மனைக்கு அழைத்துச் சென்று விருந்துகள் நடத்தினான். மற்றும், அம்மன்னன், உவகை மிகுதியால் தன் நண்பனாகிய புனல் நாடனுக்கு நவரத்தினங்களால் இழைத்த வாயிற்றோரணத்தை யளித்தனன்.

மாநீர்வேலி வச்சிரநாட்டுக் கோன் அளித்த முத்துப் பந்தரையும், மகத நன்னாட்டு வேந்தன் பகைப்புறத்துக் கொடுத்த பட்டி மண்டபத்தையும், அவந்தி வேந்தன் உவந்து கொடுத்த தோரண வாயிலையும் பெற்ற திருமாவளவன் ஆரியமன்னர் பலரிடம் திறை கொண்டு மீண்டனன். மீண்ட அன்னோன் கடன்மீதிலும் ஆணை செலுத்தும்

கருத்துடையோனாயினனாகவே இலங்கை மீது படை எடுத்துச் சென்றனன். அக்காலத்தில் முதற் கயவாகுவிற்கு முன் ஒரு சிங்கள ராஜன் அரசாண்டு வந்தனன். அச் சிங்கள ராஜன், சோழன் படையெடுத்து வருதலையறிந்து சேனைகளைத் திரட்டிக்கொண்டு எதிர்த்து நின்று சோழனோடு போர்புரிந்தான். எங்கும் வெற்றியின் மேல் வெற்றியாக வாகை சூடிவரும் திருமாவளவன் அவனையும் போரிற் கலக்கி வெற்றிகொண்டு, அவனால் அளிக்கப்பட்ட திறைப் பொருள்களையும் பிறவற்றையும் எடுத்துக்கொண்டு சோழநன்னாட்டையடைந்து காவிரிப்பூம்பட்டினத்தில் புக்கனன். அந்நகர் அன்று தேவலோகம்போல் சிங்காரிக்கப்பட்டிருந்தது. புகார் நகரில் தேவேந்திரனைப்போல் புகுந்த மன்னன் கொலுமண்டபத்தமர்ந்து இமயம் முதல் சேதுபரியந்தம் ஒரு கோலோச்சுவானாயினன். நாவலந்தீவை ஒரு குடைக்கீழ் ஆண்ட ஒப்பற்ற தமிழ்மன்னன் ஓங்குயர் விழுச்சீர் பெற்ற திருமாவளவனே யன்றோ!

# 9. ஆதிமந்தியார்

மன்னன் திருமாவளவன், நாங்கூர் வேண்மாள் என்னும் பொற்புடை மனைவியோடு இனிது வாழ்ந்து வரும் நாட்களில் மூன்று ஆண்மக்களும் ஒரு பெண்ணும் தோன்றினர் என்று படித்தோம் அன்றோ? மன்னன், அப் பெண்மகவுக்கு ஆதிமந்தியார் என்று பெயரிட்டு அன்போடு வளர்த்து வந்தனன். ஆதிமந்தி என்னும் அப்பெண் இளம் பருவத்திலேயே உருவிலும் திருவிலும் ஒப்புயர்வற்று விளங்கினாள். அவளது கவின்பெறு வனப்பைக் கண்டு இன்புற்று திருமாவளவனும வேண்மாளும் அப் பெண்ணமுதை இரும்பிடர்த்தலையாரிடம் விடுத்துக் கல்வி கற்பிக்குமாறு செய்தனர். இரும்பிடர்த்தலையார் ஆதிமந்திக்குத் தமிழ்க் கல்வியை யூட்டிவந்தனர். அந்நங்கை உருவிலும், திருவிலும் ஒப்ப வளர்ந்ததொப்பக் கல்வியிலும் மேம்பட்டு விளங்கினாள். இசையிலும் அவள் சிறந்து விளங்கினாள். யாழ், குழல், முதலியனவற்றிலும் அவள் சிறந்த பயிற்சி பெற்றிருந்தாள். அம்மட்டோ! அவள் குணத்தாலும், நலத்தாலும் ஒப்புயர்வற்று விளங்கினாள். தம் மகள் பல்லாற்றாலும் சிறந்து விளங்குவதைக் கண்ட திருமாவளவனும் வேண்மாளும் கொண்ட மகிழ்ச்சிக்கு அளவில்லை. பொறையிற் புவிமகளையும், உருவில் திருமகளையும், கல்வியில் நாமகளையும் ஒப்ப விளங்கிய ஆதிமந்தி நாளும் குணனும், நலனும் ஒருங்கு வளர வளர்ந்து மணப்பருவம் எய்தினள்.

மகள் மணப்பருவம் எய்தி இருத்தலை அறிந்த மன்னன் அவளுக்கு மணம் செய்து காண விழைந்தனன். அவளது குணநலங்களுக்கு ஏற்றவாறு தக்கதோர் மணாளனைத் தேடி மணஞ்செய்து வைக்கவேண்டியது அவனுடைய கடமையேயன்றோ! உலகில் நன்மணாளனைத் தேடித் தம் புத்திரிகளுக்கு மணம் செய்து வைப்பதில் தாய் தந்தையர் அடையும் துன்பங்கள் எண்ணிறந்தனவன்றோ! கருத்தொருமித்த காதலனும், காதலியும் இவ்வுலகில் காணக்கிடைத்தல் அரிதே! ஆதலினால் திருமாவளவனும் இரும்பிடர்த்தலையாரும் ஆதிமந்திக்கு இசைந்ததோர் மணாளனை நாடி மணம் புரிவிப்பதில் பெருமுயற்சி கொண்டிருந்தனர். அவர்கள் பலதேய அரசகுமாரர்களின் எழில், குணம், கல்வி முதலியனவற்றைப் பற்றி ஆராய்வாராயினர். முடிவில் மாமனும் மருமகனும் ஓர் அரசிளங்குமாரனைத் தேர்ந்தெடுத்தனர். அவன் ஆதிமந்தியின் எழில், குணம், கல்வி முதலியனவற்றிற்கு இசைந்த மணாளனே. அவன் பெயர் அத்தி என்பதாகும். அவனை ஆட்டன் அத்தி என்றும் கூறுவர்.

ஆட்டன் அத்தி ஒரு சேரநாட்டரசன். அவன் வில், வேல், வாள் பயிற்சியிலும், குதிரையேற்றத்திலும், யானையேற்றத்திலும் சிறந்தவன். மற்றும், போரில் பகைவர்களை வெந்நிட்டோடும்படி துரத்திப் போர் மலைந்து வாகை சூடும் விறலோன். அவனது உருவமும், ஆடவர் அவாவும் தன்மைத்து. முருகனோ, மதனனோ என மருளும்



தகைமை வாய்ந்த வடிவழகைப் பெற்ற ஆட்டன் அத்தி சங்கீதப் பயிற்சியும், கலைத்தமிழ்ப் பயிற்சியும் பெற்றவன், அவன் இசையில் பெருவிருப்புடையனாயிருந்தது மன்றிப் பரத நாட்டியத்திலும் தேர்ச்சி பெற்றவன். அவன் பண்டைப் பரத நாட்டிய நூல்களைச் செவ்வனே பயின்று நாட்டிய இலக்கணங்களை நன்கு உணர்ந்திருந்தான். ஆதலின் அவன் அடிக்கடி கீதங்கள் பாடி மகிழ்வதோடு அக் கீதங்களுக்கிசையச் சதியிட்டு நாட்டியமும் புரிந்து மகிழ்வான். ஆதலின் அன்றே அவன் ஆட்டன் அத்தி என்று பெயர் பெற்றான்! அவன் அரசியலைச் செவ்வனே நடத்தி வந்தான். ஆட்டன் அத்தி, ஆதிமந்தியின் வடிவழகையும், குண நலங்களையும், கல்விச்சிறப்பையும் கேள்வியுற்று அவளை மணந்துகொள்ள விரும்பினன். ஆதலின் இரும்பிடர்த்தலையாரும், திருமாவளவனும் அவனை அணுகி, ஆதிமந்தியை மணந்துகொள்ளும்படி கேட்டது அவனுக்குப் பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல் ஆயிற்று. அவனும் ஆதிமந்தியை மணந்துகொள்ள இசைந்தனன்.

திருமாவளவன் தன் அவைக்களத்திலுள்ள நிமித்திகர்களைக் கூவிப் பெரியோர்கள் துணைகொண்டு நன்னாள் ஒன்றைக் குறித்தனன். அந் நன்னாளில் ஆதிமந்தியை ஆட்டன் அத்திக்கு வாழ்க்கைத் துணையாக மணம் புரிவிப்பதெனக் குறித்துப் பல்வேறு தேயத்தரசர்களுக்கும், செல்வர்களுக்கும் ஓலைகள் போக்கினன். காவிரிப்பூம்பட்டினம் பொன்னாட்டு அமராவதியினும் பொலிவு

பெற்று விளங்கும்படி சிங்காரிக்கப்பட்டது. ஆட்டன் அத்தியும், சுற்றத்தாரும், பெரியோர்களும் நால்வகைப் படைகளும் புடைசூழச் சோழ நன்னாட்டுப் பூம்புகார் நகர் வந்தடைந்தனர். அந்நகரில் எங்கும் பல்வேறு தேசத்து மன்னரும், மக்களும் வந்து நிறைந்திருந்தனர். திருமாவளவன் அவரவர்களுக்கு ஏற்றவாறு இருப்பிடங்களும், பிறவும் அளித்து உபசரித்தனன். சேர நாட்டினின்றும் போந்த மக்களும் பிறரும் செவ்வகையாக உபசரிக்கப்பட்டனர். ஆட்டன் அத்தியையும், அவன் சுற்றத்தாரையும் புதியதோர் அரண்மனையில் இருத்தினன். திருமண நாள் நெருங்கியது. திருமணத்திற்குரிய நாளன்று ஆட்டன் அத்தியையும், ஆதிமந்தியையும் கங்கை முதலிய புண்ணிய நீர் கொண்டு நீராட்டுவித்து, ஆடை ஆபரணங்களால் அலங்கரித்து அழகிய திருமண மண்டபத்தில் அரதநபீடமிசை அமர்வித்தனர். நன்முகூர்த்தவேளை நணுகியது. வேதியர் வேதம் ஓத, மங்கையர் பல்லாண்டு பாட பல்லியங்கள் இயம்ப ஆட்டன் அத்தி மங்கல நாணை மகிழ்வோடு ஆதிமந்தியின் கழுத்தில் புனைந்தனன். எல்லோரும் மணவினை கண்டு மகிழ்ந்தனர். திருமாவளவன் தன் பண்டாரத்தைத் திறந்து யாவர்க்கும் வேண்டுவனவற்றை வேண்டியவரை அளித்தான். பல்வேறு தேசத்தரசர்களும் ஆதிமந்திக்கு அரும்பொருள்களை அளித்து ஆசி கூறினர். திருமாவளவன் தன் மகளுக்கு ஒப்பற்ற உயர்வு பொருந்திய பொருள் சீதனமாகக் கொடுத்தான்; பெரு விருந்துகள் நடத்தி



னன். சுருங்கச்சொல்லின் காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு மாதம் வரை ஆதிமந்தியின் திருமண வைபவம் நடந்துகொண்டே இருந்தது. பின் அனைவரும் தத்தம் நாடுகளுக்குச் சென்றனர்.

திருமாவளவனும், இரும்பிடர்த்தலையாரும் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அவர்கள் பலகாலும் ஆட்டன் அத்தியைச் சோழநாட்டிற்கு வரவழைத்துத் தம்மிடையில் அவனை வைத்துக் கொண்டு உரையாடி மகிழ்வர். ஆதிமந்தி, தான் செய்த புண்ணியப் பேறே தனக்கு நன் மணாளனைத் தந்தது என மகிழ்ந்து கணவன் கருத்திற்கு இசைந்து பெண் என்னும் பெருமையோடு இல்லறம் நடத்தி வந்தாள். கருத்தொருமித்த காதலனும், காதலியுமான ஆதிமந்தியும் ஆட்டன் அத்தியும் அறவோர்க்களித்தல், அந்தணர் ஓம்பல், விருந்தினர்ப் பேணல் முதலிய நல்லறங்களை இன்பத்தோடு புரிந்து வந்தனர். 'இல்லற மல்லது நல்லறம் அன்று' என்பது நரை மூதாட்டியின் நல்லுரையன்றோ!. அவர்கள் இருவரும் உடல் வேறுடையவராயினும் உயிர் வேறுபடாதவரே! காதல் மனையாளும் காதலனும் கருத்தொருமித்துத், தீதில் ஒரு கருமம் செய்பவே என்னும் பொன்மொழியை அவர்கள் உளத்தில் கொண்டு ஒழுகி வந்தனர். அவர்கள் உண்மையில், "காகத் திரு கண்ணிற்கு ஒன்றே மணி கலந்தாங்கு, இருவர் ஆகத்திலும் ஒருயிர் கண்டனம்" எனக் கண்டோர் கூறுமாறு இல்லறம் புரிந்து வந்தனர். சோழன் வேண்டும்பொழுதெல்லாம் ஆட்டன் அத்தியும், ஆதிமந்தி

யும் சோழநாட்டிற்குப் போந்து திருமாவளவனோடு சிலகாலம் இருந்து பின் தம் நாட்டிற்குச் செல்வர். இவ்வாறு சில ஆண்டுகள் கடந்தன.

என்றும் வற்றா இயல்பு வாய்ந்து, சோழ நன்னாட்டிற்குப் பீடும் பொருளும் அளிக்கும் பொன்னி என்னும் காவிரி நதியில் ஆடி மாதத்தில் நீர் பெருக்கெடுத்தோடும். அப் புதுநீர்ப் பெருக்கின்பொழுது அந் நாட்டினுள்ள மக்கள் அனைவரும் அந்நீரில் மூழ்கி விளையாடி விழாக் கொண்டாடுதல் வழக்கம். அவர்கள் திரள் திரளாகப் பல்வேறு துறைகளுக்கும் சென்று நீர் விளையாடி மகிழ்வார்கள். அவர்கள் அக்காலை, "பொன்னளிக்கும் புதுப்புனல் காவிரி பொங்குக" என்று வாழ்த்தும் ஓசை எழுகடல் ஓசையை யடக்கும். சிலர், காவிரி நதியைப் பூசிப்பார்கள். நீர் விளையாடிய பின், ஆங்காங்குள்ள வெண்மணல் எக்கரிலும் சோலைகளிலும், மண்டபங்களிலும், புத்தம் புத்தாடைகளும், அணிகளும் அணிந்து அமர்ந்து சுற்றத்தாருடனும், மனைவி மக்களுடனும், இன்சுவை மிகுந்த நெய்யால் தாளித்த பல்வேறுவகைச் சோற்றுடன், பல பணியாரங்களையும் உண்டு, மகிழ்ச்சியோடு கடுகி ஓடும் காவிரியின் நிறைந்த புனலை நோக்கி இன்புற்றிருப்பார்கள். இத்தகைய திருவிழாவைச் சோழன் திருமாவளவன் நடத்துங் காலத்தெல்லாம் ஆட்டன் அத்தியும் ஆதிமந்தியும் சோழநாட்டிற்கு வந்து திருமாவளவனோடு இருப்பது வழக்கம். அக்காலங்களில் திருமாவளவன் காவிரிப்பூம்பட்டினத்திற்



கும், மாயூரத்திற்கும் இடையிலுள்ள கழார் என்னும் ஊரின் காவிரித் துறையை யடைந்து எல்லாருடனும் காவிரிப் புதுப்புனல் திருவிழாக் கொண்டாடி மகிழ்வான்.

ஒரு வருடம் காவிரியின் புதுப்புனல் திருவிழாக் காலம் வந்தது. ஆட்டன் அத்தியும் ஆதிமந்தியும் திருமாவளவன் அழைத்ததற் கிசைந்து சோழநாட்டிற்கு வந்தனர். திருவிழா நாளன்று மன்னன் திருமாவளவன் எல்லாரோடும் கழார் என்னும் ஊரின் காவிரித்துறையை அடைந்தனன். அங்கு, யாவரும் புதுநீர்ப் பெருக்கில் மகிழ்ச்சியோடு மூழ்கி விளையாடிக்கொண்டிருந்தனர். ஆட்டன் அத்தியும் நீரில் மூழ்கி விளையாடிக்கொண்டிருந்தான். ஆற்றின் நீரில் நீந்தி விளையாடுதலை ஆட்டன் அத்தி மிகவும் விரும்பினான். அவனுக்கு நீந்தவும் நன்றாகத் தெரியும். எனினும், பெருவெள்ளப் பெருக்கில் புணையின்றி நீந்துதல் இன்னாதே யன்றோ! "நீர் விளையாடேல்; நெடு நீர்ப் புணையின்றி நீந்துதல் இன்னா" என்பன ஆன்றோரின் அமுத மொழிகளன்றோ! பலவிடத்தும் மூழ்கி மூழ்கித் தோன்றித் தோன்றி மகிழ்வோடு நீர் விளையாடிக்கொண்டிருந்த ஆட்டன் அத்தி தவறிக் கடுகி வந்த நீர்ச்சுழியில் அகப்பட்டுக்கொண்டான். அவன் பல்வகையிலும் அதனின்றும் தப்பித்து வர முயன்றும் அம் முயற்சி பயன்படாமற்போயிற்று. ஆகவே அவன் மூழ்கிய நிலையில் வெள்ளத்தால் அடித்துக்கொண்டு போகப்பட்டான். கரையில் இருந்தவர்கள் நீரில்

மூழ்கி விளையாடுகின்ருன் என முதலில் நினைத்த னர். நெடிது காலம் அவனைக் காணுதிருக்கவே அவர்கள் ஐயுற்றனர். எங்கும் பரபரப்பு உண்டாயிற்று. திருமாவளவன் திகைப்படைந்தான். ஆதிமந்தி நெஞ்சம் திடுக்கிட்டுச் சித்திரப் பாவையைப்போலச் செயலற்று இருந்தாள். நீத்தம் வல்லார் பலர் ஆற்றில் இறங்கிப் பல்வேறிடங்களிலும் தேடித்தேடிப் பார்த்தனர். எங்கும் அத்தியைக் காணுது வருந்தி வருந்தி அரசனுக்கு அறிவித்தனர். ஆதிமந்தியோ நீர்வழி கண்களை யுடையவளாய்ப் பித்துக் கொண்டாற்போல், "ஐயகோ! என்னுயிரே! நீ யாண்டுள்ளாய்! நீரில் மூழ்கிக் கரந்து சென்ற மாயம்தான் என்னே! என்னை இங்குவிட்டுஎங்குச்சென்ருய்! என்கண்ணே! யான் தனியாளாய்த் தவித்தல் தகுமோ!" என்று பலவாறு வாய்விட்டரற்றிக்கொண்டு அங்கும் இங்கும் ஓடி அலைந்தாள். அவளைத் தேற்றத் திருமாவளவன் பலவாறு முயன்ருன்; ஒன்றும் பயன்படவில்லை. ஆதிமந்தி ஒருவர் சொல்லையும் கேட்காது, "மரமே! என் இன்னுயிரைக் கண்டாயோ? புல்லே, கண்டாயோ! மானே, கண்டாயோ! மயிலே, கண்டாயோ!" என்று கேட்டுக்கொண்டே வழியிடைப்பட்டவர்களையும் கேட்டுக்கொண்டு அழுத கண்ணும், சிந்திய மூக்கும், சிதைந்த ஆடையும், அவிழ்ந்த கூந்தலும், தளர்ந்த மேனியும் தாங்கிக்கொண்டு காவிரிக்கரையூடு கணவனை நாடிச் சென்ருள். மன்னன் திருமாவளவன் அவளைத் தடுத்தற்கு இயலாதவனுய், மற்றவருடன் அளவிலாத் துயரத்துடன் அரண்மனையை யடைந்



தான். நாங்கூர் வேண்மாளும், இரும்பிடர்த்தலையாரும், திருமாவளவனும் எத்தகைய துன்பமுற்றிருந்தனர் என்பதை யாவரே எடுத்தியம்பும் திறத்தினர்? ஒருவாறு கூறுவோமாயின் அவர்கள் உயிரில்லா உடம்புபோல் இருந்தனர் என்னலாம்.

மக்கள் வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் கலந்து வருதல் இயல்பு. இன்னல் வந்துற்ற காலை அழுங்கியும், இன்பம் வந்துற்றகாலை மகிழ்ந்தும் வாழ்நாளைக் கழிப்பது சாதாரண மானிடர்களுக்கு இயல்பு. ஆனல் பெரியோர்கள் இன்பத்தையும் துன்பத்தையும் ஒப்ப நோக்கும் தன்மை யுடையவராய் வாழ்வர். ஏனெனில், "ஆவது ஆகுங்காலத் தாவதும், அழிந்து சிந்திப் போவது அயலே நின்று போற்றினும் போதல் திண்ணம்" என்பதை அவர்கள் நன்குணர்வர். விதி வலிது. அதனைத் தடுப்பார் யார்? அரசனும் பரிவாரங்களும் அடைந்திருந்த மகிழ்ச்சி ஒரு கணத்தில் மாறிற்றன்ருே!

கண்டார் நடுக்குறுங் கோலத்தோடு சென்ற ஆதிமந்தியோ காவிரியின் நெடுங்கரை வழியே பிரலாபித்துக்கொண்டு சென்று கடற்கரையை யடைந்தாள். இடைவழியில் அவள் கண்டவர்களை எல்லாம், "என் ஆருயிரைக் கண்டீரோ? என் காதலனைக் கண்டீரோ? என் ஆடல் அழகனைக் கண்டீரோ? என்று கேட்டுக் கேட்டு வாய் நொந்தாள், அவளைக் கண்ட மைந்தரும் மங்கையரும், மெய்த்துணுக்குற்றுக் கற்பின் தெய்வமோ!

விண்ணுலகத்தில் இடருற்றுப் பொன்னுலகு நீந்து மண்ணுலகுற்ற மங்கையோ! அணங்கோ! என ஐயுற்றனர். ஆதிமந்தி ஊணும் உறக்கமும் இன்றி நிற்றலும் கிடத்தலும் அகற்றிச் சின்னாளில் கடற்கரையை அடைந்து ஆங்கு அலைந்து திரிந்து வருவாரையும் போவாரையும் பலவாறு கேட்டு அரற்றிக்கொண்டிருந்தனள். யாரே அவளுக்குப் பதில் கூறுவார்! அந்தோ பாவம்! கற்பின் கொழுந்தும் பொற்பின் செல்வியும் ஆய ஆதிமந்தியை அனைவரும் பேய்க்கோட்பட்டவள் என்றும், பித்தேறியவளென்றும் கருதினர். இது நிற்க.

காவிரி கொண்டொளித்த அத்தி நீர்ச்சுழலில் சிக்குண்டு தன்னால் இயன்றவரை முயன்றும் பயனின்றி நீரோடு செல்வானானன். ஆனால் அவன் நீந்துதற்கு முயன்றுகொண்டே வந்தனன். அவன் பலகாலும் வெளியே தோன்றுவதும் மூழ்குவதுமாக இருந்தான். நீர் கடுவிசைகொண்டு மண்டி ஓடிக்கொண்டிருந்ததால் அவன் நீர்ப்பெருக்கில் அடித்துக்கொண்டு செல்லப்பட்டான். நட்டாற்றில் நீர்ச்சுழியில் சிக்குண்ட அவன் அச் சுழியலினின்றும் தப்பித்துக்கொண்டுவர, அவன் அந் நீர்ப்பெருக்கோடு இரண்டு மூன்று மைல் தூரம் சென்றான். பின், அவன் நீர்ச்சுழியலினின்றும் விடுபட்டான். அப்பொழுதுதான் அவனுக்கு அபாயம் நீங்கியது. நீந்திக் கரையேறுதலும் கூடும் என்ற நம்பிக்கையும் அவனுக்கு உண்டாயிற்று. ஆனால், நீர்ச்சுழியலில் அகப்பட்டுக்கொண்டிருந்தபொழுது பலகாலும் தண்ணீர்



குடித்ததினால் உடல் பருத்துவிட்டதுமன்றி அவயவங்களும் சலித்திருந்தன. அச்சமயம் அவன் நீந்துதற்கு உரிய நிலையில் இல்லை. ஆகவே அவன் இயன்றளவு கரையை யணுகும் முறையில் நீர்ப்பெருக்கோடு அடித்துக்கொண்டு வரப்பட்டான். அந்நிலையில் அவன் பெரிய அலைகளால் மோதப்பட்டுக் கடற்கரையை அடுத்துள்ள ஓர் ஊரின் ஆற்றங்கரையோரத்தில் ஒதுக்கப்பட்டான். அவன் கரையிலேறி அங்கு மணலில் சலிப்பால் விழுந்து கிடந்தனன்.

கடற்கரையை அடுத்ததாகிய சிற்றூர் ஒன்றில் மருதி என்பாள் ஒருத்தி வசித்து வந்தனள். அவள் தினந்தோறும் அக்கடற்கரைக்குச் செல்வதுண்டு. ஆட்டன் அத்தி, ஆற்றுப்பெருக்கால் அடித்துக்கொண்டு வரப்பட்டு அலைகடலோரத்தில் மணற்றிட்டில் வீழ்ந்து கிடந்த அந்தத் தினத்திலும் அவள் அங்கு வந்தாள். அங்கு அவள் ஆட்டன் அத்தி விழுந்து கிடப்பதைக் கண்டாள். அவன் நிலைமையை அவள் நன்கு யூகித்து அறிந்து கொண்டாள். ஆட்டன்அத்தியோ மூடிய கண் திறவாதவனாய்ச் சோர்வுற்றுக் கிடந்தான். அவன் மேனி சிறிதும் அசையவில்லை. நெடுநேரம் உற்றுப்பார்த்து மருதி அவன் வடிவெழிலால் அவன் ஒரு சிறந்தோனாக இருக்கவேண்டுமென்று நன்கறிந்துகொண்டாள். அவன் நிலையை அறிந்த அவள், அவனை மெதுவாகப் புரட்டிப் பார்த்து அவன் தன்னையும் மறந்த மயக்க நிலையில் குற்றுயிருடன் களைத்துக் கிடக்கின்றான்

என்பதை அறிந்துகொண்டாள். அவள் மனம் உருகியது. மருதி, அங்குச் சற்று நேரம் இருந்து பலவகைகளிலும் அவனுக்குக் களைப்பு நீங்குமாறு செய்தாள். அவள் உதவியால் ஆட்டன் அத்தி களைப்பு நீங்கிக் கண் திறந்தான். அப்பொழுதுதான் கைகால்களை அசைக்கக்கூடிய நிலையை அவன் அடைந்தான். பின்னர், மருதி செய்த உதவிகளால் ஒருவாறு தேறித் தள்ளாடி நடக்கும் நிலைமை எய்தினன். மருதி அவனை வீட்டிற்கு அழைத்துச் சென்ருள். அங்கு அவள் அவனுக்குப் பல்வகையிலும் உண்டாகிய நோயைக் குணப்படுத்த முயற்சி எடுத்துக்கொண்டாள். அவள் நல்லுணவு அட்டு அவனுக்கு அளித்தாள். ஆட்டன் அத்தியின் நிலை ஒருவாறு குணப்பட்டு வந்தது. சில நாட்கள் கழிந்தன.

ஆட்டன் அத்தி குணம் அடைந்து எழிலும் திறனும் அடைந்தான். அவன் பழமையேபோல ஆடலிலும் பாடலிலும் காலத்தை இன்புறக் கழிப்பதானுன். மருதி என்பாள் ஒரு பாடினி. அவள், ஆட்டன் அத்தியின் ஆடல் பாடல்களிலும், வடிவழகிலும் ஈடுபட்டு மகிழ்ந்தாள். அவள் அவனை அன்புடன் நேசித்தாள். ஆட்டன் அத்தி அவளைக் கந்தருவ மணத்தைத் தழுவி மணந்து கொண்டான். ஆட்டன் அத்தியும் மருதியும் அன்புற்று இன்புற்று வாழ்ந்து வந்தனர். ஆட்டன் அத்தி நாட்டையும், ஆதிமந்தியையும் அறவே மறந்திருந்தான்.



ஆதிமந்தி, கண்ணிற்கினிய கணவன் காவிரிப் பெருக்கால் இழுப்புண்டு போயினனே என்று கலங்கிய நிலையில் கண்களில் நீர் சோர, தலைவிரி கூந்தலோடு அரற்றிக்கொண்டு காவிரிக் கரையூடு வந்து எங்கும் தேடித்திரிந்தனள். கணவனைக் காணுது கலுழும் ஆதிமந்தி, மருதியின் வீட்டிற்குப் பக்கத்தில் தற்செயலாய்ப் போந்து அரற்றி அழுதுகொண்டிருக்கையில், மருதி வெளியே வந்து அவளது துன்புற்ற நிலையைக் கண்டு மனங்கசிந்துருகி, அவளுக்குற்ற இடுக்கண் யாதென வினவி இல்லத்திற்கு அழைத்துச் சென்றனள். மருதிக்கு ஆதிமந்தி யாவற்றையும் கூறிக்கொண்டே சென்றனள். இல்லத்தை யடைந்ததும் ஆதிமந்தி ஆங்கு ஆட்டன் அத்தியைக் கண்டனள். இறந்தவர் தோன்றினுற்போல் பெருமகிழ்ச்சி எய்திய ஆதிமந்தி, ஆட்டன் அத்தியை இறுகத் தழுவிக் கொண்டனள். ஆட்டன் அத்தி வாய் பேசவியலாதவனுய்க் கண்களில் நீர் வடிய ஆதிமந்தியைத் தழுவிக்கொண்டான். "பிரிந்தவர் கூடினுற் பேசவேண்டுமோ?" நெடிது நேரம் கழிந்தபின் இருவரும் தத்தமக்குற்ற இடுக்கண்களைக் கூறிக்கொண்டு தமக்குள் தாம் தேறுதல் அடைந்தனர்.

இருவர் நிலையையும் அறிந்த மருதி, ஆதிமந்தியின் எழிலைக் கண்ணுற்று; 'இனி ஆட்டன் அத்தி அவளை விட்டுப் பிரியான்' என்று கருதி வெளிப்போந்து கடலைக் குறுகினுள். அவள் மனத்தில் தோற்றிய எண்ணங்கள் யாவோ?

அறியோம். அவள் கடலில் பாய்ந்து உயிர் துறந்தாள். அச்செய்தி பின் தெரியவந்தது. அதற்காக அவன் பெரிதும் வருந்தினான். அவன், செய்ந்நன்றி மறவாமல், ஆவன செய்து பின் ஆதிமந்தியோடு காவிரிப்பூம்பட்டினம் சென்றடைந்தான்.

திருமாவளவன், தன் பெண்ணையும் மருகனையும் கண்டு அளவிலா உவகை பூத்தனன். சில காலம் ஆட்டன்அத்தி மாமனார் இல்லத்திருந்துவிட்டுப் பின் தன் நாட்டிற்குச் சென்றனன். அரசனை இழந்தோமே என்றிரங்கிக் கொண்டிருந்த அந்நன்னாடு அவனைக் கண்டதும் களிப்பென்னும் கடலுள் மூழ்கியது. ஆட்டன் அத்தி அரியணையமர்ந்து இன்ப வரசு நடத்தி வந்தான்.

# 10. அரசியல்

ஒரு நாட்டின் சீரும் சிறப்பும், மன்னன் பெருமையும் அவனுடைய ஆட்சிக்கு ஏற்பவே அமைவன ஆகும். மன்னன் மாசறக் கற்றோனும், பகைப்புலன் ஒடுக்கும் விறலோனும்; அமைச்சர் கூறும் நல்வழிக்கண் நிற்போனும், தன்னுயிர்போல் மன்னுயிர்களைப் பாவிக்கும் தகுதியுடையோனும், நடுநிலை தவறாதோனுமாயின் அத்தகைய மன்னனால் புரக்கப்படும் நன்னாடு மேம்பட்டு விளங்கும் என்பதில் ஐயமென்னை? திருமாவளவனோவெனில் மன்னன் ஒருவனுக்குப் பொருந்திடத் தகுந்த மாண்புடைக் குணங்கள் யாவும் ஒருங்கே பொருந்திடப் பெற்றோன். மற்றும், நாட்டின் நலத்தையும், குடிகளின் நலத்தையும் நாடிச் செய்வன செய்தலின்கண் ஒரு சிறிதும் குறைவுபாடு உடையோன் அல்லன். அம்மட்டோ! 'நீரும் உயிர் அன்றே; நெல்லும் உயிரன்றே; மன்னனுயிர்த்தே மலர்தலை யுலகம்" என்னும் பொன்னுரையை நன்குணர்ந்தவன். அவன் ஆற்றலும், விநோத சாதுரிய புத்தியும், பேரறிவும், நடுவு நிலைமை தவறாமையும் அமையப் பெற்றிருந்தமையை நோக்குமிடத்து நாவலந்தீவை ஒரு குடைக்கீழ் ஆளும் தகுதியுடைய மன்னன் அவனே என்பது விளங்காது இராது. நரை முது மக்கள் உவப்ப, இளமை நாணி, மறைத்து, முதுமை வேடம் தரித்துக் காட்டி உரை முடிவு கண்ட உரவோன் அன்றோ மனு

தலம் போற்றும் மன்னன் திருமாவளவன் ! அச் செய்கையை நுணுகி ஆராயுமிடத்து அவனது கூரியமதிவலியும், விநோதமும், வியக்கத்தக்கனவே யன்றோ !

திருமாவளவன் அவையில் எண்பேராயமும் ஐம்பெருங்குழுவும் இருந்தன. நாட்டுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனப்பிரதிநிதிகளடங்கிய சபையும் இருந்தது. பார்ப்பார் - குருமார்களாக அவன் அவைக்களத்தில் சிறப்புற்றுப் பொலிந்து விளங்கினர். அவன் நாட்டுக் குடிகள் நோய் நொடிகளின்றி வாழும்பொருட்டு ஆங்காங்கு வைத்தியசாலைகள் அமைத்து மருத்துவர்களையும் நியமித்திருந்தான். நிமித்திகர்கள் பலர் அவன் அவைக்களத்தில் சிறந்து விளங்கினர். அரசனை யடுத்து அனுபவத்தாலும் கல்வியாலும் சிறந்து விளங்கிய அமைச்சர்கள் அமர்ந்து அரசனை நல் வழிப்படுத்தி வந்தனர். திருமாவளவன் தனிமைப் பட யாவும் செய்தற்குரிய ஒப்பற்ற அரசனாக விளங்கினான் எனினும், அமைச்சர்களையும் ஆன் றோர்களையும் உசாவி அவர்கள் கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டே யாவற்றையும் செய்துவந்தான்.

திருமாவளவன் காலத்தில் தமிழ் வளம் நிரம் பிய சோழ நன்னாட்டில் கைத்தொழில், சிற்பம், சங்கீதம் முதலியன சிறந்து விளங்கின. வேளாண்மை சிறப்புற்றோங்கியது. அவன் வியா பாரத்திற்குரிய பல வசதிகளையும் செய்வித்தனன். கடற்றுறைமுகங்களும், அவ்வவ்விடங்களில் கலங் கரை விளக்கங்களும் சிறந்து விளங்கின. வியா



பாரம் செழித்தோங்குவதாயிற்று. மொழி பல பெருகிய பழிதீர் தேயத்துப் புலம்பெயர் மக்கள் கலந்தினிதுறையும் முட்டாத சிறப்பினை யுடை யது காவிரிப்பூம்பட்டினம் என்று எல்லோரும் போற்றிக் கூறுவர். சோனகர், சீனர், சாவகர், ரோமர் முதலிய பல நாட்டோரும் காவிரிப்பூம் பட்டினத்தையடைந்து வாணிபம் பேணி வந்தனர். அதனாலும் நாட்டில் செல்வம் பெருகிற்று.

திருமாவளவன் கல்வியைக் கண்ணென மதித்து வந்தனன். அவனுக்குப் பெருந்துணை யாகவும் ஆசிரியராகவும் இருந்து வந்தவர் இரும் பிடர்த்தலையார் என்னும் புலவர் அன்றோ? கல் வியைப் பெருக்கித் தன் நாட்டுக் குடிகளின் அக விருளை யோட்டி மேன்மைப்படுத்த வேண்டியது தன்கடனே என்பதை அவன் உணர்ந்திருந்தான். அதனால் அவன் தன் நாட்டில் எங்கும் கல்விக் கழகங்களை நிறுவி மக்களுக்குக் கல்வி புகட்டி வந்தனன். அவன் காலத்தில் புத்தக நிலையங்கள் பல நிறைந்து விளங்கின. ஆங்காங்குத் தமிழ்ச் சங்கங்களை நிறுவிப் புலவர்களை அவைகளில் சேர்த்துத் தமிழ்க் கல்வியைப் பரவச்செய்தான். அதனாலும் தமிழ்க் கல்வி பரவலாயிற்று. அவன் தமிழ்ப் புலவர்களை ஆதரித்து வந்தான். அவன் காலத்தில் பல்வேறு சமயத்தவர்களும் இன்புற்று வாழ்ந்து வந்தனர்.

திருமாவளவன், குடிகளிடத்தில் ஆறில் ஒரு பகுதியையே அரசுக்குரிய கடமையாகக் கொண் டான். அவ்வாறு கொண்[illegible]யும்

குடிகளின் நன்மையைக் கருதியே செலவிட்டு வந்தான். காவிரிப் பேராற்றில் அணைகட்டிக் கால்வாய்கள் வெட்டி நீர்ப்பாய்ச்சன வசதிகளைச் செய்து வேளாண் மக்களுக்குப் பேருதவியைப் புரிந்து வந்தான். கல்வியைப் பெருக்கும் முறையிலும் திரண்ட செல்வத்தைச் செலவு செய்து வந்தான் அவன் ஆட்சியில் குடிகளுக்குக் கள்வர், பகைவர், வேற்றுப்புலவேந்தர், விலங்கு முதலியனவற்றால் ஒருவித அச்சமும் ஏற்படவில்லை. நாட்டில் ஒற்றுமை நிலைத்திருந்தது. குடிகள் ஒருவருக்கொருவர் அன்பும், நட்பும், பரோபகாரமும் உடையவர்களாய் இன்புற்று வாழ்ந்து வந்தனர்.

திருமாவளவன் மக்களின் ஒழுக்க நெறியைக் காக்க எண்ணி விப்பிரர்களைத் தருவித்து நன்மார்க்கங்களை எடுத்து இயம்புமாறு பணிந்தான். மற்றும், சைவசமயத்தைப் பேராதரவுடன் போற்றி வந்தான். ஆங்காங்குக் கோயில்களும், மடங்களும் கட்டுவித்து வேத பாடசாலைகளையும், தேவாரப் பாடசாலைகளையும் ஏற்படுத்தினான். கோயில்களில் நித்திய நைமித்திக விழாக்கள் செவ்வனே நடைபெற்று வந்தன. மன்னன் சைவசமயத்தைப் பற்றி ஒழுகினானேனும் பிறமதத்தையும் அன்போடு போற்றிவந்தான். சமண பௌத்த மதங்களும், வைணவமதமும் அவன் ஆட்சியில் யாதொரு இடையூறுமின்றித் தழைத்தோங்கி வளர்வனவாயின. சுருங்கச் சொல்லுமிடத்து மன்னன் திருமாவளவன் காலத்தை இராம ராச்



சியம் என்றே சிறப்பித்துக் கூறிவிடலாம். அந்நிலையை எய்துதற்கு அவன் தாயொடு தந்தையாய்க் குடிகளாற் போற்றப்பட்டதே காரணம் ஆகும். யாவற்றிற்கும் காரணம் இரும்பிடர்த்தலையார் என்னும் புலவர் அவனோடிருந்து வந்ததே என்னலாம்.

# 11. தமிழ்ப்பற்று

ஒரு நாட்டின் மேன்மையும் அதன் உயரிய நாகரிகமும், மக்களின் ஒழுக்கமும், கைத்தொழிலும், செல்வமும் பிறவும் அந்நாட்டு மக்கள் அடைந்துள்ள கல்வியைக்கொண்டே கூறவேண்டியிருக்கின்றது. நாட்டிற் கல்வி விருத்தியடைவதற்கு ஏற்ப அந்நாட்டின் செல்வமும், வளனும், உயர்வும் மேம்படுகின்றன. நம் பாரத நாட்டோர் பண்டைக்காலமுதல் கல்வி, நாகரீகம், செல்வம், கைத்தொழில் முதலியனவற்றால் மேம்பாடுற்று விளங்கினர். தமிழ்நாட்டு மக்கள் அடைந்த நாகரிகமே, உலகில் முதன்முதல் மக்கள் அடைந்த நாகரிகம் என்று கருதப்படுகிறது. தமிழ்மக்களின் பழஞ்சரிதையை நுணுகி ஆராயப் புகுந்தால் அன்னார் பெற்றிருந்த மேனிலை வியக்கத் தக்கதாக விருக்கின்றது.

மன்னன் திருமாவளவன் காலத்தில் தமிழ்மொழியின் நிலையைச் சிறிது ஆராய்ந்து பார்க்குமிடத்துத் தமிழ்மொழி தலைசிறந்து விளங்கியது என்பது நன்கு புலப்படும். மன்னன் திருமாவளவன், தன் மாமன் இரும்பிடர்த்தலையாரிடம் கல்வி கற்றுத் தமிழ்மொழியின் அருமை பெருமைகளை இளமையிலே அறிந்திருந்தான். மற்றும், கூரிய அறிவு படைத்த அவன் நாட்டுமொழியின் வளர்ச்சியே நாட்டையும் நாட்டுமக்களையும் உயர்தரநிலைக்குக் கொண்டுவரும் தகைமை பெற்றது என்று நன்கறிந்திருந்தான். ஆதலின், அவன் தமிழ்மொழி



யிடத்து அளவிலா அன்பும் ஆர்வமுங்கொண்டு போற்றிவந்தனன். தமிழ் மணம் தமிழ்நாடெங்கும் கமழவும், தமிழ்த்தாய் களிக்கூத்தாடவும் மன்னன் வேண்டும் முறையில் உதவி வந்தனன். தமிழ்க்கலை பரவுமாறு ஆங்காங்குக் கலைக்கழகங்களும், நூல் நிலையங்களும் அமைத்துத் தமிழ்க்கலை யூட்டிவந்தனன். தமிழ்ப் புலவர் பலரைத் தன் தோழர்களாகக் கொண்டு தமிழ்க்கலைப் பயிற்சியையே தனக்குப் பொழுதுபோக்காகக் கொண்டு மன்னன் காலங்கழித்து வந்தான்.

தமிழ்ப்புலவர்கள் பலரும் அவனையடைந்து அவனுடைய புகழ், வீரம், தமிழ்ப்பற்று முதலிய அரும் பெருங் குணங்களைப் பாடிப் புகழ்வர். மன்னன் திருமாவளவன் இனிய நன்முகங்காட்டி, இன்சொல்லியம்பி, நல்வரவு கூறி அரண்மனைக்குள் அவர்களை அழைத்து வந்து, நெடுநாள்வரை தன்னிடத்தே வைத்துக்கொண்டு தமிழ்மொழியின் அருமை பெருமைகளை அவர்களிடம் உசாவி அறிந்துகொண்டு, பின், அவர்களுக்கு ஆடை, ஆபரணம், செல்வம், யானை முதலியன வெறுப்ப அளித்துத் தேரேற்றி, அவரவர் ஊர்களுக்கு அனுப்புவான் என்றால் அம் மன்னன், தமிழ்மொழியிடத்தும், தமிழ்ப் புலவர்களிடத்தும் கொண்டிருந்த பற்றின் மிகுதியை என்னென்று இயம்புவது! அம்மட்டோ! தமிழ்ப்புலவர்கள் அவனிடம் விடைபெற்றுச் செல்லுங்கால் அவர்கள் பின் அவன் காலால் ஏழடி நடந்து சென்று வழி விடுத்தனுப்புவன் எனின் அவன் கொண்டிருந்த

தமிழ்ப்பற்று இத்தகையதென்று இயம்பும் திறத்த தன்று. அவன் காலத்தில் நக்கீரர், பரணர், மாமூலர், உருத்திரங்கண்ணனார், முடத்தாமக்கண்ணியார், கருங்குழல்ஆதனார், கழாத்தலையார் முதலிய புலவர்கள் சிறந்து விளங்கினர். அவர்கள் அனைவரும் மன்னன் திருமாவளவனைப் புகழ்ந்து பாடியுள்ளனர். முடத்தாமக்கண்ணியார் என்பார் முத்துப் போன்ற பத்துப் பாட்டில் ஒன்றான **பொருநராற்றுப் படை** என்னும் நூல் ஒன்றைப் பாடியுள்ளார். அதில் அவர், மன்னன் திருமாவளவனுடைய குணம், செயல், அரசநீதி, வீரம், தமிழ்ப்பற்று முதலியனவற்றைச் சிறக்க விரித்துக் கூறிப் பெறலரும் பரிசில் பெற்று மகிழ்ந்தார். உருத்திரங் கண்ணனார் என்னும் புல்வர், திருமாவளவனின், குணம், செயல், கொடை, வீரம், நாட்டுவளம் முதலிய பலவற்றை விதந்து கூறிப் பாடியுள்ள **பட்டினப்பாலை** என்னும் நூலை அவன் முன் கூறி அவனைக் கேட்பித்து அவனாற் பதினாறு நூறாயிரம் பொன் பரிசாகப் பெற்றார். பண்டு; **போஸன்** என்னும் அரசன் **காளிதாஸன்** என்னும் புலவருக்கு அக்ஷரலக்ஷம் பொன் கொடுத்தான் என்று கேள்வியுண்டு. தமிழ் அரசனாகிய திருமாவளவனும் அத்தகையனாய் விளங்கியது தமிழகம் செய்த தவப் பயனே அன்றோ!

அவன் காலத்திற் கடைஎழு வள்ளல்களும் தமிழகத்திற் சிறந்து விளங்கினார்கள். அவர்கள், **பாரி, ஓரி, காரி, பேகன், ஆஅய், அதிகமான், நள்ளி** என்போராவர். அவர்கள் தமிழ் மொழியையும் தமிழ்ப் புலவர்களையும் பெரிதும் மதித்துப் பேணி வந்தனர். அதனாலும் சீர் பெற்று விளங்கியது தமிழ்மொழி. மற்றும், மன்னன் திருமாவளவன் காலத்திற் கபிலர், பரணர், நக்கீரர், இடைக்காடனார், மாமூலர் முதலாய பொய்யடிமை யல்லாத புலவர்கள் வீற்றிருந்து தமிழ் மொழியைப் போற்றிய மூன்றாம் சங்கம் சிறந்து விளங்கியது. அக் காலத்தில் அச் சங்கத்தில் நல்லிசைப் புலமை வாய்ந்த நற்றமிழ் வல்லோர் நானூற்றிற்கு மேற் பட்டிருந்தனர். மற்றும், அக்காலத்தில் விளங்கிய புலவர்களால் இயற்றப்பட்ட, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பரிபாடல், பதினெண்கீழ்க் கணக்கு, சிற்றிசை, பேரிசை, முத்தொள்ளாயிரம் முதலான நூல்களும், கூத்தும், வரியும் ஆய பல நூல்கள் மிளிர்ந்து விளங்கின.



மன்னன் திருமாவளவன் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் என்னும் மூன்றையும் நன்கு பயின்றிருந்தான். ஆதலின் மன்னன் திருமாவளவன் தன் நாட்டில் எங்கும் ஆடரங்குகளும், நாடகசாலைகளும், கலைக்கழகங்களும், பட்டி மண்டபங்களும் அமைத்திருந்தான். அவன் காலத்தில் இசைநுணுக்கம், இந்திரகாளீயம், பஞ்சபாரதீயம், பஞ்சமரபு, பெருங்குருகு பெருநாரை முதலிய இசைத்தமிழ் நூற்களையும், குணநூல், கூத்தநூல், சயந்தம், முறுவல், செயிற்றியம், பரத சேனாபதீயம், பரதம், மதிவாணனார் நாடகத்தமிழ் நூல் முதலான பல நாடகத்தமிழ் நூற்களையும், செவ்வனே பயின்றிருந்த தமிழ்ப் புலவர்கள் பல்

லோர் தமிழகத்தில் தலைசிறந்து விளங்கினர். பாவலர்களின் உடன்பிறப்பும், கல்விக்குப் பகையுமாகிய வறுமை என்னும் நோயை; 'வறுமைக்கு வறுமை வந்தது' என்னுமாறு ஓட்டித் தமிழ்ப் புலவர்களைக் காத்த பெருந்தகையும் தமிழகத்துப் பேரரசனுமான மன்னன் திருமாவளவனின் ஆட்சிக் காலத்தில் தமிழ்மொழி சீரும் சிறப்பும் பெற்று மிளிர்ந்தது.

திருமாவளவன் காலத்திற் பெண்களும் தமிழ்க் கல்வியிற் சிறந்து விளங்கினர். பெண் கல்வியைத் திருமாவளவனும் போற்றி வந்தான். அவன் காலத்தில், அரசன் மகள் ஆதிமந்தியும், வெள்ளிவீதியாரும், வெண்ணிக்குயத்தியாரும், குறமகள் இளவெயினியும், குறமகள் குறியெயினியும், காவற்பெண்டும், காக்கைப்பாடினியார் நச்செள்ளையாரும், ஒக்கூர் மாசாத்தியாரும், குன்றியாளும், கழார்க்கீரன் எயிற்றியாரும், நக்கண்ணையாரும், நன்னாகையாரும், காமக்கண்ணிப்பசலையாரும், பூங்கண்ணுத்திரையாரும், பொன்மணியாரும், பாரிமகளிரும், ஒளவையாரும் சிறந்து விளங்கினர். இதனாலேயே பண்டைக் காலத்தில் தமிழகத்துப் பெண்மணிகள் எத்துணைப் பெருஞ் சிறப்புடைக் கல்வியைப் பெற்றிருந்தனர் என்பது விளங்கும். மற்றும், இக்காலத்திற் பெண்கல்வியைப் பேணுதல் கடமை என்று கூறுவார்க்கு அது தமிழகத்திற்குப் புதுமையன்று என்பது நன்கு விளங்கும். தமிழ் மொழிக்கும், தமிழகத்திற்கும் வாய்ந்த பொற்காலம் என்று கூறத் தகுந்தது கடைஎழு வள்ளல் எழு



வரும் சிறக்க வாழ்ந்ததும், மன்னன் திருமாவளவன் சோழ நன்னாட்டிற்கு அரசனாக விருந்து ஆண்டதுமான நற்காலமே ஆகும்.

கல்வி, கேள்விகளிற் சிறந்த திருமாவளவன் நாட்டிற்குப் பல நன்மைகளைப் புரிந்தான் என்பது ஒருதலை. அவன் இவ்வுலகில் அடைந்து துய்க்கக்கூடிய இன்பங்கள் அனைத்தையும் அறிவால் நாடியறிந்து அனுபவித்தான். பின், அவன் மறுமை இன்பத்தையும் மறவாது துய்க்கவெண்ணினான். அவனுக்கு மனைவியர் பலர். அவர்களுடன் அவன் இல்லற நெறி கடவாது ஒழுகி வந்தான். யாகங்கள் பலவற்றையும் அருமறையுணர்ந்த அந்தணர் துணைகொண்டு செய்து மகிழ்ந்தான். அவன் வாழ்நாளில் கொடுத்த தானங்கள் மிகப் பல. அவன் வாழ்நாள் முழுவதும் நன்னெறியில் ஒழுகி இன்புற்றிருந்தான்.

காலன் மிகக் கொடியன். அரியணை யமர்ந்து ஆணை நடாத்தி அவனியாளும் அரசரேனும் அமைந்த நாள் உலந்தால் இறப்பது திண்ணமன்றோ? தமிழ் மொழிப் புலவோர் கண்ணீர் பெருக்கவும், தமிழகம் வருந்தவும், மன்னன் திருமாவளவன் அந்தகன் கையகப்பட்டான். அவன் இறந்தது குறித்து வருந்திக் கருங்குழலாதனார் என்னும் புலவர் புலம்பிப் பாடியுள்ளார். தமிழகம் அம்மன்னன் பிரிவாற்றாமைக்கு வருந்தியது. அவனுக்குப் பின், அவன் மகன் சோழன் நலங்கிள்ளி சோழ நாட்டிற்கு அரசனானான்.

# 12. திருமாவளவன் காலம், மதம், குணாதிசயங்கள்

காலம் — சோழர்தம் மரபில் மிகப் பழமை யானவனும், கீர்த்தி பெற்றவனும், சோழர் குலக் கொழுந்து என்று போற்றத் தக்கவனுமான மன்னன் திருமாவளவன் காலத்தை அறுதியிட்டுச் சொல்வது மிகவும் எளிதன்று. தேச சரித்திரத்தையும், புலவர்கள் சரிதங்களையும் வரன் முறையாகக் காலத்தோடு ஒழுங்குபட எழுதி வைக்கும் முறை பண்டைத் தமிழ் மக்களிடத்து இல்லை என்றே கூறலாம். எனினும் இக்காலத்தில் சிலா சாஸனப் பரிசோதகர்களின் துணையைக் கொண்டும், பழந்தமிழ் நூற்களிற் காணப்படும் அரும் பெருங் குறிப்புகளைக் கொண்டும் சற்றேறக்குறைய தமிழ் மன்னர்களின் காலமும், தமிழ்ப் புலவர் பெருமக்களின் காலமும் ஒருவாறு எழுதப் பட்டு வருகின்றன.

கரிகாலன் என்னும் திருமாவளவன், முதற் கரிகாலனாவான். கரிகாலன் என்னும் பெயரால் பலர் பின்னர் இருந்தனர். ஆதலின் இவனை முதற்கரிகாலன் என்றழைத்தனர். இவன் காலத்தை ஆராய்வோம். அரசகுடும்பத்தில் தோன்றி அருந்தவ ஒழுக்கம் பூண்டு மாசிலா மனத்துடன் தமிழகம் போற்றும் தகுதி வாய்ந்த பெரியார் இளங்கோவடிகள். அவர், தமிழகத்தில் நிகழ்ந்த உண்மைச் சரிதை ஒன்றை எழுதியுள்ளார். அது



'சிலப்பதிகாரம்' எனப்படும் சிறந்த காப்பியமாகும். அதனில் உண்மைநிகழ்ச்சிகளே கூறப்பட்டுள்ளன. அந்நூற்கு உரை எழுதியவர், ' கரிகாற்பெருவளத்தாற்கு அவன் அவை அரங்கேறிக் காட்டலை விரும்பி ' எனக் குறித்துள்ளதால், சிலப்பதிகாரக் கதை நிகழ்ந்த காலத்துக் கரிகாலன் இருந்திருக்க வேண்டும். இளங்கோவடிகளும் சேரன் செங்குட்டுவனும் நெடுஞ்சேரலாதன் மக்கள். நெடுஞ்சேரலாதன் மனைவி நற்சோணை. நற்சோணை கரிகாலன் மகள் ஆதலின் கரிகாலனது பெண்வயிற்றுப் பேரன் செங்குட்டுவன் செங்குட்டுவனும், இலங்கை முதலாம் கயவாகுவும் ஒரு காலத்தவர்கள். கயவாகு முதலாவான் காலம் கி. பி. 113 முதல் 125 வரை ஆகும். ஆதலின் சேரலாதன் காலம் கி. பி. 75 ஆகும். ஆதலின் கி. பி. முதலாம் நூற்றாண்டினன் திருமாவளவன் என்பார் சிலர். சிலர், திருமாவளவன் காலம் கி. மு. முதல் நூற்றாண்டினன் என்பர். ஒரு தமிழ்நூல் ஆராய்ச்சியாளர் கி. பி. 30 – 60 வரை என்பர். நுணுகி ஆராயுமிடத்துக் கடைச்சங்க காலத்தில் திருமாவளவன் இருந்திருத்தலினாலும் பட்டினப்பாலை என்னும் நூலை உருத்திரங்கண்ணனார் என்னும் புலவர் அவன்மீது பாடிப் பரிசில் பெற்றுள்ளதாலும், அவன் காலத்திலிருந்த தமிழ்ப் புலவர்களின் காலத்தை நுணுகி ஆராயுமிடத்தும் மன்னன் திருமாவளவன் கி. மு. முதல் நூற்றாண்டினன் என்பதே பொருத்த முடையதாகும்.

**மதம்:**—மன்னன் திருமாவளவன் காலத்திற்குச் சற்றேறக்குறைய இருநூறுண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் ஜைன, பௌத்த மதங்கள் பரவியிருந்தன. எனினும் தமிழகத்தில் சைவ மதம் சீர்பெற்றுத் துலங்கிற்று. வைணவமும் சைவத்தோடு தழைத்தோங்கியது. ஆரியர்களது வைதீக மதமும் சிறந்து விளங்கிற்று. அக்காலத்தில் தமிழகத்தில் மக்களும் மன்னர்களும் யாகங்கள் இயற்றுதலைக் கைக்கொண்டு ஒழுகி வந்தனர் என்பது ஒரு தலை. ஆரியமும் தமிழும் தமிழகத்திற் சிறந்து விளங்கின. எனினும் தமிழ் மக்களிற் பெரும் பகுதியோர் சைவரெனவே துணிந்து கூறிவிடலாம். மன்னன் திருமாவளவன் எல்லாச் சமயத்தோரையும் ஒப்ப நடத்தி வந்தான். அவனிடத்தில் மதத் துவேஷமும், சாதித் துவேஷமும் சிறிதும் காணப்படவில்லை. அந்தணர்களைக்கொண்டு யாகங்கள் பலவற்றை அவன் செய்துள்ளான். அவன் வைதீக மதத்தையும் அந்தணர்களையும் ஆதரித்து வந்தான். ஜைனப் பள்ளிகளுக்கும், பௌத்த விகாரங்களுக்கும், வைணவாலயங்களுக்கும், சிவன் கோயில்களுக்கும், அந்தணர்களுக்கும் அவன் செய்துள்ள நன்மைகள மிகப் பல. மன்னன் திருமாவளவன் காஞ்சியில் திருப்பணியியற்றியதையும் ஏகம்பவாணரை வழிபட்டமையையும் ஒரு பாசுரம் விதந்து கூறுகின்றது. ஆதலின் மதத்துவேஷமற்ற மன்னன் திருமாவளவன் சைவ மதத்தைக் கடைபிடித்தொழுகி வந்தனன் என்பது பலர் கொள்கை.



**குணாதிசயங்கள்:**— மன்னன் திருமாவளவன் ஊக்கமுடையவன்; கல்வியில் பெருவிருப்புடையவன்; பகைவரை யடக்கியாளும் விறலோன். தமிழ் மொழியையும் தமிழ்ப் புலவர்களையும் ஆதரிக்கும் பெருங்குணம் அவனிடத்தில் இயல்பாகப் பொருந்தியிருந்தது. அவன் நாட்டிற்கும், மக்களுக்கும் நன்மை புரிதலிலேயே கண்ணும் கருத்துமுடையோன். பெண்கல்வியைப் போற்றும் பெருந்தகைமை வாய்ந்தவன். நுண்ணிய பொருள் வளங் கண்டு மகிழும் தன்மையையும், கவிதைகளின் சிறப்பையும், புலவர்களின் பெருமையையும் உணரும் பெற்றி வாய்ந்தவன் திருமாவளவன். தாளாண்மையிற் சிறந்த வேளாண்மையைப் பேணி வளர்க்கும் பெருந்தகை அவனே திரைகடல்மீது பல கலம் செலுத்தி வாணிபம் பேணும் எண்ணமும், ஊக்கமும், உழைப்பும் உடையவன் திருமாவளவன். சிற்பம், ஓவியம், சங்கீதம், நாடகம் என்னும் அருங்கலைகளைப் போற்றி வளர்த்த புண்ணியன். தமிழை வளர்த்த கண்ணியன். பெருவளம் பெருக்கிய திருமாவளத்தான். ஒழுக்கமும், கல்வியும், தன்னுயிர்போல் மன்னுயிரைப் பாவிக்கும் தகைமையும் கொண்டு திகழ்ந்த ஒப்பற்ற சோழர்குலக் கொழுந்து.

**பொங்கும் மங்களம் எங்கும் தங்குக**

# அரும்பத அகராதி

### அ

அகம் - உள், மனம்
அகந்தை - இறுமாப்பு
அங்கை - உள்ளங்கை
அட்டு - சமைத்து
அணங்கு - தெய்வப் பெண்
அத்தகையது - அவ்வியல்புடையது
அமயம் - சமயம்
அமர் - போர்
அமராவதி - தேவநகரம்
அரதநபீடம் - பொன்மயமான ஆசனம
அரற்றல் - அழுதல்
அரியணை - சிங்காசனம்
அரியேறு - ஆண்சிங்கம்
அல்லல் - துன்பம்
அலமந்து - சுழன்று
அவலம் - துன்பம்
அவை - சபை
அழுக்காறு - பொறாமை
அழுங்கி - துன்பப்பட்டு
அளவளாவல் - கலந்துபேசல்
அளித்தல் - கொடுத்தல்
அற்றம் - சமயம்
அறநெறி - தருமவழி
அறியொணா - அறியமுடியாத
அறைதல் - சொல்லல்
அனுட்டித்து - கைக்கொண்டு
அக்ஷரம் - எழுத்து

### ஆ

ஆ - பசு
ஆக்கம் - செல்வம்
ஆதரவு - உதவி
ஆணை - கட்டளை
ஆவணவீதி - கடைவீதி
ஆற்றாது - எதிர்நிற்கமுடியாது

### இ

இடுக்கண் - துன்பம்
இடையூறு - தடை
இமையவர் - தேவர்
இரிந்து - பின்னிட்டு
இன்னல் - துன்பம்

### ஈ

ஈகை - கொடை
ஈடு - ஒப்பு
ஈர்த்து - இழுத்து

### உ

உசாவி - ஆராய்ந்து
உதித்து - தோன்றி
உந்தியது - தள்ளியது
உய்வழி - தப்பும்வழி
உரம் - வலி
உரு - உருவம்
உன்னி - நினைந்து

### ஊ

ஊக்கம் - முயற்சி
ஊழ்வினை - விதி

### எ

எக்கர் - மேடு
எத்துணையோ - எவ்வளவோ



எருத்தம் - பிடர்
எள்ளல் - இகழ்தல்
என்பு - எலும்பு

### ஏ

ஏரி - வாவி
ஏவலாளன் - சேவகன்
ஏற்றம் - துலா

### ஐ

ஐயம் - சந்தேகம்

### ஒ

ஒல்கி - தளர்ந்து

### ஓ

ஓம்பல் - பாதுகாத்தல்
ஓதை - சத்தம்
ஓடை - கால்வாய்
ஓகை - வெற்றிச்சத்தம்

### க

கடிது - விரைவாய்
கடுகி - விரைந்து
கணித்தல் - கணித்து அறிதல்
கதவம் - கதவு
கதுவாது - அகப்படாது
கயவர் - கீழோர்
கரவு - வஞ்சனை
கரந்து - மறைந்து
கரி - யானை
கருணை - இரக்கம்
கலம் - கப்பல்
கலுழும் - அழும்
கலை - கலைஞானம்
கல்மாஷபாதன் - கரிந்தகாலை உடையவன்
கவரப்பட்டு - பற்றப்பட்டு
கவின் - அழகு
கழனி - வயல்
களித்து - சந்தோஷித்து
களிறு - யானை

### கா

காமர் - அழகு
காரா - பசு
கால் - காற்று
காவதம் - கூப்பீடுதொலை
கானகம் - காடு

### கி

கிழமை - உரிமை

### கு

குடகு - மேற்கு
குருளை - குட்டி
குழுமி - கூடி
குன்றாவகை - குறையாவிதம்

### கூ

கூலம் - தானியம்
கூற்றூர் - யமனூர்

### கே

கேரளம் - மலையாளம்

### கை

கைவர - சித்தியாக

கொ

கொண்டல் - மேகம்

கோ

கோட்டம் - கோயில்
கோல்கோடாமை - செங்கோன்மை

சதி - தாளம்

சா

சாதனம் - உறுதி
சாம்புதல் - தளர்தல்
சால - மிக
சாலை - தெரு
சான்றோர் - பெரியோர்

சி

சிலாசாசனம் - கல்வெட்டு
சிறார் - குழந்தைகள்

சீ

சீயம் - சிங்கம்

சு

சுந்தரம் - அழகு

செ

செங்கதிர்ச்செல்வன் - சூரியன்
செண்டு - ஓர் ஆயுதம்
செவியறிவுறுத்தல் - அறிவு கூறல்

த

தரணி - பூமி
தரணிபன் - அரசன்
தலம் - பூமி
தழல் - நெருப்பு
தழுவி - அணைத்து

தி

திக்கற்றவர் - அநாதை
திரு - செல்வம்
திறம் - தன்மை
திறம்பல் - மாறுதல்

து

துணுக்குறுதல் - நடுக்குறுதல்
துரு - கறை
துலங்குதல் - விளங்குதல்
தூற்றி - பரப்பி

தே

தேக்கி - ஏப்பம்விட்டு

தொ

தொடையல் - மாலை
தொன்மை - பழமை

ந

நங்கை - பெண்
நசை - விருப்பம்
நடுநாயகம் - நடுவில்தலைமை (முதன்மை)
நணுகி - கிட்டி
நணுகுதல் - கிட்டுதல்
நவில்தல் - சொல்லுதல்
நன்மொழி - நல்வார்த்தை



நா

நாண் - நாணம்
நாளங்காடி - பகற்காலக்கடை
நானிலம் - பூமி

நி

நித்தியம் - தினப்பூசை
நிமித்திகன் - சோதிடன்

நீ

நீச்சம் - நீக்குதல்
நீத்தம் - தண்ணீர்

நு

நுணல் - தவளை

நை

நைதல் - வருந்துதல்
நைந்தனர் - வருந்தினர்
நைமித்திகம் - திருவிழா

ப

பண்டு - முன்னே
பண்டாரம் - பொக்கிஷம்
பஃறேர் - பலதேர் (பல்+தேர்)

பா

பாகம்படும் - இட்டும்
பாங்குற - நன்மையாக
பாசம் - அன்பு
பார்த்திபன் - அரசன்
பாவலர் - புலவர்

பி

பிணித்தல் - கட்டுதல்
பிரதிமை - உருவம்

பீ

பீடு - பெருமை

பு

புணை - தெப்பம்
புதர் - புற்று
புரோகிதர் - புரோகிதம் செய்பவர்
புலன் - அறிவு
புவி - பூமி
புழைக்கை - யானை (துவாரம் பொருந்திய கை)
புனல் - நீர்
புனிதம் - சுத்தம்

பை

பைந்தமிழ் - பசியதமிழ்

பொ

பொய்யாது - பொய்படாது
பொய்கை - வாவி
பொருநர் - சண்டையிடுவோர்; கோலம்புனைவோர்
பொல்லாங்கு - தீமை

போ

போற்றினும் - புகழினும்

ம

மகிதலம் - பூமி
மங்கலம் - சிறப்பு
மண்டி - நெருங்கி

மதனன் - மன்மதன்
மதியம் - சந்திரன்
மது - கள்
மதுகரம் - வண்டு
மரபு - முறை
மருங்கு - பக்கம்
மருத்துவர் - பரிகாரி
மல்கி - பெருகி
மலங்க - கலங்க
மலைதல் - சண்டையிடல்
மறம் - வலிமை
மன்றம் - சபை

மா

மா - விலங்கு
மாட்சி - சிறப்பு
மாண்பு - சிறப்பு
மாதுலன் - மாமன்
மாற்றலர் - பகைவர்

மி

மிகை - அதிகம்

மீ

மீக்கூறல் - புகழ்தல்

மு

முதுமை - பழமை; கிழம்
முதுமொழி - பழமொழி
முளரி - தாமரை
முறுவல் - சிரிப்பு

மூ

மூதறிஞர் - பழைய அறிவாளிகள்
மூதாட்டி - முதுமைவாய்ந்தவள்

மே

மேதக்க - சிறந்த

மை

மைந்தர் - புத்திரர்

மொ

மொய்ம்பு - வலி

வ

வசூலித்து - திரட்டி
வண்மை - கொடை
வணிகமக்கள் - வியாபாரிகள்
வதிதல் - தங்குதல்
வயவுநோய் - கர்ப்பநோய்
வயிறுவாய்த்திருத்தல் - கர்ப்பவதியாதல்
வரையாது - அளவுபடாது
வள்ளல் - கொடையாளி
வளப்பம் - செழிப்பு
வளவர் - சோழர்
வற்கடம் - வறுமை
வனிதை - பெண்
வாய்மொழி - உண்மை

வி

விஞ்சையர் - தேவர்களுள் ஒரு வகையினர் (வித்தியாதரர்)
விண்ணவர் விருந்து - இறத்தல்
விதிர்த்து - நடுங்கி
விப்பிரர் - பிராமணர்
விழைவு - விருப்பம்
விறல் - வலி

வெ

வெங் - முதுகு
வெற்பு - மலை

திருமகள் அழுத்தகம், சென்னை.

சுன்னாகம்
திருமகள் அழுத்தகம்